Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20

# ஈழநாடு

சுதந்திர வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, ஆடி 23-ஆம் நாள். (8-8-59) சனிக்கிழமை இதழ் 27.

உங்களுக்குத் தேவையான எல்லாவித
சாய்ப்புச் சாமான்களுக்கும்,
சூட்கேஸ், சப்பாத்து வகைகளுக்கும்

கணேசன் ஸ்ரோர்ஸ்

78, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.

# இந்தியாவுடன் இலங்கையை ஆண்டவனே பிணைத்துள்ளார்

## இதனைப் பீரங்கியோ துப்பாக்கியோ பிரிக்க முடியாது

### கள்ளக் குடியேற்றத்தின் மூலகாரணமென்ன? அதனை எப்படித் தடுப்பது?

### நாடற்றவருக்கு மனித நீதியும் பிரயாண உரிமையும் வழங்க வேண்டும்

— நமது அரசியல் நிருபர் —

**இந்தியா தாய்; இலங்கை சேய். தாய் மகள் வீடு வருவதும் மகள் தாய்வீட்டுக்குச் செல்லுவதும் இயற்கை. இந்த இயற்கை உறவு நெடுங் காலமாகவுண்டு. இதைப் பிரிக்க முயற்சிகள் பல செய்யப்படுகின்றன. இதனால் இரு தேச மக்களுக்கும் பெருந்துன்பம்: நன்மையில்லை.**

**சிறிய தீவிலுள்ள இலங்கை மக்கள், இந்தியாவுக்கும் வேறு நாடுகளுக்கும் சென்று தொழில் செய்ய முடியாமலும் தடுக்கப் படுகிறார்கள். அவர்கள் நிலை சிறைபட்டது போலுள்ளது. இத்தடைகளை நீக்க வழி செய்வதே பொது மக்களுக்கு நன்மையாகும்.**

ஆனால் துரதிருஷ்ட வசமாக இத்தடைகளைப் பலப்படுத்த யோசனைகள் நடைபெறுகின்றன. இது துரதிருஷ்டம். இருதேச அரசாங்கங்களும், சேர்ந்து கூடிப்பேசி, இருதேச மக்களின் நல்லுறவும் பலப்பட வழிவகைகள் செய்வதே விசேஷமும் அரசியல் ஞானமுமாகும்.

"கள்ளக்குடியேற்றம் என்பது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. விஜயன் காலத்துக்கும் முன்பிருந்து தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இந்தியாவும் இலங்கையும் ஆண்டவனால் பிணைக்கப்பட்டுள்ளன. எந்தப் பீரங்கியோ, துப்பாக்கியோ, முப்படைகளுமோ எந்த மனிதனோ இதைப் பிரித்துவிட முடியாது".

என்றிவ்வாறு கள்ளக் குடியேற்றத்தைத் தடுக்கக் காரைநகரில் முப்படைத் தளம் அமைத்து, கடும் நடவடிக்கை எடுக்கும் யோசனைபற்றி கோட்டையில் ஒரு தமிழ்த் தலைவர் கூறினார்.

"பொதுத்தேர்தல் நெருங்க நெருங்க கள்ளக் குடியேற்றக் கூக்குரல் எழுவது இலங்கை அரசியலில் வழக்கமாகிவிட்டது. ஆதலினால் இப்போது இந்தக் கூச்சல் எழுந்துள்ளதில் வியப்பு ஒன்றுமில்லை என்றார் அவர். ஆனால் சென்ற ஆண்டில் கள்ளத்தனமாய் இந்தியாவிலிருந்து வந்தவர்களில் 600 பேர் கைதியாகியிருக்க, இவ்வாண்டில் சென்ற ஜூலை மாதம் வரை மட்டும் 1400 பேர் கைதியாகியுள்ளதாயும் பிடிபடாதவர்கள் இதைவிட அதிகமிருக்குமென்றும், இங்கு வேலையில்லாக் கஷ்டத்தைத் தீர்க்க, இதுபற்றிக் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளதாகவும், ஒரு அரசாங்க அதிகாரியை விசாரித்தபோது தெரிவித்தார்.

இதை அந்தத் தமிழ்த் தலைவருக்குக் கூறியதும் அவர் சொன்னதாவது:

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் மக்கள் யாரும் தாராளமாகப் பிரயாணம் செய்யும் உரிமை இருநாடுகளும் விடுதலை அடையும்வரை இருந்து வந்தது. பெரிய சேனநாயக்கா, குடியேற்றக்கட்டுப்பாடு சட்டம் கொணர்ந்து டி. ஆர். பி. முறையைப் புகுத்தியபோது, இங்கு ஏற்கெனவே இருந்து வரும் இந்தியர் யாரும் தாராளமாக இருந்து தொழில் நடத்தி வரலாமென்றும் அதில் தடை எதுவும் இராதென்றும் முதலில் உறுதி கூறினர். பின்னர் இந்த வாக்குறுதி காற்றில் விடப்பட்டு, படிப்படியாகப் பலவித கட்டுப்பாடுகள் ஏற்பட்டன. இங்குள்ள இந்தியரில் பெரும்பாலோரும் இந்தியாவுக்குப் பிரயாணம் செய்ய முடியாதபடி தடுக்கப்பட்டிருக்கிறார்கள். அங்குள்ள தாய் தந்தையர், நெருங்கின உறவினர் இவர்களைப் பார்க்க வேண்டுமென்றாலும் முடியாது. இரு அரசாங்க கெடுபிடிகளும் 10 லட்சம் மக்களை இத்தீவில் சிறைப்படுத்தி வைத்துவிட்டன.

என்றாலும் இயற்கை காரணங்களால், இக்கெடுபிடிகளை

(9-ம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் மொழிக்கொள்கை ஆபிரிக்காவிலும் பார்க்க அநாகரிகமானது

### கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபரின் கண்டனம்

யாழ்ப்பாணம்.

"சம அந்தஸ்துதான் எல்லாப் பிரச்சினைகளுக்கும் சஞ்சீவி என்ற கருத்தை நான் ஏற்கவில்லை. ஆனாலும், ஒரு நாடு அதன் மக்கள் எல்லோருடைய ஒத்துழைப்பினாலும் முன்னேறவேண்டுமானால், அந்நாட்டிலுள்ள சிறுபான்மை மக்களுக்குரிய உரிமைகளை அது அளிக்கவேண்டும். தமிழ் மொழிக்கு உத்தியோக அந்தஸ்து கொடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும்".

இவ்வாறு கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. எஸ். ஏச். பேரின்பநாயகம் உரும்பராய் இந்துக்கல்லூரி ஆசிரியர் கழகக் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

"சம அந்தஸ்துக் கொள்கையில் நாம் ருஷியாவில் இருந்து வரும் முறையைக் கையாள வேண்டும். அங்கு சிறுபான்மையினரின் மொழிகளுக்குத்தக்க அந்தஸ்து அளிக்கப்பட்டு வருகிறது" என்று கூறிய திரு. பேரின்பநாயகம் இலங்கை அரசாங்கம் கைக்கொள்ளும் மொழிக் கொள்கையானது தென் ஆபிரிக்காவில் கையாளப்படும் மொழிக்கொள்கையிலும் மிகக் கேவலமானது எனக் கண்டித்தார்,

ஒரு ரூபாவுக்கு மிகுதியான மைல்கள்




BRIDGESTONE TIRES

பிரிட்ஜ்ஸ்டோன் டையர்கள்

*Distributors:*

TUCKERS AUTODROME

ஏகவினியோகஸ்தர்கள் :

ஓட்டோஸ் லிமிடெட்

யாழ்ப்பாணம்

போன்: 496 தந்தி: "ஓட்டோஸ்"

## கொழும்பில் ரூ. 2லட்சத்து 20ஆயிரம் செலவில் நவீன இந்து ஸ்தாபனம்

### 187 பேர் அடங்கிய குஜராத்தி சமூகத்தின் பெரிய நன்கொடை

— நமது கொழும்பு நிருபர் —

கொழும்பு.

சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று கொழும்பிலுள்ள இந்து சமூகத்தார் பெருமை கொள்ளக்கூடிய புதியதோர் ஸ்தாபனத்தின் திறப்புவிழா நடைபெற்றது.

மேட்டுத்தெருவில் விவேகானந்த சபைக்குப் பக்கத்திலே இலங்கையிலுள்ள இந்து குஜராத்தி சமூகத்தினர், இரண்டு லட்சத்து 20 ஆயிரம் செலவில் கட்டியுள்ள சமூகநல ஸ்தாபனத்தை செனட்சபைத் தலைவர் சேர் ஸிரில் டி சொய்ஸா திறந்து வைத்தார். இச்சமூகத்தாரின் பொதுநல சேவையையும், கட்டடம் நவீன வசதிகளுடனே மிக வாய்ப்பாக அமைந்துள்ளதையு, இலங்கையின் பொது வாழ்விலே இச்சமூகத்திற் கலந்து நற்பணி செய்வதையும் சேர்ஸிரில் பெரிதும் பாராட்டினர்.

இலங்கையிலேயே மொத்தம் 35 இந்து குஜராத்தி குடும்பங்கள்தான் உள்ளன. அவர்களது மொத்த எண்ணிக்கை 187 தான். இந்தியா, பாகிஸ்தான் பிரஜா உரிமைச் சட்டம் நிறைவேறியபோது, இங்குள்ள குஜராத்திகள் என்ன செய்வதென்று சந்தேகித்தனர். இலங்கையில் அவர்களுக்கு உரித்துகள் பெரிதும் உண்டு. இதே சமயம் தங்கள் தாய் நாட்டுடன் சமூக கலாச்சார உறவுகள் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தையும் கண்டனர். பிரஜா உரிமையை மாற்றிக் கொள்வதென்பது, ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டுக்குக் குடிமாறுவதுபோல் அவ்வளவு சுலபமல்லவெனினும் காலதேச வர்த்தமானங்களை அனுசரித்து, இலங்கை பிரஜைகளாகி, எங்கள் சமய கலாசார பாரம்பரிய செல்வத்தை பாதுகாத்துக்கொள்ள இந்து கலா கேந்திரத்தை ஆரம்பித்துள்ளோம் என்று நிர்வாகசபைத் தலைவர் ஸ்ரீ. ஸி, பி. மோடி தெரிவித்தார்.

(9-ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு

பாரதப் பிரயாண சிறப்பு மலர்

இந்திய சுதந்திர தினமாகிய ஒகஸ்ட் 15 ஆம் திகதி வெளிவரும் 'ஈழநாடு' இதழுடன் 'இந்தியா பிரயாணச் சிறப்பு மலர்' பல பிரயாணக் கட்டுரைகளுடனும் படங்களுடனும் வெளி வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

32 பக்கங்களடங்கிய 15-8-59 'ஈழநாடு' சிறப்பு மலரின் விலை வழக்கம்போல் 20 சதம் தான்.

# வரி விளம்பரம்

### அறிவித்தல்

புற்று நோயைத் தமிழ் மருந்தால் தடையின்றி மாற்றலாம். உலகினிலே கொடிய ரோகம் புற்று நோய் என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளும் உண்மை. இந்நோய் சத்திரசிகிச்சை, ஒளி சிகிச்சை மூலமே குணப்படலாமே தவிர தமிழ் மருந்தினலல்ல என்ற அபிப்பிராயம் இனி நிலவ இடமில்லை. மீட்க முடியாதெனக் கைவிடப்பட்ட அநேகர் **யோகீஸ்வர ரசம்** என்ற பெயருடைய தமிழ்மருந்தினல் குணமடைந்துள்ளனர். இம்மருந்திற்கு அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. புற்று நோயைப் பற்றி என்னுடன் ஆலோசியுங்கள்.

**பொ. செல்லையா**
ஆயுள்வேத வைத்தியர்
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

### அறிவித்தல்

தற்பொழுது எல்லோரையும் ஆதரிப்பதற்காக மாதாந்தம் ரூபா 5-, 10-, 15-, 20- முதலிய கட்டணங்களை ஏற்றுக் கொள்கிறோம். ஊழியர்கள் விண்ணப்பிக்கவும்.

**ஸ்ரீ லங்கா**
**கஷ்டநிவாரண சங்கம்**
ஆபரண மாளிகை பில்டிங்
76/3,78/1, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

தரத்தில் சிறந்தது - **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

---

உடைகள் வெண்மையாக வேண்டுமானல் **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

---

அதிக நுரை தந்து உடைகளை விரைவில் வெண்மையாக்குவது **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

---

உங்களுக்குத் தேவையான எல்லாவித சாய்ப்புச் சாமான்களுக்கும் **M. A. டோசாஜி அன் கோ.,** ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

எல்லாவித பலசரக்குச் சாமான்களுக்கும், குழந்தைப் பால் உணவுகளுக்கும் ஞாபகமிருக்கட்டும் **M. A. டோசாஜி அன் கோ.,** ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

---

உங்களுக்குச் சில்லறையாகவும், மொத்தமாகவும் சாய்ப்புச் சாமான்களோ அல்லது பலசரக்குச் சாமான்களோ வேண்டுமானல் **M. A. டோசாஜி அன் கோ.,** ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

## குகன் அச்சகம்

**தெல்லிப்பழை.**

**8-7-59 இல்**
ஆரம்பிக்கப்பட்டது.

சகல விதமான அச்சுவேலைகளும் சிறந்த முறையில் குறிக்கப்பட்ட தினத்தில் செய்து கொடுக்கப்படும்.

பூண்டுலோயாவிலிருந்து வெளிவந்த
**“வெற்றிமணி”**
ஆவணி தொடக்கம் எங்கள் அச்சகத்திலிருந்து வெளிவரும்.

தனிப்பிரதி: **20 சதம்**
வருட சந்தா: **ரூபா 2-50**


## ஈழத்தின் தாகூர் சோமசுந்தரனர் நினைவு விழா

வெள்ளவத்தை சைவ மங்கையர்கழக மண்டபத்திற் சங்கத்தலைவர் வித்துவான் வ. மு. கனகசுந்தரம் தலைமையில் சென்றவாரம் நடைபெற்ற சோமசுந்தரப் புலவர் நினைவு விழாவில் சங்கச் செயலாளர் திரு. சி. சின்னத்தம்பி பேசும்போது குறிப்பிட்டதாவது:

ஈழநாடும் தமிழ் உலகமும் போற்றிய நாவலரின் பின், பல புலவர்கள் தோன்றினர்கள். தமிழ்த் தொண்டுபுரிந்தார்கள். அத் தொண்டினைத் தமிழ்கூறும் நல்லுலகம் ஏற்றது. ஆனல், நாளடைவில் அவர்தம் பெருமைகளை யாம் போற்றுவது குறைவாகக் காணப்படுகின்றது. தமிழ்ப் பெரியார்களின் தமிழ் மொழிச் சேவைகளை இப்படியான நினைவு விழாக்களில் எடுத்தியம்பும்போதும், கேட்கும் போதும் பெருமை அடைகிறோம். அவர்கள் வசனவடிவமாக, செய்யுள்வடிவமாக, நூல் வடிவமாகத் தந்த அரும் பெரும் பொக்கிஷங்களை நினைக்கிறோம். அப் பொக்கிஷங்களை நினைக்கும்போதும், படிக்கும் போதும் நம் தமிழின் சிறப்பை உணருகின்றோம்.

வித்துவான் க. முருகேசு பேசும்போது குறிப்பிட்டதாவது: சோமசுந்தரப் புலவரினதும் தாகூரினதும் தோற்றப் பொருத்தமும் கவிபாடும் பண்பும் ஒன்ருக அமையக் காணக் கிடக்கின்றது. இதனலே தங்கத் தாத்தாவை ஈழத்துத் தாகூர் என்றும் கூறலாம். ஈழத்துப் புலவர்களிடம் இயல்பாக அமைந்திருந்த சைவசித்தாந்த அறிவு, இலக்கணத் தெளிவு, செய்யுளியற்றும் திறன், தமிழுக்கே தம்மை அர்ப்பணிக்கும் வாழ்க்கை என்பன நம் தங்கத் தாத்தாவிடமுங் காணப்பட்டன. புலவர் அவர்களின் கவிதைமரபு வழிக் கவிதை யென்றும் குழந்தைக் கவிதையென்றும் இரு வேறு பிரிவுகளையுடைய தென்ருர்.

திரு. கூ. பூரணனந்தா செல்வி ஆனந்தேஸ்வரி-சுப்பிரமணியம், வித்துவான் பொன்னம்பலம், ஆகியோர் தங்கத் தாத்தாவின் பாடல்களிலுள்ள நயங்களை எடுத்துக் கூறினர். சங்கீத வித்துவான் பரம் தில்லைராசாவின், இன்னிசைவிருந்தும் நடைபெற்றது. அதில் தங்கத் தாத்தாவின் பல பாடல்கள் முக்கிய இடம் பெற்றிருந்தன.

## கொழும்பு மாதகல் சங்கம் பத்தாவது ஆண்டு நிறைவு விழா

கொழும்பு—மாதகல் சங்கத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு விழா சமீபத்தில் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்றது. விழாவிற்குதிரு.எஸ்.ஆர்.பீற்றர் தலைமை வகித்தார்.

“இன்றைய சூழ் நிலையில் நாம் ஏதாவது தொழிற்துறையில் ஈடுபட்டு நம் பிரதேசத்தின்பொருளாதாரத்தை வளர்க்க முற்படாவிட்டால் எதிர் காலத்தில் நம்மினத்திற்கு விமோசனம் இல்லை. எனவே, கிராம முன்னேற்றத்திற்காக உழைத்து வரும் இத்தகைய சங்கங்கள் இன்றைய இளைஞர்களை உற்சாக மூட்டி இவ்வழியில் திருப்புவதற்கு முயன்று வரவேண்டும். எனத் திரு. எஸ். குமாரசாமி கூறினர்.

வித்துவான் என். எம். ஏ. வேதநாயகமும், திரு. ஏ. அமிர்தானந்தமும் பேசுகையில் சமுதாய வளர்ச்சிக்காக அனைவரும் உழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். திருவாளர்கள் எஸ். நடராசா, வி. எவ். பாலசிங்கம், இ. அகஸ்தின், எஸ். ஸ்ரீராசசிங்கம், எம். பல்தசார் ஆகியோரும் பேசினர். புது வருட உத்தியோகஸ்தர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

---

## பாவற்குளக் குடியேற்றம்

### ஒற்றுமை வளர்க்கும் திட்டம்

வவனியா,

இலங்கையில் சென்ற மே, ஜூன் மாதங்களில் வகுப்புவாதக் கலவரங்கள் நடைபெற்றபோது, பாவற்குளக் குடியேற்றத் திட்டம் தமிழர்களுக்கு மாருக அமைக்கப்பட்ட ஒரு திட்டமெனத் தமிழர் பலர் பேசிக்கொண்டனர். ஆனல், இன்ருே, அரசியல்வாதிகளின் பாவைகளாக ஆடிய சிங்கள மக்கள் பலர், ஒற்றுமையின் மகத்துவத்தை நன்குணர்ந்ததன் பயனுகவோ, என்னவோ, அங்குள்ள இரு இனத்தவரும் சமத்துவம், சகோதரத்துவம், ஒற்றுமை முதலிய பண்புகளுடன் வாழ்ந்து வருகின்றனர். ஆனல், அரசாங்கமோ தமிழருக்கு அநீதி இழைத்துவருகின்றது. சமீபத்தில் ஏறத்தாழ நூறு தமிழ்க் குடும்பங்களை வெளியேறுமாறு அரசினர் கட்டளையிட்டனர். இவ்விஷயம்பற்றித் தக்க நடவடிக்கை எடுப்பதற்காக, வவனியா பட்டினசங்கத் தலைவர் திரு. எஸ். சுப்பிரமணியம், கோப்பாய் பிரதிநிதி திரு. கு. வன்னியசிங்கத்தை நாடினர். பட்டினசபைத் தலைவருடன் பாவற்குளம் வந்துசேர்ந்த திரு. வன்னியசிங்கத்தின் முயற்சியால், வெளியேற்றப்படவிருந்த நூறு குடும்பங்களும் காப்பாற்றப்பட்டன. பாவற்குள குடியேற்றவாசிகளின் பல குறைகளையும் திரு. வன்னியசிங்கம் நில அபிவிருத்தி உத்தியோகஸ்தருக்கு எடுத்துக்கூறி, அவற்றை நிவர்த்தி செய்யும்படி கேட்டுக்கொண்டார். சிங்கள மக்களும் கோப்பாய் பிரதிநிதியை வரவேற்று உபசரித்தனர். அவரிடம் தமது குறைகளையும் எடுத்தியம்பினர். அவற்றையெல்லாம் தாம் நிவர்த்தி செய்ய முயற்சிகளெடுப்பதாக அவர் அவர்களுக்குக் கூறினர். (ந. நி:)

## தமிழ்ப் பல்கலைக் கழகம் 1961இல் ஆரம்பமாகும்

### குழுவினர் செய்துள்ள தீர்மானங்கள்

தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கக் குழுவினரின் கூட்டம் ஒன்று அண்மையில் கொழும்பு நகரில் நடைபெற்றது. பல்கலைக் கழகக் கட்டட அமைப்புக் குழு கொண்டுவந்த பின்வரும் தீர்மானங்களை, பொதுக்குழு ஏற்றுக்கொண்டது. அத்தீர்மானங்கள் வருமாறு :

1. 20 லட்ச ரூபாய் செலவில் கட்டப்படவிருக்கும் விஞ்ஞானக் கட்டடத்தை உடனடியாகக் கட்டிமுடித்தல்.

2. 1961-ம் ஆண்டு ஜூன் மாதத்துக்கிடையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு, முதல்வருட மாணவர்களைப் பொதுவியல், விஞ்ஞானம், பொருளாதாரம் முதலிய வகுப்புக்களுக்கு அனுமதித்தல்.

3. 1962 ஆம் ஆண்டில் பொறியியல் (எஞ்சினியரிங்) வகுப்புகள் செயலாற்றத் தொடங்கும். பூத, பௌதிகப் பாடங்கள் போதிக்கப்படும். இரண்டாவது ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் 1963 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படும்.

4. கட்டட அமைப்பு உருவாகும் முறை :

முதலாவது கட்டம் :- விஞ்ஞானக்கூடம்.

இரண்டாவது கட்டம் :- பொறியியற்கூடம்.

மூன்ருவது கட்டம் :- பொதுவியற்கூடம்.

நாலாவது கட்டம் :- விஞ்ஞான, தொழிற் துறைக்கூடம்.

ஐந்தாவது கட்டம் :- நூல்நிலையம், பொது மண்டபம், நிர்வாகக் கட்டடங்கள் முதலியன.

மற்றும் சில தீர்மானங்களும் இக்கூட்டத்தில் நிறைவேறின. தமிழ்பேசும் மாகாணங்களில் உள்ள பள்ளிக்கூட மாணவர்களிடையே பல்கலைக் கழகம் சம்பந்தமான, எழுத்து, பேச்சுப் போட்டிகள் நடாத்தவும், இம்மாத நடுப்பகுதியிலிருந்து இம்மாகாணங்களில் தீவிர பிரசாரம் செய்யவும் பொதுக்குழு தீர்மானித்தது.

யாழ்ப்பாணம் பொது ஆஸ்பத்திரியை ஒரு போதன ஆஸ்பத்திரியாக மாற்றியமைப்பதை முன்னிட்டுச் சுகாதார மந்திரியைப் பேட்டிகாணப் பேராசிரியர்கள் திரு. ஏ. டபிள்யூ. மயில்வாகனம், திரு. பி. கே. சண்முகம், திரு. ஏ. ஹூவரும், திரு. எம். திருச்செல்வமும் அடங்கிய ஓர் குழுவைச் சபையினர் நியமித்தனர்.

---

## கீரிமலையில் புதிய மின்சார நிலையம்

### காங்கேசன்துறை எம். பி. திறந்துவைத்தார்

கீரிமலையில் ஓகஸ்ட் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று ஓர் புதிய மின்சார உபநிலையம் திறக்கப்பட்டது. இத் திறப்புவிழாவிற் கலந்து கொண்ட காங்கேசன்துறை எம்.பி.யான திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் மின்சார இயந்திரத்தை முடுக்கி, அந்நிலையத்தைத் திறந்துவைத்தார். கோப்பாய்ப் பிரதிநிதி திரு. கு. வன்னியசிங்கம் இவ்விழாவிற் பேசுகையில், கீரிமலைப் பகுதியில் உள்ள மக்களை மின்சாரத்தைப் பலதுறைகளிலும் பிரயோசனப் படுத்தும்படி வேண்டிக் கொண்டார். திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கீரிமலைக்கு மின்சாரம் வந்தது பற்றி, அத்தொகுதியின் பிரதிநிதியென்ற முறையில் பெரும் மகிழ்ச்சியடைவதாகக் கூறினர்.

## கரை சேர வேண்டியவர்கள் கடலில் வீழ்ந்தனர்

### பண்ணை இயந்திரப் படகின் சீர்கெட்ட நிலை

அண்மையில் ஊர்காவற்றுறையிலும் பண்ணைத்துறையிலும் இரு விபத்துக்கள் நடந்தன. முதலாவது விபத்தில் இருவர் உயிரிழந்தனர். இரண்டாவது விபத்து சென்ற வாரம் பண்ணையில் நடைபெற்றது. 50 பேரைக் கொண்ட படகு கவிழ்ந்தது. ஆனல், தெய்வாதீனமாக ஒருவரும் இறக்கவில்லை. காயங்களும், அதிர்ச்சியுமே பிரயாணிகளுக்கு ஏற்பட்டன.

பண்ணை இயந்திரப்படகு சேவைபற்றி, ஊர்காவற்றுறைப்பிரயாணிகள் சங்கத்தின் தலைவர் திரு. பி. பாக்கியநாதன், யாழ்ப்பாணம் மாவட்ட அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தாவிற்கு ஆட்சேபனைக் கடிதமொன்று எழுதியுள்ளார். அக் கடிதத்தில் அவர் மோட்டார் சக்தியினல் இயங்கும் படகு ஒன்பது மாதங்களுக்கு முன்னர் நிறுவப்பட்டதென்றும், இந்த ஒன்பது மாதங்களில் ஏறத்தாழ ஆறு மாதங்களுக்கு இப் படகு பழுதுபட்டுக் கிடந்திருக்கின்றதெனவும் குறிப்பிட்டுள்ளார். இதுபற்றிப் பொதுப் பணிப்பகுதி ஒருவித அக்கறையும் காட்டுவதாகத் தெரியவில்லை எனவும் அவர் புகார் செய்துள்ளார். படகு இப்பொழுது ஒரு பிரயாணத்திற்கு எடுக்கும் நேர அளவை அரைவாசிக்குமேல் குறைக்கலாமெனவும் அவர் தெரிவித்துள்ளார். படகுக்குள் பிரயாணிகள் ஒழுங்கற்ற முறையில் குதித்து ஏறிவிடுகின்றனரென்றும், இந்தத் தொல்லையைத் தவிர்க்க வரிசையாக நிற்கும் (கியூ) முறையைப் பண்ணையில் கையாள வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.


யாழ்ப்பாணத்திற்கே இழுக்குத் தேடித்தரும் வகையில் அமைந்திருக்கும் இப் படகு சேவைகளைச் சீர்திருத்தியமைக்கச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன செய்வரெனப் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். இவ்விஷயத்தில் தாமதித்தால், அது பலரின் உயிருக்கே ஆபத்து விளைவிக்கவும் கூடும்.

உடனடியாகச் சீர்திருத்தியமைத்தல் அதிகாரிகளின் அவசிய கடமையாகும்.

---

## மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்

இம்முறை மாவிட்டபுரக் கந்தசுவாமி கோவில் தேர்த் திருவிழாவின்போதும், தீர்த்தத் திருவிழாவின்போதும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமிதரிசனம் செய்தனர். கீரிமலையில் புனித நீராடுவதற்குத் திங்கட்கிழமை இரவே பக்தகோடிகள் திரண்டிருந்த காட்சி குறிப்பிடத்தக்கது. சுகாதார ஒழுங்குகளும், மற்றும் பொதுவசதிகளும் நல்லமுறையில் அமைந்திருந்தன.



லண்டன் நகரின் கட்டட அமைப்பு

20 கோடிப் பவுண் செலவில் லண்டன் நகரின் ஒரு பகுதியில் நிறுவப்படவிருக்கும் கட்டட அமைப்பின் ஒரு மாதிரித்தோற்றம்.

இயற்கையாகவே உலகெங்கும் இந்த நூற்ருண்டில் அரசியல் கொந்தளிப்புக்கள் தொடர்ச்சியாக ஏற்பட்ட வண்ணமிருக்கின்றன. அதற்குக் காரணம் பொதுவாக மக்களிடையே உதித்துள்ள அரசியல் விழிப்புணர்ச்சியேயாகும்.

# தனிமனிதனும் அரசியலும் உலகிடை உதித்துள்ள விழிப்புணர்ச்சி

— கலைநாதன் —

சரித்திரம் இதற்குமுன் காணுத எண்ணற்ற புதுமைகளைத் தோற்றுவித்த பெருமை இந்த நூற்ருண்டிற்கு உண்டு. அறிவியல் ஆராய்ச்சியும் இயந்திரப் பெருக்கமும் உலக வாழ்வில் மகத்தான புரட்சியை ஏற்படுத்தி விட்டன. அதனுல் மனிதனுடைய புறவாழ்வு விஷவேகத்தில் மாறிவருவதோடு அவன் ஒருவகையான நிலையற்ற தன்மையையும் அவ்வப்போது அனுபவிக்க வேண்டியிருக்கிறது. இந்த வகையில் தனி மனிதனுடைய புறவாழ்வைப் பாதிப்பனவற்றுள் அரசியல் முக்கியமான தொன்ருகும்.

## ஆதிக்கம் பெறும் அரசியல்

ஒரு காலத்தில் மனிதனுடைய பலதுறை ஈடுபாடுகளில் ஒன்ருகமட்டுமே அரசியல் விளங்கியது. தனிமனிதன் தன்னுடைய விருப்பத்திற்கிணங்க அதனை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. எந்தவித கட்டுப்பாடுமின்றி அரசியலில் ஈடுபட்டு உழைக்கவோ அல்லது தனித்து வாழவோ கூடியதாக இருந்த காலமொன்றுண்டு. அரசியலின் அகரவரிசையே என்னவென்று விளங்காமல் வாழ்ந்த இலட்சக்கணக்கான மக்களை நாம் அறிவோம். "இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன" என்று பழமொழியாக நம்மிடையே வழங்கிவரும் கருத்து இதனை நன்கு வலியுறுத்துகிறது.

ஆனல் இந்த நூற்ருண்டில், அதிலும் கடந்த பத்து ஆண்டுகளில் இக்கருத்து இருந்த இடம் தெரியாமல் அடிபட்டுப் போய்விட்டது. மனிதனுடைய வாழ்வில் அரசியல் இன்று கட்டாயமான தொன்ருகி விட்டது. விரும்பினுலும் விரும்பாவிட்டாலும் அவன் தன்னுடைய நாட்டு அரசியல் நடவடிக்கைகளில் பங்கு கொண்டே ஆக வேண்டும். அந்த அளவுக்கு அரசியல் நமது காலத்தில் ஆதிக்கம் பெற்றுவிட்டது!

## மதமும் அரசியலும்

மனிதனுடைய வாழ்வில் அரசியல் இன்று பெற்றுவிட்ட ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் பார்க்கும்போது பண்டைக் காலத்தில் மதம் இருந்த நிலைதான் நினைவுக்கு வருகிறது. அநேகமாக எல்லா நாகரிக இனத்தவரிடையேயும் மதம் பண்டைக்காலத்தில் அபரிமிதமான செல்வாக்கைப் பெற்றிருந்தது உண்மை. மதமின்றி வாழ்வில்லை என்ற நிலைகூட இருந்ததைக் காண முடியும். சமுதாயம் சமயக்கோட்பாட்டின்படி அமைக்கப்பட்டதும் சமயத் தலைவர்கள் மனிதனுடைய புற—அக வாழ்வில் ஆதிக்கம் பெற்றதும் மறுக்க முடியாத உண்மைகளாகும்.

மதத்தின் பெயரைச்சொல்லி சாம்ராஜ்யங்கள் அமைத்ததையும், அங்ஙனமே மதத்தின் பெயரால் எண்ணற்ற மக்களைக் கொன்று குவித்து மறப்போர் புரிந்ததையும் சரித்திரம் கூறுகிறது. இங்ஙனம் ஒப்பற்ற உயர்நிலையிலிருந்த மதம் அறிவியலின் வளர்ச்சி காரணமாகக் கீழே தள்ளிவிழுத்தப் பட்டுவிட்டது. அறிவாராய்ச்சிக்குப் புறம்பான போக்குடைய மதங்களுக்கு எதிராக ஒருபுறம் பிரசாரம் நடக்கிறது; மறுபுறம் அவசியம் வேண்டப்படாத ஒருபொருளாக அது ஒதுக்கப்பட்டுவருகிறது. அதனுல் மனிதனுடைய வாழ்வில் அன்று மதமிருந்த இடத்தில் இன்று அரசியல் புகுந்துவிட்டது. அரசியல் இன்று மக்களுக்கு ஒருவகை மதமாகி உள்ளது. சமுதாயத்தில் வாழும் ஒருவன் அரசியலை விட்டு ஒதுங்கி வாழ முடியாத அளவுக்கு அது அவனுடைய வாழ்வில் பின்னிப் பிணைந்துவிட்டது.

## பொருளாதாரமும் அரசியலும்

இதன் காரணத்தை ஆராய்ந்தால், நாகரிக வளர்ச்சியினுல் ஏற்பட்டுள்ள விழிப்புடன் வேறென்றும் தெரியவரும். அதுவே இந்த நூற்ருண்டில் தோன்றியுள்ள உலக பொருளாதார சிக்கல். அறிவுலகு படைத்த விஞ்ஞான சாதனங்கள், போக்கு வரத்து வாகனங்கள், உலக வாணிகம், சர்வதேசப் பொருளாதார—அரசியல்—கலாச்சார அமைப்புக்கள் ஆகியவற்றினுல் சரித்திரம் இதற்குமுன் கண்டிராத புதிய சமுதாயம் தோன்றியிருக்கிறது.

இப்புதிய அமைப்பினுல் ஏற்படும் சகல பிரச்சினைகளுக்கும், நேரடியாகவோ மறைமுகமாகவோ, இருப்பது உலக பொருளாதாரச் சிக்கலேயாகும். 'எனது கிராமம், எனது பட்டினம், எனது நாடு, என்று தனித்து வாழ முடிவதில்லை. விரும்பினுலும் விரும்பாவிட்டாலும் இன்று ஒருவன் இத்தகைய குறுகிய மனப்பான்மையை விட்டொழிக்க வேண்டி இருக்கிறது. ஊர், நாடு என எல்லை வகுத்துக் கொண்டு கிணற்றுள் தவளையாக வாழ்ந்த காலம் மலையேறி விட்டது. உலகமனைத்தையும் ஒரு நாடாகக் கருதப்பட வேண்டியதன் இன்றியமையாமையினை பொருளாதார அடிப்படையில் காணமுடிகிறது.

சூயஸ் கால்வாயில் அரசியல் கொந்தளிப்பினுல் கப்பல் போக்கு வரத்து சிலநாள் தடைப்பட்டால் நமது நாட்டில் கிராமத்து மூலையில் வியாபாரம் செய்யும் கடைக்காரர் குடுமியைத் தட்டிவிட்டுக் கொண்டு, 'கப்பல் வரவில்லை; கபூர்ப்ரம் விலை ஏறிவிட்டது' என்று கூறுகின்ருர். பட்டினத்தில் எங்கோ எதற்கோ சத்தியாக்கிரகமென்ருல் ஊர் நடுவேயிருக்கும் தொழில் முதலாளி 'சரக்கு வேண்டாம்; தொழிற்சாலையை மூடு' என உத்தரவு விடுகிருர். துறைமுகத்தில் இரு தொழிற் சங்கங்கள் மோதிக்கொண்டு வேலை நடக்கவில்லையென்ருல் மலைநாட்டில் அரிசி விலை இரண்டு மடங்காக உயர்ந்து விடுகிறது.

இங்ஙனம் தனிமனிதனுடைய அன்ருட வாழ்வைப் பாதிக்கக் கூடிய முறையில் உலக பொருளாதாரம் உருவாகி வருகிறது. தனது வாழ்க்கைச் செலவுகளை, சுற்றுப்புற அமைப்பை ஒட்டியே தீர்மானிக்க வேண்டும். இவ் விஷயத்தில் மக்கள் தாமரை இலைமேல் தண்ணீராக இருந்துவிட முடியாது. உலக பொருளாதார நிலைமை நன்ருக அறிய வேண்டுமாயின் நிச்சயம் உலக அரசியலையும் தெரிந்து கொள்ள வேண்டியதேயாகும். ஆகவே இவ்வழியாக அரசியல் அழையாத விருந்தாக வந்து நமது வீட்டுக் கதவைத் தட்டுகிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

# கேரளத்தில் இனி என்ன?

கேரளத்திற் சென்ற சில மாதங்களாக அரசியல் கொந்தளிப்பு ஏற்பட்டிருந்தது. இப்பொழுது அந்த நாட்டில் இந்தியக் குடியரசுத் தலைவரின் ஆட்சி தற்காலிகமாக நடைபெறுகிறது. தற்காலிகமாக அமைதியும் நிலவிவருகிறது. எனினும், இந்த அமைதி எத்தனை நாட்களுக்கென்பதைத் திடமாகக் கூறிவிடமுடியாது.

கேரளத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை சிந்திக்கவேண்டியவொரு நிலைமைதான். அதை எல்லோரும் ஒப்புக்கொள்வர். அங்கு ஆளும் கட்சி கம்யூனிஸ்ட் கட்சியாக விளங்கியது. ஜனநாயக அடிப்படையிலே நடைபெற்ற பொதுத் தேர்தல் மூலம் அக் கட்சி ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தது. அப்படியாயின் அக் கட்சி வீழ்வதற்குக் காரணமென்ன? ஜனதிபதியின் ஆட்சி அங்குபிரகடனப்படுத்துவதற்கு ஏற்ற சூழ்நிலை அங்கு கிளம்பியதற்குக் காரணம் என்ன? ஜனதிபதி இவ்விஷயத்தில் மேற்கொண்ட நடவடிக்கை ஜனநாயகக் கொள்கைக்கு முரண்பட்டதா? இனிமேல் கேரளத்தில் நடக்கவிருப்பது என்ன? ஜனதிபதியின் நடவடிக்கை இந்தியாவிலுள்ள மற்றைய மாகாண அரசாங்கங்களைப் பாதிக்குமா? இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இதுபற்றி என்ன எதிர் நடவடிக்கை எடுக்கும்? இது போன்ற கேள்விகள் முக்கியமாக இந்திய மக்களை எதிர்நோக்கியுள்ளன.

கேரளத்தில் கம்யூனிஸ்ட் கட்சி அங்குள்ள மக்களால் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவொரு அரசியற் கட்சியாகும் என்பதை மனதில் வைத்துக் கொண்டு, கேரள நிலைமையை ஆராய்ந்தால், ஜனதிபதி அங்கு எடுத்துள்ள நடவடிக்கை ஜனநாயகத்துக்கு முரண்பட்டவொரு செயலாகவே தோன்றுகின்றது.

அதே சமயத்தில், கேரளத்தில் ஜனதிபதியின் ஆட்சி பிரகடனப்படுத்த முன்நிலவிய சூழ்நிலையை நாம் கவனிக்கும்பொழுது, ஜனதிபதியின் ஆட்சி அங்கு பிரகடனப் படுத்தப்படாவிடில், கேரளம் அழிவுப்பாதையிலேயேசெல்லக் கூடுமென்ற உண்மையும் புலனுகின்றது. ஆகவே, கொள்கையளவில் பாரத ஜனதிபதியின் செயல் ஜனநாயகத்துக்கு எதிரானவொரு செயலானுலும், நடைமுறைக்கண்ணேட்டத்தின்படி பார்க்கும்பொழுது, அது தவிர்க்க முடியாதவொரு நடவடிக்கையாகவும் விளங்குகின்றது.

கேரளத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மாருகப் பல எதிர்க் கட்சிகள்ஒன்றுகூடிக் கிளர்ச்சி செய்தன. அவர்களுடைய கிளர்ச்சிகள் சாத்வீகமான, அமைதியான போராட்டங்களாக அமையவில்லை என்பதைக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களிற் பலர் ஒப்புக் கொள்வர். பிரதமர் நேருவே இக் கிளர்ச்சிகள் ஆரம்பித்த காலத்தில், நிருபர் மாநாடு ஒன்றில் தமது வெறுப்பை வெளியிட்டுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கேரளத்தில் நடக்கும் கிளர்ச்சிகள் மதத்தினரால், முக்கியமாகக் கத்தோலிக்க மதத்தினரால் நடத்தப்பட்டுவருவதாகவும், அவர்களுடைய கிளர்ச்சிகளில் கேரளக் காங்கிரஸ் தொடர்பு வைத்துக்கொள்வது அவ்வளவு விரும்பத்தக்கதல்லவெனவும், கிளர்ச்சிகளில் பள்ளிக்கூட மாணவர்கள் கலந்து கொள்வது அறவே வெறுக்கத்தக்கவொரு விஷயமெனவும் பிரதமர் நேரு கூறியிருந்தார். இராஜாஜி, தேஷ்முக் போன்ற பல அரசியல் தலைவர்களும் கேரளத்தில் காங்கிரசும், மற்றும் எதிர்க்கட்சிகளும் உருவாக்கிவரும் நிலையைக் கண்டித்தனர்.

ஆனலும், கடைசியில் கேரளத்தில் ஜனதிபதி ஆட்சி பிரகடனப்படுத்துமளவுக்கு நிலைமை மோசமாகியது என்பதை யாவரும் அறிவர். எதிர்க் கட்சிகளின் ஒரேயொரு விருப்பம் என்னவெனில் எத்தனை உயிர்களைப் பலிகொடுத்தாலும், எவ்வளவு அபாயகரமான சூழ்நிலையை ஏற்படுத்தினுலும் கேரளத்தில் எப்படியேனும் மத்திய அரசாங்கத்தைத் தலையிடச் செய்வதேயாகும். அவர்கள் அந்தநோக்கத்தில் வெற்றிபெற்றுவிட்டார்களென்பது என்னவோ உண்மைதான். இந்த வெற்றிக்குக் கேரளத்தில் எதிர்ப்பை நடாத்திய கட்சிகளுக்குத் தலைமைக்கட்சியாக விளங்கிய காங்கிரஸ், புதுடில்லியில் தலைமைப்பீடத்தில் தமது கட்சிதானே வீற்றிருக்கின்றதென்ற துணிவும் ஒரு காரணமாகும். கேரளத்தின் எதிர்காலம் அங்கு விரைவில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல்களில் தங்கியுள்ளது.

—எம்

'ஹென்ற்லி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்ற்லி

★ சேட்
★ காற்சட்டை
★ ஷோட்ஸ்

ஹென்ற்லி சேட், காற்சட்டை, ஷோட்ஸ் ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில் நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினுலும், அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்ற்லி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.

சிறுகதை

# பாசம்

இ. பொன்னையா பி. ஏ.

"கறுப்பி"!

"சிவப்பி...... வா!"

"வெள்ளைச்சி! வா; இங்கே வா!"

காற்றிலே மிதந்து தேய்ந்தது அவனுடைய குரல். அந்த வேண்டுகோளைப் பொருட்படுத்தாது அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். அழைப்பு அவர்களுடைய செவியிலே விழவில்லைப் போலும்!

"தண்ணி விடாய்க்குதா? தாறன்." அன்பு கலந்திருந்தது அந்தக் குரலில்.

*　*　*　*

தன் நிழல் தன் காலடியில் நிற்கும் நேரம். வெங்கதிரோனுடைய கொடும் நாக்குகள் அந்த வெளியிலேயுள்ள சடப் பொருள்கள் எல்லாவற்றையும் நக்கி எரித்துக் கொண்டிருந்தன. செம்புழுதியை வாரி இறைத்துக் கொண்டிருந்தது சோழகக் காற்று.

அவனுடைய உதடு காய்ந்து வரண்டது. ஏதோ உருண்டு புரண்டு குமட்டிடும் உணர்வு அடிவயிற்றில். அந்த நிலையிலும் அவனது வாய் "சிவப்பி! வெள்ளைச்சி" என்று கூறிக் கொண்டது. வளைந்து குனிந்து ஒரு கையால் வாளியை எடுத்தான் சின்னையா.

உழைத்து மெருகேறி வைரம் பாய்ந்த தேகக் கட்டு. அதற்கேற்ற உயரம். வெய்யிலில் கருகி இருண்ட கறுப்பு நிறம். ஒளி வீசும் கண்கள். நீண்டு, அடர்ந்து- நரைத்த புருவங்கள். தலையில் ஒரு பிடி பரட்டைச் செந்நிற மயிர். முழுப் பாக்கை வாயில் போட்டு "டக்" என்று கடித்துச் சப்பும் பற்கள். இவைகள் அமைந்து, எண்பது வயதை எட்டிய பிரகிருதிதான் சின்னையா.

தசரதனுக்கு நாலாயிரம் மனைவிமார் இருந்தார்களாம். வேறு பலருக்கு ஆயிரக்கணக்கில் பிள்ளைகள் இருந்திருக்கிறார்கள். அவை எல்லாம் புராணக் கதைகள். சின்னையாவுக்கோ- 'கறுப்பி', 'வெள்ளைச்சி', 'சிவப்பி'... இப்படி... நூற்றெட்டுப்பேர். அவர்கள்தான் அவனுக்குப் பிள்ளைகள். அவன் வாழ்வதும் அவர்களுக்குத்தான்.

அவர்களுக்கு அவன்; அவனுக்கு அவர்கள்! சின்னையா தனது பத்து வயதிலேயே அவர்களுடன் பழகத் தொடங்கியவன். அவர்களின் தாயாகக்- காவல்காரனாகவும் வைத்தியனாகவும் இருந்தான். 'கறுப்பி', 'வெள்ளைச்சி'களுடைய எத்தனையோ சந்ததிகளையும் கண்டு விட்டான் சின்னையா.

'கறுப்பி' 'வெள்ளைச்சி'– அந்த இரு பரம்பரைக்குமாகப் பாடுபட்டான்.

என்ன, மனிதர்களைப் போல் அவர்கள் நன்றி கெட்டவர்களா?

அவனுக்கு வேண்டிய எல்லாவற்றையும் அளித்தார்கள்; வாழ்க்கையையே கொடுத்தார்கள்.

சிறுவயதில் தந்தையை இழந்த சின்னையா, 'கறுப்பி' 'வெள்ளைச்சி'களுடன் சேர்ந்து பாடுபட்டு உழைத்தான். அதன் பலனையும் அவனே அனுபவித்தான். பகல் முழுவதும் அந்தச் செம்பாட்டு வெய்யிலில் 'கறுப்பி' 'வெள்ளைச்சி' என்ற ஆடுகளுக்குப் பின்னால் திரிவான். இரவில் யாருடைய தோட்டத்துப் பட்டியிலாவது அடைத்துவிட்டு அங்கேயே உறங்கிவிடுவான்.

*　*　*

விவாகஞ்செய்து குழந்தை குட்டிகளைக் கண்டவன்தான். மனைவி, மகன் ஒருவனை விட்டு விட்டுப் பரலோகம் சென்றுவிட்டாள். அப்போது மகனுக்கு வயது இரண்டு. அவனை வளர்த்து விவாகஞ்செய்து கொடுத்தான். அவன் பெற்றுப் பெருக்கி வாழ்கிறான்.

"வயதுபோன காலத்தில் இப்படி ஏன் அலைவான்?" என்று யாராவது கேட்டால், "என்னசெய்கிறது? நான் பாராவிட்டால் இந்த ஆடுகளின் கெதி என்ன? எங்களை வளர்த்தது இந்தத் தெய்வங்கள் அல்லவா?" என்ற பதிலைத்தான் சொல்லுவான்.

"அப்பு வயதுபோன நேரத்தில் இப்படி ஏன் அலைகிறாய்? ஆடுகளை விற்றுவிட்டு நீ வீட்டில் சும்மா இரு, சாப்பாடு தாறன்", என்று ஒருநாள் மகன் கேட்டான்.

"என்னடா சொல்லுறாய்? ஆடுகளை விற்கவா? அப்படியும் ஒரு நினைவா? என்ரை உயிர் உடலிலே இருக்குமட்டும் அந்த நினைவை விட்டுவிடு", ஆவேசமாக இரைந்தான் சின்னையா.

*　*　*

உப்புச் சத்தியாக்கிரகத்திற்குச் சென்ற மகாத்மா காந்தியைப்போல, கையில் ஒரு பொல்லுத் தடியுடன் நின்றான் சின்னையா.

அன்று, மண்ணில் குதித்த ஆட்டுக்குட்டியைத் தனது மார்புடன் அணைத்துக்கொண்டு நின்ற சின்னையாவைப் பார்த்தால் புத்தபிரானைப்போல் இருந்தது.

"வெள்ளைச்சி" என்று சொல்லிக்கொண்டு வாளியை எடுத்த சின்னையாவினுடைய உடல் என்றைக்குமில்லாதபடி நடுங்கியது. தடியை ஊன்றிக்கொண்டு ஒரு அடி எடுத்துவைத்தான் கால்கள் பதறின. உடல் தள்ளாடியது. தரையில் அப்படியே இருந்தான்.

சுற்றியுள்ள அனைத்தும் சுழன்றன.

அப்படியே மல்லாக்காக நிலத்தில் சாய்ந்தான்.

காற்று ஊளையிட்டுக் கொண்டு செம்புழுதியை அள்ளி வீசிக்கொண்டிருந்தது.

பனஞ் சோலை ஓலமிட்டு அலறிக் கொண்டிருந்தது.

தொலைவில் ஆடுகள் வெண் திரைக்குப் பின்னுள்ள சிலையின் நிழலாயின.

"கறுப்பி..."அவனுடைய வாய் முணுமுணுத்தது.

"ம்மாய்......" என்று கொண்டு ஒரு சிவலை ஆடு, துள்ளிவிழுந்து அலறியது.

தலையை உயர்த்தி சத்தம் வந்த திசையைப் பார்த்தான். ஒரு ஆடு துள்ளிக்குதித்துக் கொண்டு அலறியது. எந்த ஆடு என்று அவனுக்குத் தெரியவில்லை. அதன் நிறத்தைக்கூட அவனால் தெரிந்து கொள்ளமுடியவில்லை.

இரண்டு கைகளையும் நிலத்தில் ஊன்றிக்கொண்டு, நெஞ்சை நிமிர்த்தி எழும்ப, யாரோ நெஞ்சில் ஏறியிருந்து அமர்த்துவதுபோலிருந்தது அவனுக்கு.

தொப்பென்று முதுகு நிலத்தில் வீழ்ந்தது.

ஆடு துடித்துத் துடித்துக் கத்தியது.

"வெள்ளைச்சி......" அவனுடைய உதட்டிலிருந்து நழுவியது சத்தம். தொண்டைக்குள் ஏதோ தடக்குவதுபோல இருந்தது. கழுத்தைப் பிடித்து நெரித்துத் திருகுவதுமாதிரி...

இரண்டு கால்களையும் மடக்கி ஊன்றிப் பின் நாரியை உயர்த்தினான். உயர்ந்த நாரி படீர் என விழுந்தது.

இரு கைகளும் நிலத்தை விருண்டிப்பிடித்தன.

"ம்மேய்...ம்மேய்..." என்ற சத்தம் அவனுடைய காதில் விழுந்துகொண்டிருந்தது.

கைகளையும் கால்களையும் நிலத்தில் அடித்தான்.

"கடவுளே என் ஆடுகளின் கதி?"

உடல் காற்றில் மிதப்பது போலிருந்தது.

"ம்மா..." சிவலை ஆட்டின் சத்தம் தேய்ந்துகொண்டுவந்தது.

"கறுப்..." உதடுகள் அசைந்தன; சத்தம் வெளிவரவில்லை.

குபீர் என அவனுடைய வாயாலும் மூக்காலும் இரத்தம் பீறிட்டுக்கொண்டு வந்தது. கண்கள் பிதுங்கி மேலே மேலே போய் மண்டைக்குள் செருகின.

"கறுப்..." உதடுகள் அப்புறம் அசையவில்லை! அவனுடைய தலை சாய்ந்தது!

ஆடுகள் அலறிக்கொண்டு அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தன.

அவற்றின் உள்ளுணர்வுக்கு அந்த முதிர்ந்த கட்டையோடு ஒட்டியிருந்த உயிரைக் காண வேண்டுமென்ற துடிப்புண்டானதோ என்னவோ கட்டற்று அங்குமிங்கும் அலைந்தன.

"ம்மேய்! ம்மேய்!" என்று ஓலமிட்டன. அந்த ஓலத்தில் குழைந்திருந்த சாயை, பாசத்தின் பரிமளிப்போ என்னவோ.

உலகத்தை ஆக்கிரமித்த சூரியன் அஸ்தமனகிரிக்குள் புகுந்துகொள்ளத் தொடங்கினான். எங்கும் சுற்றிவரும் இருளின் கருவண்ணத்துக்குள் இயற்கை மறையத் தொடங்கியது.

அந்த வெளியில் சலனமற்ற சடப்பொருளாகச் சின்னையா கிடந்தான். இருள்திரை அவனுடைய உடலையும் போர்த்துக் கொண்டது."மேய்" என்றஆடுகளின் ஓலம் அந்த வெளியின் அமைதியைச் சாகடித்துப் பரவிக்கொண்டிருந்தது.

## புவியியல் கற்பித்தல்
### யாழ்ப்பாணத்தில் ஆசிரியர் மாநாடு

வடபகுதி புவியியற் கழகமும், வடபகுதி வித்தியாதிகாரியும் ஒழுங்குசெய்த புவியியல் கற்பித்தல் சம்பந்தமான மாநாடு சென்ற வெள்ளிக்கிழமை (24-7-59) வேம்படி உயர்தரப் பெண்கள் பாடசாலையில் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தின் பல்வேறு பாகங்களிலிருந்தும் ஏறத்தாழ 125 புவியியல் போதிக்கும் ஆசிரியர் இம் மகாநாட்டிற் பங்குபற்றினர்.

இக் கழகம் எட்டு மாதங்களுக்கு முன்பு தாபிக்கப்பட்டது. வடபகுதி புவியியற் கழகத்தின் தலைவராகிய கலாநிதி டபிள்யு. எல். ஜெயசிங்கம் ஆசிரியர்களையும் குழுக்களின் தலைவர்களையும் வரவேற்று மகாநாட்டின் நோக்கங்களை எடுத்துரைத்தார். பின்னர் மாநாடு ஐந்து குழுக்களாகப் பிரிந்து பின்வரும் விஷயங்களை ஆராய்ந்தது.

1. மத்திய பாடசாலையில் புவியியல் பாடவிதானமும் பாடத்திட்டமும்.

2. மத்திய பாடசாலையில் புவியியல் கற்பித்தலுக்கு வேண்டிய உபகரணங்களும், பரீட்சித்தலும்.

3. சமூகக் கலையும் புவியியலும்.

4. வெளி ஆய்வு(Field study)

5. பட ஆய்வு (Map study)

இக் குழுக்களின் தலைவர்களாக முறையே திரு. சி. உ. சோமசேகரம், திரு. ஏ. ரி. வேதாபரணம், திரு. வி. வைரமுத்து, கலாநிதி டபிள்யூ. எல். ஜெயசிங்கம், திரு. வி. சிவசுப்பிரமணியம் ஆகியோர் பணியாற்றினர்.

வேம்படி மகளிர் கல்லூரி அதிபர், செல்வி எம். தம்பையா தலைமையில் பொது மாநாடு கூடியபோது குழுக்களின் காரியதரிசிகள் அறிக்கைகளைச் சமர்ப்பித்தனர். கொழும்புத் தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்த வித்தியாதிகாரி திரு. ஏ. இராசகாரியர் கேள்விப் பார்வை உபகரணங்களை (Audio-visual aids) உபயோகிக்கும் முறைபற்றி உரை நிகழ்த்தினர். திரு. ஏ. ரி. வேதாபரணம் நன்றி கூறினர்.

இம்மாநாடு சிறப்புடன் நடைபெற உதவியவர்களுள் வடபகுதி புவியியற்கழகப் பொருளாளரான திரு. செ. குணபாலசிங்கம் புரிந்த சேவை குறிப்பிடத்தக்கது.

## பட்டிருப்புப் பிரதிநிதிக்கு வாலிபர் முன்னணி சவால்

திருக்கோணமலை

பட்டிருப்புப் பிரதிநிதி திரு. எஸ். யூ. எதிர்மனசிங்கம் பாராளுமன்றக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டதையொட்டி, திருக்கோணமலை தமிழரசு வாலிபர் முன்னணி ஒரு சவால் விடுத்துள்ளது. பட்டிருப்புத் தொகுதியில் அவர் இராஜினமாச் செய்துபோட்டியிட்டால் அவருடைய செயலை எதிர்த்தே வாக்காளர் வாக்களிப்பர் என்று தமிழரசுக்கட்சி வாலிபர் முன்னணி கருதுகிறது.

**நால்வர் கொலை**

இப்பகுதியில் நான்கு பேர் இரண்டு நாட்களில் கொல்லப்பட்டனர். இதில் மூவர் சிங்களவர். ஒருவர் தமிழர். ஆறன் சிங்கோ என்பவரின் மருமகன் ஆரன்சிங்கோவையும், அவரது மனைவியையும், அவர்களது மகளையும் குத்திக் கொலை செய்து விட்டனர். திரு. க. சின்னத்தம்பி என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இரு கொலைகளுக்கும் தொடர்பில்லை.

( ந. நி. )

நவநாகரிகமான முறையில்
குறித்த தவணையில்



ஓடர் நகைகள்
செய்து கொடுக்கப்படும்.

பொற் தொழில்
ஒத்துழைப்புச் சங்கம்
நல்லூர்
82/5, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# கலை மணம் கமழும் கந்தர்வ லோகம்

## பண்புமிக்க மார்ட்டினிக் தீவு

சமீபகாலமாகநிறவேற்றுமையினல்எழும்மனப்பான்மையின் கோரத்தாண்டவத்தை அமெரிக்காவிலுள்ள லிற்றில் ருெக் என்னுமிடத்திலும் இங்கிலாந்தில் நொற்றிங் ஹாம் என்னுமிடத்திலும் காணமுடிந்தது. ஆனல் இன்னும் நிறவேற்றுமை பற்றிக் கனவிலும் நினையாத தயாள சிந்தனையுடைய மக்களும் உலகில் வாழ்கிருர்கள் எனக் கூறினல் அதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

மேற்கு இந்தியத்தீவுகளின் மோகினிகளைப்பற்றியும் அவர்கள் வாழ்க்கையைச் சுற்றியிருக்கும் அதிசயப் பழக்க வழக்கங்கள் பற்றியும் நாம் அறிந்திருக்கிருேம். கரிபீயன் கடலிலுள்ள மேற்கிந்தியத் தீவுகள் சில ஆங்கிலேய ஆதிக்கத்தின் கீழிருக்கின்றன. சில பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழிருக்கின்றன. மார்ட்டினீக் (Martinique) என்னும் தீவும் பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ்த்தானிருக்கிறது. இந்தத்தீவு பனமா கால்வாயில் இருந்து ஏறத்தாழ 1360 மைல்களிருக்கும். இங்குள்ள மக்கள் நிறவேற்றுமை பற்றிக் கனவிலும் நினைப்பதில்லையாம். மார்ட்டினீக் தீவின் டாம்பீகமான பண்பாட்டையும் மக்களின் மகிழ்ச்சி பொங்கும் அன்ருட வாழ்க்கையையும் சித்திரிக்கிறது இந்தக் கட்டுரை. 'மான்செஸ்டர் கார்டியன்' என்னும் ஆங்கிலத் தினசரிப் பத்திரிகையில் வெளியான இக் கட்டுரையை எழுதியவர்: **ஜேம்ஸ் மேரீஸ்.** மொழிபெயர்ப்பு: **'ஆர்சீவி'.**

ஃ ஃ ஃ

அன்றிரவு நான் "டிலா யூறப்" (De l' Europe) என்ற போசன சாலையில் எனது இராச் சாப்பாட்டை உண்டுகொண்டிருக்கும் பொழுது, ஓர் அசாதாரணப் பெண் நான் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் அறைக்குள் நுழைந்து களி நடனம் புரிந்தாள். இந்தநடனம் மிகவும் குரூரமாகக்காட்சியளித்ததெனக்கு. அருகிலே பாடிக்கொண்டிருக்கும் வானெலியின் சங்கீதத்திற்கிசைய அவள் இந்த மயிர்க்கூச்செறியும் "றம்பா" நடனத்தில் முன்னேறிக் கொண்டிருந்தாள். அவள் ஒரு சிவப்பு நிற நீச்சலுடை அணிந்திருந்தாள். அத்துடன் நீண்ட மூன்று மூலையுள்ள வைக்கோலாற் செய்யப்பெற்ற தொப்பியும் அணிந்திருந்தாள். போசன சாலையின் முதலாளிகள் அவளின் போக்கைத் தடை செய்ய முயன்ற போது, அவள் உடனே, ஆவேசம் கொண்டவள் போல அழுதாள்; கதறினள், கீதங்கள் இசைத்தாள். அவளின் எக்களிப்பு முடிந்தபாடில்லை. மேசைகளைத் தாண்டிச் செல்லுகையில் தவறி விழுந்தாள். மேசைகளிலிருந்த பீங்கான் கோப்பைகள் அப்படியே சுழன்றன. அந்த அறையிலிருந்த எல்லோரும் சிரிப்பையடக்க முடியாமல் தத்தளித்தார்கள். இந்தக் காட்சியைக் கண்ணுற்ற வாடிக்கைக் காரர்களிலொருவர் போலிசுடன் தொலைபேசியிற் பேசினர். என்ன ஆச்சரியம், சில நேரம் கழித்துத் தீ அணைக்கும் கோஷ்டியினர் ஆயுதபாணியாக அங்கே காட்சியளித்தார்கள். அப்பொழுதுதான் இந்த வாடிக்கைக்காரர் தன் தவறையுணர்ந்தார். பொலிஸ்காரருக்குப் பதிலாகத் தீயணைக்கும் கோஷ்டியினருக்கு தவறுதலாக தொலைபேசியில் பேசிவிட்டார். நடனம் முடிவடைந்தது. அங்கிருந்தோர் எல்லோரும் பிரமாதம், பிரமாதமென்று கரகோஷம் செய்தார்கள்.

ஆம், இது கேலிக்கூத்தல்ல. மேற்கு இந்திய பண்பாட்டின் சிகரமாக விளங்கும் ரம்பா என்ற களி நடனம் இது. இதனை ஜாஸ் சங்கீதத்திற்கிணைய ஆடினல் (Jazz-Music) உணர்ச்சிப் பிரவாகம் ஏற்படும். இதையாடியவள் ஒரு மேற்கிந்தியப் பெண். ஆனல் மார்டினீக் என்னும் தீவு ஒரு குட்டி பிரான்ஸ் தேசம். பிரான்ஸ் தேசத்தின் ஆவி இங்கேயும் வந்து களிநடனம் புரிகிறது. மேற்கிந்தியத் தீவுகளில் போர்ட் டி பிரான்ஸிலும் பார்க்க நாகரிகமுள்ள நாடுகளிருக்கின்றன. [போர் டி பிரான்ஸ் Fort de France மார்ட்டினீக் தீவின் தலை நகரம்.]

### கந்தர்வலோகக் கனி வகை


இங்கே பார்ப்போர் உள்ளத்தைக் கவரும், நாவுக்கு உருசியான கனி வகைகளையும் பழ வகைகளையும் நாம் ஏராளமாகக் காணமுடிகிறது. வயது முதிர்ந்த பெண்கள் தெருவோரத்தில் பழவகைகள் விற்கும் காட்சி கண்ணைப் பறிக்கும் அழகு நிரம்பியது. அவர்கள் முன்னிருக்கும் மேசை மேல் மார்டினீக் தீவின் மர்மக் கனி வகைகளையும் பழவகைகளையும் நாம் காணலாம். சாதாரணமான ஒருபழக்கடைத்தெரு ஒரு விவசாயக் கண் காட்சி போல் திகழும். பச்சை நிற, மஞ்சள் நிறத் தோடம்பழவகை, அன்னுசி, மாம்பழங்கள், வாழைப் பழங்கள், சிவப்பு அப்பிள் பழங்கள், ஈரப்பலா, வெள்ளரிப்பழம் போன்ற பழங்கள் மலைபோல் குவிந்து கிடப்பதைப் பார்த்து நா சுரக்கும்.

### மோகன ஆடை அலங்காரம்

இந்த மோகினித் தீவிலே பெண்கள் அணியும் ஆடைகள் அவர்களின் மோகன எழிலை எடுத்து இயம்புகின்றன. மேற்கிந்தியப் பெண்மணிகள் கண்ணைக் கவரும் வர்ணங்களில் கவர்ச்சிகரமான ஆடைகளை அணிவதற்குப் பேர் போனவர்கள். கிராமியப் பெண்கள் அணியும் சிங்காரமான ஆடைகள், மேற்கிந்திய் பண்பாட்டைப் பறை சாற்றுகின்றன. சில பெண்கள் தொப்பிகளையுமணிகிருர்கள். சிலர் நீண்டதாகவும் குறுகியதாகவுமணிகிருர்கள். சிலர் அகலமான தொப்பிகளையணிகிருர்கள்.

இந்த இடத்திலும் பிரெஞ்சுப் பண்பாடு தலைகாட்டுகிறது. எங்கு சென்ருலும் பிரெஞ்சு ஆதிக்கத்தின் அழியாச் சின்னங்களை நாம் காண முடிகிறது. சிலைகள், பழைய துப்பாக்கிகள், பீரங்கிக் குண்டுகள், கொடிக்கம்பங்கள், உடைந்தகோட்டைகள், இவைகளெல்லாம் பிரான்ஸ் தேசத்தின் படைப்பலத்தின் ஆட்சியைச் சொல்லாமலே சொல்கின்றன.

பிரெஞ்சு மக்களின் வருகை மார்ட்டினீக் தீவின் பண்பாட்டைப் பல படிகள் உயர்த்தி விட்டது. இங்குள்ள புராதன மக்கள் அவர்களைப் பெரிதும் மதிக்கிருர்கள். எங்கு பார்த்தாலும் கலையின் நறுமணம் வீசிக்கொண்டிருக்கும். பிரெஞ்சுப் பண்பாடும் மேற்கிந்திய பண்பாடும் கலந்த சங்கமத்தை மார்ட்டினீக் தேசத்திலேயே நாம் காண முடிகிறது. இங்குள்ள புராதன மக்கள் கரிய நிறமுள்ளவர்கள். பிரெஞ்சு மக்களின் பரந்த நோக்கும் உயர்ந்த பண்பாடும் இந்த வித நிறவேற்றுமையை அறவே எதிர்க்கிறது. இங்கே நிறவேற்றுமை ஓர் நம்ப முடியாத காரியம். மார்ட்டினீக் தீவில் மட்டுமல்ல, புவேட்டோ றிக்கோவிலும் (Puerto Rico) ஜமெய்க்காவிலும் நிற வேற்றுமை பாராட்டப்படுவதில்லை. மார்ட்டினீக் தேசத்து மக்கள் சாதி சம்பந்தமான சமத்துவத்தைப்பற்றி நன்கு உணர்ந்திருக்கிருர்கள். இங்கே பிரெஞ்சுஎதிர்ப்பு இயக்கம் தலை தூக்குமா என்று ஒரு புராதன மனிதரைக் கேட்டபொழுது, அவர் என்னைப் பார்த்துவிட்டு என்ன மாதிரி இங்கேபிரெஞ்சுஎதிர்ப்பு இயக்கம் தலை காட்ட முடியும் நாங்களும் பிரெஞ்சு மக்கள்தானே என்று சிரித்தவாறே சொன்னர். என்ன மனப்பான்மை!



**மின்சாரத்தினல் இயங்கும் 'ட்ராக்டர்'**

**பிரிட்டிஷ் கொம்பனியான கரன் அன்ட் கொம்பனியினல் ஆக்கப்பட்ட, மின்சார சக்தியினல் இயங்கும் இந்த 'ட்ராக்டர்' ஸ்கொட்லாந்தில் முதன் முறையாகப் பரீட்சிக்கப்படுகின்றது.**

## ஐக்கிய நாடுகள் சபை செப்டம்பர் 15 இல் ஆரம்பம்

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை செப்டம்பர் மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகும். அச்சபையின் தலைவராக, லத்தீன் அமெரிக்க நாடுகளின் அபேட்சகரான திரு. விக்றர் ஏ. பெலாண்டே என்னும் பெரு நாட்டவரே தெரிவு செய்யப்படுவரென எதிர்பார்க்கப்படுகிறது.

செப்டம்பரில் கூடவிருக்கும் இப்பொதுச் சபைக்கான அட்டவணை ஒன்று தயாராகியிருக்கின்றது. இந்த அட்டவணையில் எல்லாமாக 63 அம்சங்கள் அடங்கியுள்ளன. "நீரக ஆயுதங்களின் அதிகரிக்கும் விநியோகத்தை தடை செய்தல்" என்ற அயர்லாந்தின் பிரேரணையைத் தவிர, இந்த அட்டவணையில் வேறு புதிதாகவொரு விடயமும் இல்லை. இது வரை பொதுவாக இடம் பெறும். "தேசங்களை நிராயுத பாணியாக்கும்" பிரச்சினை அட்டவணையில் இடம் பெறவில்லையெனினும் பொதுச் சபையின் கூட்டங்கள் ஆரம்பமாதமுன், இப் பிரச்சினையை அட்டவணையில் புகுத்தி விடுவரெனத் தெரிகிறது. புதிய சீனத்தை ஐ. நா. சங்கத்தில் அங்கத்தவராக அனுமதிக்க வேண்டுமென்பதே இந்தியாவின் பிரேரணையாகும். இப்பிரேரணையையொட்டி திபேத் விஷயமாக விவாதம் கிளம்புமென எதிர் பார்க்கலாம். ஆனல், இது வரை திபேத் விஷயத்தை அட்டவணையில் ஓர் அம்சமாகச் சேர்ப்பதற்கு ஒரு நாடும் முன் வரவில்லை.

## தமிழர் உரிமையில் அக்கறையுள்ள சிங்களவருமுளர்

### திரு. வன்னியசிங்கம் கூற்று

தமிழரசுக்கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. கு. வன்னியசிங்கம் தமிழ்மக்களை ஒரு உண்மையை மறந்துவிடக்கூடாதெனக் கேட்டுக் கொண்டார். தமிழ் மக்களின் உரிமைகளைப்பற்றி அக்கறை கொண்ட பலர் சிங்களமக்களிடையேயும் உள்ளனரென்பதே அந்த உண்மை. இக் குறிப்பை அவர் யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் யாழ்ப்பாணம் சன்மார்க்க ஒற்றுமை இளைஞர் சங்கம் திரு. என். டி. செல்லத்துரை சத்தியப்பிரமாணக் கமிஷனராக நியமிக்கப்பட்டதை யொட்டி நடாத்திய வரவேற்பு விழாவில் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

தமிழரிடையே, ஒவ்வொரு சிங்களவனும் தனது எதிரியே யாகும் என்ற தவருன எண்ணம் நிலவிவருகின்றது. இது மிகவும் அபாயகரமானது. தமிழரின் உரிமைகளுக்குச் சாதகமாக உள்ள எத்தனையோ சிங்களமக்கள் இருக்கின்றனர். சிங்களமக்கள் நற்குணம் படைத்த பெருந்தன்மையுள்ள மக்கள். ஆனல், அதிகார வெறி பிடித்த சில தலைவர்களே அவர்களைப் பிழையான பாதையில் கொண்டுசெலுத்த முயல்கின்றனர். இதைத் தமிழ்மக்கள் நன்கு உணர்ந்து, தங்களுக்கும் சாதாரண சிங்கள மக்களுக்குமிடையே பிளவு ஏற்படாத விதத்தில் நடந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களிடையே முஸ்லிம் தமிழர், மட்டக்களப்புத் தமிழர் திருக்கோணமலைத் தமிழர் என்ற வேறுபாடுகளை உண்டாக்க முயற்சிக்கும் சில சிங்களரைப்பற்றித் தமிழ்மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

திரு. வி. என். நவரத்தினம், தமிழ் மக்கள் தமக்குள்ளே சாதிவேறுபாடுகளை வைத்திருக்கும்வரை, சிங்களரிடம் தமதுஉரிமைகளைக் கோருவது சரியாகமாட்டாது எனக் கூறினர்.

## தலைவர்களின் தலையீடு கூட்டுறவு இயக்கத்தைப் பாதிக்கும்

கோப்பாய் வடக்குப் பலநோக்கு ஐக்கிய சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு. கே. இ. குமாரசாமியின் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தலைவர் அரசியல்வாதிகளின் தலையீட்டினல் கூட்டுறவு விருத்தி பெரிதும் பாதிக்கப்படுமென்றும், சமீபகாலத்தில் மந்திரிகள் சபையில் ஏற்பட்ட மாற்றங்கள், கூட்டுறவு இயக்கம் சனநாயகமுறைப்படி நடைபெறுவதற்கு உதவியாயிருக்குமென்றும்சொன்னர்.

குறித்த சங்கத்தின் காரியதரிசி திரு. என். கனகசபை தமது ஆண்டு அறிக்கையில் உள்ளூர் வெங்காயக் கூடுகளைத் தயாரிப்பவர்களுக்கு உற்சாகம் அளிக்கும் நோக்கத்துடன் தாம் அக்கூடுகளைக் கூடுதலான விலைக்குக் கொள்வனவு செய்து வருவதாகத் தெரிவித்தார்.

### அரசாங்க உதவி

கூட்டுறவுப் பகுதி உதவி ஆணையாளர் திரு. வி. நடராசா கூறியதாவது: நம் நாட்டு உற்பத்தியாளரின் நலனைக் கருதி, அவர்களாற் சாகுபடி செய்யப்பெற்ற வெங்காயத்தை அரசாங்கம்ஏறக்குறைய இரண்டரை மடங்குவிலை கொடுத்து வாங்குகிறது. இந்த உதவியினல் ஏற்படும் நன்மையை உணரும் விவசாயிகள் மிகச் சிலர் என்றேகூற வேண்டும்.

VENUS
SOAP
வீனஸ் சோப்

தரத்தில் சிறந்தது, உடைகளை வெண்மையாக்குவது,
அதிக நுரையைத் தருவது
வீனஸ் சோப்
வீனஸ் சோப் தொழிற்சாலை
269, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

# லண்டன் கந்தையா

சென்ற ஞாயிறன்று கொழும்பு ரேயல் கல்லூரி மண்டபத்தில் "லண்டன் கந்தையா" மேடையில் தோன்றி ஆரம்ப முதல் ஒன்றரை மணி நேரமும் அந்த மண்டபம் நிறைய இருந்த ரஸிகர்களைச் சிரிப்பில் ஆழ்த்தினுர்.

"லண்டன் கந்தையா" ஒரு நாடகமல்ல. அது ஒரு தமாஷ். கொழும்பு வானெலியில் கேட்டு ரஸித்து வந்தவர்கள் லண்டன் கந்தையாவையும் அவரது சகாக்களையும் நேரில் கண்டு களிக்க இது ஒரு சந்தர்ப்பம்.

லண்டன் சென்று திரும்பிய காரணத்தால், தன்னை ஒரு புதுப்பிறவியாகக் கருதிக் கொள்ளுகிருர் கந்தையா. அது மட்டுமல்ல. தன் சட்டையின் பின்புறம் "G. B." (கிரேட் பிரிட்டன்) என்ற பெரிய எழுத்துக்களையும் பொறித்துக் கொண்டிருக்கிருர். ஆங்கிலச் சொற்களைக் கலந்து மணிப்பிரவாள நடையில் அவர் பேசுவதே ஒரு வேடிக்கை. அவர் ஆங்கிலத்திலே "நந்தனுர்" கதாகாலட்சேபம் செய்தது 'சிந்தனுரை' நினைப்பூட்டியதென்ருலும், புதியதோர் கற்பனையாகும். கர்னுடக ராகங்களில் ஆங்கிலச் சொற்களை அமைத்துப் பாடி, நமது சங்கீதத்தின் மகிமையைப் பிறர் கேட்டு உணரும்படி செய்ய வேண்டுமென்று சுத்தானந்த பாரதியாரவர்கள் கூறுவதுண்டு. லண்டன் கந்தையா நடித்த கொழும்பு வானெலியைச் சேர்ந்த 'சானு' இசையுடன் பாடிப்பலரையும் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்தார்.

நாடகம் பார்க்கப்போகிருேமென்ற எண்ணத்துடன் சென்றவர்களுக்கு இது ஏமாற்றமாகும். கருத்தோ, நாடக லட்சணமோ எதுவுமில்லை என்று குறை கூறலாம். ஆனுல் வெறும் தமாஷாக,பொழுது போக்காக எண்ணிச் சென்றவர்களுக்கு லண்டன் கந்தையா ஒரு விருந்தாகும். திரு சண்முகநாதன் மட்டுமன்றி, அவருடன் நடித்த ஒவ்வொருவரும், குண சித்திர நடிகர்களாக, கலைத் திறமையுடன் நடித்தனர். கே. கே. அச்சுதனின் 'ராக் அண்ட் ரோல்' நடனமும் கிண்டல் செய்வது போல இருப்பினும் நம்மவர் எந்த நடனமும் ஆடலாமென்பதை அது எடுத்துக் காட்டியது.

—"சித்திரா"




**கண்ணோட்டம் 11**

## நாட்டில் ஒழுங்கீனம்

எங்கு நோக்கினும் இன்று களவும், ஊழலும், புரட்டும், புரளியுமாகவே காணப்படுகின்றன. ஸ்ரீ லங்காவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பெரிய மனிதர் கூட இவ்விஷயங்களில் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. 'கிடைத்த பதவியிலே வீற்றிருப்பதன்றி, வேறென்றும் அறியேன் பராபரமே' என்ற எண்ணம்தான் பொறுப்பு வாய்ந்த சில தலைவர்களிடம்கூட விரவி நிற்கின்றது.

சென்ற இரண்டு, மூன்று ஆண்டுகளாக நாட்டில் கொலைகளின் தொகை அதிகரித்து வந்தது. இப்பொழுதும் அவை அதிகரித்துத்தான் வருகின்றன. வகுப்புவாதக் கலவரங்களின் விளைவாக இக்கொலைகளின் தொகை இன்னும் கொழுத்துப் பெருத்து விட்டது. கொலை, கொள்ளை, களவு இவை சர்வ சாதாரணமான சம்பவங்களாக ஆகிவிட்டன இலங்கையிலே!

இந்தக் கொலைகள், கொள்ளைகள் காணுதென்று, புதுவிதமான முறைகளில் துணிகரமான கள்ளச் செயல்களில் மக்கள் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். அண்மையில் இலங்கைப் பொலீஸாரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ள கள்ள நோட்டு விஷயம் பலரும் அறிந்ததொன்றே. 50ரூபாய் நோட்டுத் தொடக்கம் 2 ரூபாய் நோட்டு வரையில் கள்ள நோட்டுக்கள் பல அச்சிடப்பட்டு நாட்டிலே பவனி வந்துள்ளன. இந்நவீன முறைக் களவில் சம்பந்தப்பட்டவரின் பட்டியலைப் பார்க்கும்பொழுதுதான் எமக்குக் கவலை அதிகரிக்கின்றது. எல்லோருமே பொறுப்பு வாய்ந்தவர்கள். ஒரு கிளார்க், ஒரு உபாத்தியாயர், புத்த பிக்கு ஒருவர், அகில இலங்கைக் கிரிக்கெட் வீரர் ஒருவர், இப்படி வேறும்சிலர்!

இது மாத்திரமா? கன்னிப் பெண்களைக் கண்டவுடன் தகாத முறையில் நடந்துகொள்வதும், இவைபோன்ற வேறு இழி செயல்களும் நாட்டிலே மலிந்து வருகின்றன. யாழ்ப்பாணத்திலே அண்மையில் ஒரு பெண் கடத்து வழக்கு நடைபெற்றது. அந்த வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட எதிரிகள் இருவருக்கும் 19 மாதம் கடுங்காவல் தண்டனை விதித்த நீதிபதி "இங்கு பெண் கடத்துவதென்பது சர்வ சாதாரணமாகி விட்டது. இக் குற்றம் பாரதூரமானது. இதற்குக் கடும் தண்டனை அவசியம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் கைத்தொழில் விருத்திபெற வேண்டுமென்பது அரசாங்கத்தின் அவா. ஆனுல், நல்ல கைத்தொழில்களில் ஈடுபட விரும்பாத சிலர் தீங்கு விளைவிக்கும் கைத் தொழில்களில் தமது முழுக்கவனத்தையும், நேரத்தையும் செலவிடுகிருர்கள். கஞ்சாச் செடி வளர்த்தல், கள்ளச் சாராயம் உற்பத்தி செய்தல், கள்ள நோட்டச்சடித்தல் முதலிய கைத் தொழில்களை வளர்ப்பதில் தான் இவர்கள் அதிக ஊக்கமும், அக்கறையும் காட்டி வருகிருர்கள். நெசவுத் தொழில், பெட்டி, கடகம் வனைதல் போன்ற சீரிய கைத்தொழில்கள் இவர்களுக்குப் பிடிப்பதில்லை.

நாட்டில் ஒழுங்கீனம் நிலவி வருவது உண்மையே. ஆனுல், அது சாதாரண மக்களிடையே மாத்திரம் காணப்படும் ஒரு குறையல்ல. நாடு காக்கும் தலைவர்கள் நடமாடும் பாராளுமன்றச் சபையிலேயே நாம் இந்த ஒழுங்கீனத்தைக் காண முடிகின்றது. சென்ற வாரம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின்போது நிதிமந்திரி ஸ்ரான்லி டி' சொய்சாவுக்கும், மாத்தளை எம். பி. நிமல் கருணத்திலக்காவுக்குமிடையே வாக்குவாதம் நடந்தது. அத்தருணம், நிதி மந்திரி நிமலைப் பார்த்து, "நீ வாயை மூடு" என்ருர். பதிலுக்கு நிமலும் "நீ உன் வாயை முதலில் மூடு" என்ருர். அதற்குப் பதிலாகப் பொறுப்புள்ள நிதிமந்திரியவர்கள் "நீ உன்னுடைய நாசமாய்ப்போன (damn) வாயை மூடு!" என்று சீறிஞர். இவர்களே இப்படிப் பேசிப் பழகிக் கொண்டால்...?

நாளுக்கு நாள் மலிந்து வரும் கொடூரமான, கண்ணியமற்ற செயல்களை இப்படியே வளர விட்டால், இன்னும் சில வருடங்களில், இலங்கையின் கதி என்னவாகுமோ? ஜனநாயகம் சீர் குலைந்து, பொருளாதாரம் பயனற்று, வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகி இலங்கையிலும் சர்வாதிகார இராணுவ ஆட்சி ஏற்பட இடமளிப்பதா?

## பண்டிதமணி பாராட்டுவிழா நிர்வாகசபைக் கூட்டம்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை பாராட்டுவிழா நிர்வாக சபைக் கூட்டம் சமீபத்தில் யாழ்ப்பாணம் ஆசிரியர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் பாராட்டு விழாவை எப்படிச் சிறப்புற நடத்தலாம் என்பது பற்றிப் பண்டிதர் செ. துரைசிங்கம், அ. பஞ்சாட்சரம், வை. கனகசபாபதி, பண்டிதர் சு. இராசையா ஆகியோர் பேசினர்.

பண்டிதமணியின் பாராட்டு விழாவின்போது மலர் ஒன்று வெளியிடுவதென்றும் விழாவை ஆவணி பிற்பகுதியில் நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. பண்டிதமணி பிறந்த ஊராகிய மட்டுவிற் பகுதியில் சங்கச் செலவில் மணி மண்டபம் கட்டுவதெனவும் அம்மண்டபத் திறப்பு விழாவை, பாராட்டு விழாச் சபையார் விழா நிகழ்ச்சியிலே சேர்த்துக் கொள்ளுமாறும் கேட்டு எழுதிய மட்டுவில் சிலுவில் கிராம முன்னேற்றச் சங்கத்தாரின் வேண்டுகோளைச் சபை ஏற்றுக்கொண்டது.

## தனிமனிதனும் அரசியலும்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

**அரசியல் விழிப்புணர்ச்சி**

இயற்கையாகவே உலகெங்கும் இந்த நூற்ருண்டில் அரசியல் கொந்தளிப்புக்கள் தொடர்ச்சியாக ஏற்பட்ட வண்ணமிருக்கின்றன. அதற்குக் காரணம் பொதுவாக மக்களிடையே உதித்துள்ள அரசியல் விழிப்புணர்ச்சியேயாகும். அரசியலைப் பொறுத்தவரையில் மீளா உறக்கத்திலிருந்தவர்களெல்லாம் விழித்துக் கொண்டு விட்டார்கள். பேராசிரியர் ஆர்னல்டு ரொயின்பீ அவர்கள் குறிப்பிடுவதுபோல ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் விழிப்புணர்ச்சி இந்த சகாப்தத்தின் அதிமுக்கிய சம்பவங்களிலொன்ருகும்.

## பூஜ்யம் தபால்

ஸ்ரீஜவஹர்லால் நேரு,
பிரதம மந்திரி,
புதுடில்லி.

வீரரே!

இப்போது தங்களுக்குத்தான் எவ்வளவு எதிர்ப்பு! கேரள கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை நீக்கியதற்காகக் கம்யூனிஸ்டுகள் பல மூலைகளிலிருந்தும் தங்களைத் தாக்குகின்றார்கள். தாங்கள் தயாரித்த அரசியலைத் தாங்களே கொளுத்திவிட்டதாகவும், ஜனநாயகத்தைத் தாங்கள் குழிதோண்டிப் புதைத்துவிட்டதாகவும் குற்றம் சாட்டுகின்றார்கள்.

மற்றோர் பக்கம் பம்பாயில் இருந்து, தங்கள் பழைய நண்பர் இராஜாஜி, தாங்கள் கம்யூனிஸ பாதையில் நாட்டைக் கொண்டுபோவதாக வெளுத்து வாங்கித் தங்களுக்கு எதிராக ஒரு புதிய கட்சியை அமைத்துவிட்டார். இந்தியாவின் புராதன தர்மத்தை மறந்து, வெறும் லோகாயதப் பாதையில் தாங்கள் செல்லுவதாக கே. எம். முன்ஷி உள்ளிட்டுப் பல பெரிய பீரங்கிகள் தங்களை நோக்கிச் சுடுகின்றன.

வயது தங்களுக்குக் கிட்டத்தட்ட எழுபது ஆகியும் தாங்கள் சற்றும் தளராமல் இதற்கெல்லாம் சுடச்சுடப் பதில் கொடுத்து வருகிறீர்கள். இராஜாஜி தங்களைத் தாக்குகையில், அவர் கூறுவது சரிபோற் தோன்றுகின்றது. தாங்கள் பதில் அளிக்கும்போது தாங்கள்தான் சரிபோல் படுகிறது. உண்மையில் யார் சரி? யார் தவறு? என்பதைத் தெரிந்துகொள்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

பழம்பெரும் தேசாபிமானிகளான தாங்களும் இராஜாஜியும் பகிரங்கமாகப் பேச்சுப்போர் நடத்துவதைக் கேட்க மிகவும் சங்கடமாக இருப்பதாயும், நீங்கள் இருவரும் ஒரு "உச்சி மகாநாடு" கூடி ஒரு சமரசத்துக்கு வரவேண்டும் என்றும் ஓர் அன்பர் யோசனை கூறியுள்ளார். ஆனால் இதை நான் ஒப்பவில்லை.

எழுபதும், எண்பதுமான நீங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் எதிர்ப்பது ஒரு அரசியல் வேடிக்கை. இந்த அரசியல் சண்டை உயர்தர முறையில், மனக்கசப்புகள் இல்லாமல் நடப்பது இந்திய அரசியலை ருசிகரமாகச் செய்கிறது. இத்துடன், ஏனையோர்களை, அரசியல், பொருளாதார விஷயங்களைப்பற்றி இது சிந்திக்கத் தூண்டுகின்றது. பல பாடங்களையும் கற்பிக்கின்றது. மேலும் பல காளான் கட்சிகளை எல்லாம் நீக்கி, ஜனநாயக வெற்றிக்கு அவசியமான ஒரு பலமான அகில இந்திய எதிர்க்கட்சியையும் உருவாக்குகின்றது. தாங்களும் அவசரப்பட்டுத் தவறுகள் செய்யாமற் தடுக்கவும் புதிய கட்சி ஒரு 'பிரேக்'போல் வேலைசெய்யும். ஆதலால் தாங்களும் இராஜாஜியும் இன்னும் சில வருஷங்களாவது ஒத்துப்போகாமல், இந்த அரசியற் சண்டையைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்று விரும்பும்

தங்கள் அன்புள்ள
**பூஜ்யம்**

குறிப்பு:—

குஜராத்திலே சிலர் தங்களை மஹாவிஷ்ணுவின் பத்தாவது அவதாரமாகக் கருதி வணங்கிவருவதாகக் கேள்விப்பட்டேன். ஏற்கெனவே மகாவிஷ்ணு பத்து அவதாரங்கள் எடுத்துவிட்டதாகப் புராணங்கள் கூறும். 'கல்கி' அவதாரம் இனித்தான் வரப்போகிறது என்றும் சிலர் கூறுவர். தாங்கள் உண்மையில் பத்தாவது அவதாரம்தானா? தெய்வ நம்பிக்கை இல்லையென்று பச்சையாகக் கூறும் தாங்கள், இதை விரும்பமாட்டீர்கள். காந்தியடிகள்கூடத் தமக்குக் கோயில் கட்டக்கூடாது என்றும், சிலை வைக்கக்கூடாது என்றும் எவ்வளவோ சொன்னார். ஆனாலும் மக்கள் விட்டார்களா? அவர் காட்டிய நெறிகளையும், கூறிய உபதேசங்களையும் அவருடன் மறந்துவிட்டு, சிலைவைக்கிறார்கள். இப்போது தங்களை அவதாரமாக்கப் பார்க்கிறார்கள். இவ்விஷயத்தில் தாங்கள் தங்களை "அவதாரமாக்கும்" பக்தர்களுக்குச் சரியான "வரப்பிரசாதம்" அளிப்பீர்களென்று எதிர்பார்க்கலாமா?

பூஜ்யம்

# தொழில் துறையில் யப்பான் அடைந்து வரும் துரித வளர்ச்சி

## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வியத்தகு சாதனை

### வனப்பு மிக்க நாட்டில் யாழ்ப்பாண வர்த்தக அதிபர் பெற்ற அனுபவம்

"உதயசூரியனின் ஒளிபெறும் நாட்டுக்குச் சமீபத்திற் சென்றிருந்தீர்கள் என அறிந்தேன்......" என்று நான் பேச்சை ஆரம்பிக்கமுன்னரே, "ஆமாம். நான் மாத்திரமன்றி எனது மனைவியும் என்னுடன் வந்திருந்தார்" எனப்புன்முறுவலுடன் கதையை ஆரம்பித்தார் திரு. அன்ரன் சென் ஜோர்ஜ். வசீகர தோற்றமுள்ள இப்பிரமுகர் யாழ்ப்பாணம் ஓட்டோஸ் லிமிடெட் தாபனத்தாரின் அதிபராவர். சில மாதங்களுக்கு முன்னர் யப்பான் தலைநகரமாகிய டோக்கியோவில் நடைபெற்ற அகில உலக வர்த்தகக் கண்காட்சிக்குச் சென்றிருந்தார். பிரிட்ஜ்ஸ்டோன் டயர் செய்யும் கம்பனியாரின் அழைப்பையேற்றே, திரு. அன்ரன், மலர்கள் பனிநீர் தெளித்துப் புன்னகை பூக்கும் வனப்புமிக்க யப்பான் நாட்டிற்கு விஜயஞ் செய்திருந்தார்.

"பிரிட்ஜ்ஸ்டோன் டயர் கம்பனி 1931ஆம் ஆண்டில் குருமே என்னுமிடத்தில் நிறுவப்பட்டது. இது டோக்கியோவிலிருந்து 1200 மைலுக்கப்பால் உள்ளது. கீழைத் தேசங்களில் இதுபோன்றவொரு ஸ்தாபனத்தைக் காண்பதரிது" என அவர் சொல்லியவாறே, இரண்டாவது மகாயுத்தத்தின் பின்னர், யப்பானிலே தொழில், பொருளாதாரம், சமூகம் போன்ற துறைகளில் ஏற்பட்டுவரும் துரிதமான வளர்ச்சியைப் பெரிதும் வியந்தார்.

இத்தகைய நாட்டை நோக்கி எமது எண்ணங்கள் மனோவேகத்தில் சென்றுகொண்டிருக்கையில், குளிர்ந்த பானத்துடன் அங்கு வந்த திருமதி அன்ரன், எமதுசம்பாஷணையில் கலந்துகொண்டார். யப்பானியப் பெண்மணிகளைப்பற்றி அறிந்துகொள்வதற்கு நல்ல சந்தர்ப்பம் வாய்த்துவிட்டதே என்று மகிழ்ந்த நான், "இப்போதும் யப்பானியப் பெண்கள் தங்களது தேசிய உடையாகிய கிமோனவை அணிகிறார்களா?" என்று கேட்டேன்.

"என்ன சொல்லுகிறீர்கள்? யப்பானில் இப்போதெல்லாம் அமெரிக்க நாகரிகம் பரவிவருகிறது. அசல் மேனாட்டார் போன்றே அவர்களது உடையலங்காரமும், பழக்கவழக்கங்களும் அமைந்துகொண்டு வருகின்றன. ஆனால், கல்யாண வைபவங்களிலும், தேசிய விழாக்களிலும யப்பானியர் தேசிய உடைகளையே பெருமையுடன் அணிகின்றனர்."

மறுகணம் தமது கணவன் கிமோன உடையில் யப்பானில் ஓர் இடத்தில் காட்சியளிக்கும் படத்தை என்னிடம் கொண்டுவந்து காண்பித்தார். "கிமோன ஆண்களுக்கும் அழகாக இருக்கிறதே!" என நான் திரு. அன்ரனிடம் கூறினேன். அவர் சிரித்துக்கொண்டே தமது பேச்சை மீண்டும் ஆரம்பித்தார்:

"பாருங்கள். இரண்டாவது உலகயுத்தம் முடிந்து இப்போது பதின்மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. இக்கால எல்லைக்குள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யப்பானிய பொருளாதாரம் சீரடைந்து, மேற்கு ஜேர்மனியையே தூக்கி எறியக்கூடியவிதத்தில் முழுமூச்சுடன் முன்னேறிவருகிறது.

நெசவுத் தொழிலாயினும் சரி, கப்பல் உற்பத்தித் தொழிலாயினும்சரி, அன்றேல் மின்சார நுணுக்கப் பொருள்களின் உற்பத்தியாயினும் சரி, அன்றேல் உணவு உற்பத்தியாயினும் சரி யப்பான் இத்துறைகளில் எல்லாம் மிகத் தீவிரமாக முன்னேறிவருகின்றது".

"அது சரி. இலங்கையில் ஒரு சிமெந்து தொழிற்சாலை இருந்தும், உள்ளூர்த் தேவைகளுக்கே போதியளவு சிமெந்து கிடைப்பது அரிதாகவிருக்கின்றதே" என்று நான் விசனத்துடன் கூறியதைக் கேட்ட அவர், "யப்பான் ஆசிய நாடுகளுக்கு அதிக தொகையான சிமெந்தை ஏற்றுமதி செய்கின்றது. யப்பானில் சென்ற 80 ஆண்டுகளாகச் சிமெந்து உற்பத்தி செய்யப்படுகின்றது. அது உலகிலேயே சிமெந்து உற்பத்தியில் நான்காவது இடத்தை வகித்து வருகின்றது. சிமெந்து உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள், மூலதனம், மனித சக்தி எல்லாமே யப்பானில் அபரிமிதமாகக் கிடைக்கின்றன. ஆகவே, சிறு நாடாகிய இலங்கைச் சிமெந்து உற்பத்தி பற்றி நாம் அவ்வளவு கவலைப்பட வேண்டியதில்லை" என்றார்.

இவ்வாறே எங்கள் பேச்சு யப்பானிய விளையாட்டுப் பொம்மைகள் தொடக்கம் தொழில்துறை வரைக்கும் சென்று, ஆபத்தான கட்டமாகிய அணுக்குண்டில் வந்திறங்கியது. அப்பொழுது நான் அவரை "ஹிரோஷீமாவுக்கும் சென்றிருந்தீர்களா?" என ஆவலுடன் கேட்டேன். கிமோன உடையுடன், கைநிறையப் புகைப்படங்களை வைத்துக்கொண்டிருந்த திருமதி அன்ரன் "இதோ பாருங்கள், ஹிரோஷீமாப் புகையிரதநிலையம்!" என்று ஓர் புகைப்படத்தைக் காட்டினார். அதனைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே, "ஆமாம்! நாங்கள் ஹிரோஷீமாவுக்கும் சென்றிருந்தோம். அணுக் குண்டின் கோரசக்திக்கு இரையான ஹிரோஷீமா யப்பானிய மக்களின் விடா முயற்சியினாலும், உழைப்பினாலும் வியக்கத்தக்க முறையில் வளர்ச்சியுற்று வருகிறது" என்று திரு. அன்ரன் கூறினார்.

இவ்விதம் அவர் கூறிக்கொண்டிருக்கையில் எனது கண்கள் அறையிலுள்ள பொருள்களின் மீது படிந்தன. கண்ணடிப்பெட்டியொன்றுக்குள் அழகான யப்பானியப் பொம்மைகள் இருப்பதைக் கண்டு மனதுக்குள் நான் வியந்துகொண்டிருக்கும் பொழுதே, என்னுடன் கூடவே வந்திருந்த நண்பர் அவற்றைப் பற்றி திரு. அன்ரனிடம் தீவிரமாக ஏதோ கேட்டுக்கொண்டிருந்தார். "'ஹக்கற்ரூப் பொம்மைகள்' எனப்படும் இந்த யப்பானியப் பொம்மைகள் ஆகக்கூடி மூன்று ரூபாயாகத்தான் அங்கு விலைப்படுகின்றது" என அவர் நண்பரிடம் கூறியதைக் கேட்டு நான் ஆச்சரியப்பட்டேன்.

"இப்பொம்மைகளில் யப்பானியக் கலைத்திறன் பரிமளிப்பதைக் கண்குளிரப் பார்க்கலாம்" என்று சொல்லிக்கொண்டே பக்கத்து அறைக்குள் சென்று திரும்பிய திரு. அன்ரன் என்னைப் பார்த்து. "இலங்கையிலும் எருமைகள் இருக்கின்றன" என்று கூறிய போது, இலங்கை மக்களைத்தான் அவர் குறிப்பிட்டாரோ என நான் எண்ணினேன். அந்த எண்ணம் தவறென்பதை அவர் தொடர்ந்துபேசிய பேச்சு விளக்கியது. "யப்பானிய மக்கள் எருமைக் கொம்புகளைச் சீவிச் செம்மைப்படுத்திப் பேரீந்த மரத்தைப்போன்றும், சிறியவொரு தென்னை மரத்தைப்போன்றும் கவினுற அமைத்து விடுகின்றனர். எங்கள் நாட்டில் தான் எருமைகள் இருக்கின்றனவே!" என்று கூறிய அவர் என்னிடம் அப்பொருள்களைக் காட்டினார். "உண்மையிலேயே யப்பானியர் தலைசிறந்த கலைஞர்கள் தாம்" என்று நாம் அனைவரும் ஏகமனதாக ஒப்புக்கொண்டோம். இந்த இதமான சூழ்நிலையில் மெதுவாக விடைபெற்றுக் கொண்டே நானும் எனது நண்பரும் காரை நோக்கி விரைந்தோம். **இ. அ.**

# கேரளத்தில் ஜனாதிபதி ஆட்சி

## 2 மாதங்களில் பாராளுமன்ற அங்கீகாரம் பெறவேண்டும்

**இந்தியா**

கேரள இராச்சியத்தில் இந்திய ஜனாதிபதியின் ஆட்சி 31-7-59 இல் பிரகடனம் செய்யப்பட்டது. 28 மாதகாலமாக அதிகாரத்திலிருந்து வந்த கொம்யூனிஸ்ட் அரசாங்கமும் இராச்சிய சட்டசபையும் கலைக்கப்பட்டு இராச்சியத்தின் நிருவாகப்பொறுப்பு இந்திய அரசியல் திட்டப்படி ஜனாதிபதியின் கைக்கு மாறியிருக்கின்றது. இந்தப் பிரகடனத்தை இந்தியாவின் மத்திய பாராளுமன்றத்தின் இருசட்டசபைகளும் இரண்டுமாதகாலத்திற்குள் அங்கீகரிக்கவேண்டும். பாராளுமன்றம் அங்கீகரித்ததும் இப்பிரகடனம் மீண்டும் புதுப்பிக்கப்படாவிட்டால் ஆறுமாதகாலம் நடைமுறையிலிருக்கும். ஓர் இராச்சியத்தில் ஜனாதிபதியின் ஆட்சி தொடர்ந்து மூன்று வருடகாலத்திற்கு மேல் நிலைத்திருப்பதற்கு இந்தியாவின் அரசியல் திட்டம் இடமளிக்காது. நிலைமை சீரானதும் கூடிய விரைவில் பொதுத்தேர்தல் நடைபெறும் எனப் பிரகடனம் கூறுகின்றது.

ஜனாதிபதியின் சார்பில் கேரளத்தின் தேசாதிபதி, டக்டர் பி. இராமக்கிருஷ்ண ராவ் அரசாங்கப் பொறுப்பை மேற்கொண்டு நடாத்துவார். அரசியல் திட்டவிதிகளின்படி அரசாங்கத்தை நடாத்த முடியாது என ஜனாதிபதி கருதினால் இவ்வாறு செய்யலாம் என அரசியல் திட்டத்திலுள்ள 356-ஆவது விதி கூறுகின்றது.

இந்தியாவில் ஒரு இராச்சியத்தில் மாகாண சட்டசபையில் பெரும்பான்மை அங்கத்தவர்களின் ஆதரவுடன் இயங்கிவந்த ஒரு மாகாண மந்திரிசபை, சட்டசபையின் நம்பிக்கையை இழப்பதற்கு முன் ஜனாதிபதியினால் கலைக்கப்பட்டதற்கு இதுவே முதலாவது உதாரணமாக இருக்கின்றது. ஆகவே, ஜனாதிபதியின் செயல் சனநாயகவிதிகளுக்கு முரணானதாக இருக்கின்றது எனவாதிப்பதற்குப் போதிய நியாயங்கள் உள்ளன. இராச்சிய நிலைமை குறித்து தேசாதிபதி அனுப்பும் விவரங்களை அடிபபடையாகக் கொண்டே ஜனாதிபதி தமது விசேஷ அதிகாரங்களைப் பிரயோகிப்பது வழக்கம்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# ருஷிய-அமெரிக்க நல்லுறவு

## விரைவில் இருதேசத் தலைவர்கள் சந்திப்பு

**உலக நிலை**

நான்கு வல்லரசுகளின் நிபுணர்கள் சென்ற வாரம் பெர்லின் சிக்கல் சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப விபரங்களை ஆராய்ந்தனர்.

மேற்கு வல்லரசுகள் சமர்ப்பித்திருக்கும் திட்டம்16-6-59-ல் சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்துடன் பின்வரும் இரு சேர்க்கைகளையும் உடையதாக இருக்கின்றது.

1. ஐக்கிய நாடுகள் தாபன மேற்பார்வையாளர்கள் பெர்லின் நகரிலேற்படும் விரோதமான பிரசாரங்கள் குறித்து அறிக்கைகள் சமர்ப்பிக்கவேண்டும்.

2. ஜெர்மனி ஒரு நாடாக இணையாவிட்டால் ஐந்து வருடங்கள் கழிந்ததும் மீண்டும் பெர்லின் நிலைமை பரிசீலனை செய்யப்படவேண்டும்.

ருஷியா மேற்கு பெர்லினிலுள்ள மேற்கு வல்லரசுகளின் துருப்புகளின் எண்ணிக்கையை 11,000 த்திலிருந்து 4000க்கு குறைக்க வேண்டும் என்றும், ஒரு 18மாத இடைக்காலத்தில் மேற்கு பெர்லினில் அணு ஆயுதத் தளங்கள் அமைக்கக்கூடாது என்றும் கோருகின்றதாம். 18 மாத இடைக்காலத்தில் இரு ஜெர்மனிகளின் பிரதிநிதிகளும் கலந்தாலோசித்து ஒரு ஜெர்மனியாக இணையாவிட்டால் மீண்டும் நான்கு வெளிநாட்டு மந்திரிகளும் கூடி ஆராய வேண்டும் என்று ருஷியா விரும்புகின்றதாம்.

ருஷியா 18மாத இடைக்காலத் தீர்வை வற்புறுத்தினால் மாநாடு தோல்வியடையும் என்றும் சிலர் கருதுகின்றனர்.

ஜெனிவா மாநாடு 5-8-59 புதன்கிழமை முடிவடைந்தது.

### சைப்பிரசில் மீண்டும் கலவரமா?

சைப்பிரஸ் தீவில் கிரேக்க தலைவர் அதிமேற்றிராணியார் மக்காரியோசுக்கும் "எயோக்கா"வின் தலைவராக இருந்த ஜெனரல் கிறிவாசுக்கும் அபிப்பிராய பேதம் முற்றி வருகின்றது. ஜெனரல் கிறிவாஸ் சைப்பிரஸ் தீவின் எதிர்காலம் குறித்து சூரிச் நகரிலும் லண்டன் மாநகரிலும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளைக் கண்டித்துள்ளார்: ஜெனரல் கிறிவாஸ் சைப்பிரசில் நிலவும் ஒற்றுமையையும் அமைதியையும் சீர்குலைக்க முற்படுகின்றார் என மக்காரியோசும் துருக்கிய சைப்பிரியர்களின் தலைவர் டாக்டர் குச்சுக்கும் கூறியிருக்கின்றனர். சென்ற பெப்ரவரி மாதத்திற்குப் பின் முதன் முதலாக சைப்பிரசில் ஒரு வெடிகுண்டு விபத்தும் நிகழ்ந்திருக்கின்றது.

### உப ஜனாதிபதி நிக்ஸன்

அமெரிக்க உபஜனாதிபதி நிக்ஸன் சோவியத் ருஷியாவில் தமது சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு போலந்தின் தலைநகரான வார்ஸாவுக்குப் போய்ச் சேர்ந்தார்.

### பிரித்தானிய அரசி

பிரித்தானிய அரசி கனடாவில் தமது ஆறுவார கால சுற்றுப்பிரயாணத்தை முடித்து

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு ஆடி மீ 23உ (8-8-59)


## தலையிட்டது சரியா? தவறு?

கேரளத்திலே தலைமை அரசாங்கம் தலையிட்டது சரியா? தவறு? என்பது குறித்துக் கருத்து வேற்றுமை அதிகமுண்டு என்றாலும் இதன் பயனாக அங்கு அமைதி ஏற்பட்டதுபற்றி கேரள பொதுமக்கள் ஆறுதல் அடைவர்.

தலையிடாமல் இருந்திருப்பின் நிலைமை மிகவும் மோசமாகி இருக்குமென்றும், ஆகவே தாங்கள் தலையிட்டது தவிர்க்க முடியாததாகும் என்றும் சமாதானம் கூறுகிறார் பிரதமர் நேருஜி. என்றாலும், காங்கிரஸ் பார்லிமெண்ட் கூட்டத்திலேயே அவருக்கு என்றுமில்லாதபடி இவ்விஷயமாக அதிக எதிர்ப்பு இருந்தது. கம்யூனிஸ்டுகள் கண்டிப்பதில் வியப்பில்லை.

கம்யூனிஸ்ட் அரசாங்கத்துக்கு அங்கு சட்டசபையில் 'மெஜாரிட்டி' பலம் இருக்கையில், தலைமை அரசாங்கம் குறுக்கிட்டு, இந்தப் பாரதூரமான நடவடிக்கை எடுத்தது, ஜனநாயகத்துக்கும் மாகாண சுயாட்சிக்கும் மாறானதுமென்று குற்றம் சாட்டப்படுவதில் நியாயமுண்டு. சுமார் இரண்டு மாதகாலம் இவ்விஷயமாக நடவடிக்கை எடுக்காமல் நேருஜி தயங்கியதற்கும் இதுவே காரணமாக இருக்கலாம்.

ஆனால் மக்களால் அரசியல் ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஓர் அரசாங்கத்தை, அரசியல் முறைக்கு அப்பாற்பட்ட நேரடி நடவடிக்கைகளால் நீக்க முற்பட்டது சரியா? மற்ற எதிர்க்கட்சிகளுடன் காங்கிரஸும் சேர்ந்துகொண்டு இக்கிளர்ச்சிகளில் ஈடுபட்டது முறையா? பள்ளிக்கூடங்கள், பஸ்ஸுகள், கச்சேரி முதலியவற்றில் மறியல் செய்தது கூடாதென்று நேருஜியே கண்டித்தும், இந்த இயக்கத்தில் காங்கிரஸ் சேர்ந்து ஆதரவளித்தது எப்படி முறையாகும்? காங்கிரஸ் தலைமைப் பீடத்தின் கருத்தைச் சரிவரப் புரிந்துகொள்ளாமல் ஏதோ தவறு ஏற்பட்டதாக சமாதானம் கூறப்படுகிறது. ஆனால் தவறு தெரிந்தபின்னர், காங்கிரஸ் இந்த இயக்கத்திலிருந்து ஏன் விலகிக்கொள்ளவில்லை? காங்கிரஸ் சேராமல் ஒதுங்கியிருந்தால், இந்த இயக்கமே பிசுபிசுத்துப் போயிருக்குமென்பது கம்யூனிஸ்டுகளின் கட்சி.

இதேசமயத்தில் கம்யூனிஸ்ட் ஆட்சியைப்பற்றிப் பல குறைகள் கூறப்படுகின்றன. இக்குறைகளை, நீதிபதிகளடங்கிய கமிஷன் விசாரணை செய்து, அது கூறும் முடிவுகள்மீது தலைமை அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பின், பின்னர் கம்யூனிஸ்டுகளும் அதுபற்றிப் புகார் கூறமுடியாது போயிருக்கும். இனி வேறு மாகாணங்களிலும் இவ்வித தர்மசங்கடமான நிலை ஏற்படும்போது, புகாருக்கு இடமில்லாமல், ஒரு திட்டவட்டமான முறையைத் தலைமை அரசாங்கம் கைக்கொள்ள அரசியல் சட்டத்தில் தக்க திருத்தங்கள் செய்யவேண்டும். ஜனநாயக ஆட்சிமுறை புதிதாகையால் தவறுகள் ஏற்படுவது சகஜம். அனுபவம் காரணமாக இத் தவறுகளைத் திருத்திக் கொள்ளலாம்.

கேரளத்தின் அனுபவம் நம் இலங்கைக்கும் ஓர் எச்சரிக்கையாகும். இங்கு மக்களில் ஒரு சாரினருக்கு அரசாங்கம் தன் 'மெஜாரிட்டி' பலத்தால் தவறு செய்வதாயின், அவர்களுக்கு அரசியல்ரீதியாக எவ்வித பாதுகாப்பும் இல்லை. சென்ற சில வருட சம்பவங்கள் இதை நிரூபிக்கும். இந்தியாவிலாவது ஒரு தலைமை அரசாங்கமுள்ளது. இங்கு அதுவுமில்லை. ஆகவே கவர்னர் ஜெனரலுக்கு, இவ்விஷயமாக விசேஷ அதிகாரமும் பொறுப்பும் அளிக்கப்படுவதுடன், சமஷ்டி அல்லது மண்டல சுயாட்சியை ஏற்படுத்துவது அதிக அவசியமாகும். அரசியல் சீர்திருத்த சபை இதையெல்லாம் ஆராய்ந்து தக்க ஏற்பாடுகளைச் செய்வதாலே இலங்கையில் ஜனநாயக ஆட்சி சீராக நடக்கவும், சமாதானம் பாதுகாக்கப்பட்டு மக்கள் முன்னேறவும் முடியும்.

---

## மலைநாட்டுத் தமிழர்

இலங்கையிலே பிரஜா உரிமைபெற முடியாத சுமார் எட்டு லட்சம் மலைநாட்டுத் தமிழரின் எதிர்காலமென்ன? அவர்கள் இந்திய பிரஜைகளோ அல்லது வேறு எந்த நாட்டுப் பிரஜைகளோ அல்லவென்று டில்லி லோக சபையில் பிரதமர் நேருஜி தெரிவித்தார்.

இந்திய பிரஜா உரிமைச் சட்டப்படி, இந்தியாவில் ஒருவர் பிறந்தாலோ, அல்லது அவரது தகப்பன் அல்லது பாட்டன் பிறந்திருந்தாலோ, அவருக்கு இந்தியப் பிரஜா உரிமை உண்டு. இதன்படி பார்த்தால், இலங்கை மலைநாட்டில் குடியேறியுள்ள தமிழர் அனைவரும் இந்தியப் பிரஜைகளே என்றும், இங்கு பிரஜைகளாக முடியாது போன மலை நாட்டுத் தமிழரை, இந்தியாவே திருப்பி ஏற்கவேண்டும் என இலங்கை அரசாங்கம் கேட்கின்றது.

ஆனால் மலை நாட்டிலுள்ள தமிழரில் பெரும்பாலோரும் இலங்கையில் பிறந்தவர்கள். அவர்களுக்கு இந்தியாவே தெரியாது. அங்கு அவர்களைக் கொண்டு விடுவது கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோலிருக்கும். மேலும் அவர்கள் அனைவரும் ஏழைகள். கையில் பணமெதுவும் கிடையாது. இந்தியாவில் குடியேறி, புதிய வாழ்க்கை ஆரம்பிக்கக் கையில் போதிய பணமிருப்பின், அவர்கள் சிலர் இந்தியாப் பிரஜைகளாய்ப்பதிவு செய்துகொண்டு இந்தியா திரும்ப சம்மதிக்கக்கூடும். இதற்கான வசதிகளை இலங்கை அரசாங்கம் அளிக்குமா என்பதே கேள்வி.

டில்லியிலே முன்னர் ஏற்பட்ட ஒப்பந்தப்படி, இலங்கையிலுள்ள மலைநாட்டுத் தமிழர் யாரும் தாங்களாக இந்தியா திரும்புவதற்கான உதவியும் தூண்டுதலும் அளிப்பதாகவும் பார்லிமெண்டில் பிரதிநிதித்துவம் அளிப்பதாகவும் இலங்கை அரசாங்கம் மட்டுமன்றி, அன்று எதிர்க் கட்சியிலிருந்த பண்டாரநாயக்கா, டட்லி சேனநாயக்கா இவர்களும் ஒப்புக்கொண்டு கையொப்பமிட்டனர். ஆனால், பின்னர் அந்த ஒப்பந்தப்படி துரதிருஷ்ட வசமாக எதுவும் நடக்கவில்லை.

இதற்கு மாறாக, பெரும்பாலான பிரஜா உரிமை மனுக்களும், அற்ப காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டு விட்டன. இலங்கையின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்புபோலுள்ள மலை நாட்டுத் தமிழர் நாடற்றவர்களாக்கப் பட்டுள்ளனர். உதவிப் பணம்கொடுத்து இவர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பலாமென்று யோசனை கூறப்படுகிறது. உதவிப்பணம் கிடைத்தால் ஒரு சில ஆயிரம் பேர் இந்தியா செல்ல முன்வரக்கூடும். மற்றவர்களின் நிலை என்ன?

இதுபற்றி தாமாக ஏதும் செய்தால், யு. என். பி கட்சியும், வேறு சில அரசியல் எதிரிகளும் எதிர்ப்புக் கிளர்ச்சிகளை ஆரம்பிப்பரென்று பிரதமர் பண்டாரநாயக்கா தயங்குவது நியாயமே. இந்தியர் பிரச்சினையை, அடுத்த தேர்தலுக்கான ஆயுதமாகக் கொண்டு, துவேஷப் பிரசாரங்களைச் செய்ய ஏற்கனவே சிலர் கிளம்பி விட்டதைப் பார்க்கிறோம். நிலைமை வரவர மோசமாகுமோ என்றும் அஞ்சப்படுகின்றது.

நிலைமையை மோசமாக்க விடாமல் இப் பிரச்சினையை மனிதாபிமானத்துடன் தீர்க்க வேண்டிய அவசியத்தைப் பிரதமர் உணர்ந்தால், அவர் இதை கட்சி விஷயமாகக் கருதாமல், தேசிய விஷயமாகக் கருதி, யு. என். பி. உள்ளிட்டு மற்றக் கட்சித் தலைவர்களுடனும் கலந்து பேசி ஒரு சுமுகமான ஏற்பாட்டைச் செய்யலாம். எப்படியும் இதை உடனடியாகத் தீர்க்க முடியாவிடினும் இதைத் தேர்தலில் எந்தக் கட்சியும் பயன்படுத்தாமலும் இந்திய துவேஷத்தை வளர்க்காமலும் அவர் தடுத்தால் அதுவே பெரிய நன்மையாகும்.

---

## கவர்னர் ஜெனரல்

கவர்னர்ஜெனரல் பதவியில் இச்சமயம் எவ்வித மாறுதலையும் செய்யும் உத்தேசம் தமக்கு இல்லையென்று பார்லிமெண்டில் பிரதம மந்திரி பதிலளித்து இவ்விஷயமாக நிலவிய வதந்திகளை மறுத்துள்ளார். தாம் ஒரு விருந்துப் பேச்சில் வேடிக்கையாகக் கூறியதே இவ்வதந்திகளுக்குக் காரணம் என்றும், தமாஷ்செய்யத் தமக்கும் சந்தர்ப்பம் வேண்டுமென்றும் சொன்னார். இவ்விதமான மிகமுக்கிய விஷயங்களில் தமாஷ்செய்வது விரும்பத்தக்கதல்ல. என்றாலும் இச்சமயம் கவர்னர் ஜெனரல் பதவியில் மாறுதல் செய்யப்போவதில்லை என்று பிரதமர் அறிவித்தது பொதுவாக வரவேற்கப்படும்.

இப்போது அப்பதவியை வகிக்கும் சேர் ஒலிவர் குணத்திலக்கா, நிர்வாக அனுபவமும், திறமையும், பொதுமக்களிற் பலரது நம்பிக்கையையும் பெற்றவராவார். சென்ற ஆண்டில் வகுப்புக்கலகம் ஏற்பட்டபோது, அதை வெற்றிகரமாகச் சமாளித்து அடக்கினார். சிறப்பாகத் தமிழர் செய்த புகார்களை உடனுக்குடன் கவனித்துக் கூடுமானதைச் செய்தார். இப்போது நிலைமை அமைதியாகத் தோன்றினும் எந்தச் சமயமும் எதுவும் ஏற்படலாம். தேர்தல் நெருங்க நெருங்க, துவேஷப் பிரசாரங்கள் அதிகரிக்கின்றன. ஆகவே இச்சமயம் சேர் ஒலிவரைப் போன்ற அனுபவமும், ஆற்றலும் மிக்க ஒருவர் கவர்னல் ஜெனரல் பதவி வகிப்பதே விரும்பத்தக்கது. புதிதாக யாரையும் இச்சமயம் அப்பதவிக்கு நியமிப்பதாயின், அவர்பாடு சங்கடமாவதுடன், நாட்டின் அமைதிக்கும் அது நல்லதாகாது.

---

## இசையும் சபையும்

யாழ்ப்பாணம் மக்கள் இசைத்துறையில் ஆவல் கொள்ளவும் இசைவிழாக்களிற் பங்குபற்றி இசைஞானத்தைப் பெருக்கவும் யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபா ஆண்டுதோறும் நடாத்திவரும் இசைவிழாக்களும் பெரிதும் உதவியாக இருந்து வந்தன. இவ்வாண்டு வழக்கம்போல் ஏப்ரில் நடைபெறவேண்டிய இச்சபாவின் இசைவிழாவில் ஹரிஜனக் கலைஞர்கள் அனுமதிக்கப்படவாகாதெனச் சபாசெய்துள்ள தீர்மானத்தின் விளைவாக இவ்விழா நடைபெறவில்லை. இது மிகவும் பிற்போக்கான செயல் என்பதை நாம் ஆரம்பத்திலேயே எடுத்துக் காட்டியிருந்தோம். சமத்துவமும் சுதந்தரமும் பேசி உரிமைப்போராட்டம் நடாத்தப்படும் இந்நாட்களில் எமது சகோதரர்களில் ஒருசாராரை ஒதுக்கி வைத்துவிடுவது சரியாகாது இவ்வாரம் இச்சபா நடாத்தும் இவ்விழா பொதுசன அபிப்பிராயத்துக்குச் சவால்விடும் முறையில் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றதென்ற கருத்தும் நிலவிவருகின்றது. இதே வேளையில் "பின் தங்கியுள்ள கலைஞர்களுக்குப் பூரண வசதியளித்து அவர்களை முன்னணிக்குக் கொண்டு வருவதே எமது நோக்கம்" எனவும் 'இதற்காக மூன்றுமாதங்களுக்கு ஒரு முறை இடைக்கால இசைவிழாக்களை நடாத்துவது' எனவும் சபாவின் அறிக்கை கூறுகின்றது. இந்த நல்ல நோக்கம் ஆண்டுவிழாக்களில் எதற்காகச் செயற்படாதிருக்கின்றதென்பதுதான் எமக்கு விளங்கவில்லை. சொந்த விருப்பு வெறுப்புக்கள் சபைக்குள் புகுந்து பொதுவாழ்வின் ஒற்றுமைக்குப் பங்கம் விளைப்பது விரும்பத்தக்கதல்ல. அடுத்துவரும் விழாக்களில் ஹரிஜனக் கலைஞர்களுக்கு இடமளிக்கப்படுமெனக் கூறப்படுகிறது. இவ்வாண்டு விழாவிலேயே இதனை அவர்கள் நிறைவேற்றியிருந்தால் மக்களின் ஆதரவைப் பெற்றிருப்பார்கள்.

---

## இலட்சிய வீடு

"இலட்சியவீட்டைப் போய்ப் பார்க்கலாமா?" என்று நண்பர் ஒருவர் அழைத்தார். பார்க்க யாருக்குத்தான் விருப்பம் இராது? அதிலும், கொழும்பிலே நம்மில் பலருக்கும் ஒண்ட ஏதாவது இடம் கிடைத்தால் போதும் என்று இருக்கிறோம். இப்படிக் கஷ்டப்படும் நமக்கு இலட்சிய இல்லத்தைக் கண்ணாலாவது பார்க்கலாம் என்று தோன்றுகிறதல்லவா?

நண்பரும் நானும் காரில் சென்றோம். நாங்கள் செல்லுகையில் இரவு 7 மணி. காரை நிறுத்த இடமேயில்லை! எங்கும் ஒரே கார் மயம். கொழும்பில் உள்ள கார்களெல்லாம் அங்கு வந்துவிட்டனவோ என்று தோன்றியது! சற்றுநேரம் சுற்றிச்சுற்றிவந்து, கடைசியாக இரண்டு பர்லாங் தூரத்திலே ஒரு இடத்தில் காரை நிறுத்தி விட்டு நடந்துசென்றோம்!

கொழும்பில் பல க்யூ வரிசைகளைப் பார்க்கிறோம். சினிமா க்யூ, பஸ் க்யூ, ரயில்வே க்யூ சங்கக்கடை க்யூ இன்னும் எவ்வளவோ க்யூக்கள். ஆனால் ஷெல் கம்பெனியின் இலட்சிய வீட்டுக் காட்சிக் கியூபோல் அழகான நீண்ட க்யூவை நான் கண்டதில்லை. அழகுக்குக் காரணம் பெண்கள் தான். கல்யாண உடை தரித்து, புதுமணப் பெண்கள்போல், பலர் ஜோடி ஜோடியாக இலட்சிய வீட்டைப் பார்க்க ஆவலுடன் காத்திருந்தார்கள். வெளியிலுள்ள அந்தக் க்யூ'வரிசையே, கண்ணுக்கு அரியதோர் விருந்தாகக் காட்சியளித்தது!

உள்ளே சென்றோம். எங்கும் ஒரே கூட்டம். ஒரே அழகு மயம். ஜவுளிக்கடை முதல் சொக்லெட் கடைவரை பல பல கடைகளும் வா, வா என்று அழைக்கின்றன. அவை நவராத்திரி கொலு வைத்தது போல் இருந்தன.

இதையெல்லாம் கண்ணோட்டமாகப் பார்த்தபின் இலட்சிய வீடு எங்கேயிருக்கிறதென்று தேடினோம். தெரியவில்லை. ஆனால் அடி நுனி தெரியாமல் ஒரு நீண்ட க்யூ வரிசை வளைந்து வளைந்து நின்றுகொண்டிருந்ததைக் கண்டோம். அது இலட்சிய வீட்டை அடையக் காத்துள்ளதென்பது தெரிந்தது. ஆனால் அதில் நின்றால், மறுநாளும் அதைப் பார்க்க முடியுமா? என்பது சந்தேகம். நேரே அங்கிருந்த ஓர் அதிகாரியிடம் சென்று பத்திரிகைக்காரனென்றும், 'க்யூ'வில் காத்திருக்க நேரமில்லையென்றும் தெரிவித்ததும், அவர் அன்புடன் உள்ளே அழைத்துச் சென்றார். பத்திரிகைக்காரனாக இருப்பது சிலசமயம் நல்லதல்லவா?

* * *

புதுவீடு ஒரு சின்ன பங்களா. மேலே நாட்டு ஓடு. வெளியே மூங்கில்தடி வேலி. அதற்குள் சுற்றித் தோட்டம். பச்சைப்பசேலென்று காய்கறிகள். விவசாய இலாகா வைத்துள்ளதாம். ஜன்னல்கள் ஏராளம். எல்லாம் கண்ணாடி. ஒரு தட்டுத் தட்டினால் பொலபொலத்து விடலாம். இன்று ஊர் இருக்கிற இருப்புக்கு, இந்தமாதிரி வீடு பத்திரமா? ஆனால் இதுவோ இலட்சிய ஊருக்கான இலட்சிய வீடு! நமக்கு வேண்டுமானால் இரும்புக் கம்பி ஜன்னல் போட்டுக் கொள்ளலாம் என்றார் நண்பர்.

முன்புறம் போர்டிக்கோ. உள்ளே விசாலமான அறை. புத்தக அலுமாரி. நாற்காலி மேசை. ஐஸ் பெட்டி, சுத்தமான சமையல்அறை, குளிக்கும் அறை,படுக்கைஅறையெல்லாம் கண்ணையும் மனத்தையும் கவர்ந்தன. அங்கேயே தங்கிவிடலாம் போலிருந்தது. ஆனால் இது

(9ஆம் பக்கம் பார்க்க)

## ரஸிக ரஞ்சன சபா

### இசை விழாவில் கருத்து வேற்றுமை

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபாவின் எட்டாவது ஆண்டு இசைவிழா யாழ்ப்பாணம் அரசடி விநாயகர் முன்றிலில் அமைக்கப்பெற்றுள்ள பந்தலில் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஆரம்பமாயிற்று. இவ்விழா தொடர்ந்து செவ்வாய்க்கிழமை 11–8–59 வரை நடைபெறும். சென்ற ஏப்ரலில் பெருமாள் கோவில் முன்றலில் நடைபெற வேண்டிய இவ்விழா ஹரிஜனக் கலைஞர் ஒருவர் கச்சேரி செய்வதைச் சபையினர் சிலர் விரும்பாத காரணத்தால் நடைபெறவில்லை. இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள இவ்விழாவிலும் ஹரிஜனக் கலைஞர்கள் அனுமதிக்கப்படவில்லை. "சபையிலிருந்து விலகியவர்களுக்குச் சவால் விடுக்கும் தோரணையில் விழா நடைபெறுமென்று தெரிகிறது. அப்படியானல் அது தமிழர் சமுதாயத்துக்கே இழுக்கை உண்டாக்குவதாகும். அதனல் ரசிக ரஞ்சன சபாவின் இச்செயலை யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் கண்டிப்பதுடன் விழாவைப் பகிஷ்கரிக்கும்படியும் நாங்கள் கேட்டுக்கொள்ளுகிறேம்" எனச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையிற் கண்டிருக்கின்றது.

பிரபல இசைக் கலைஞர்கள் பலர் பங்குபற்றும் இவ்விழாவில் திரு. எஸ். கார்த்திகேசு (பகிரங்க சேவைப் பகுதி தலைமை எஞ்சினியர்) வடபகுதி கல்வி அதிகாரி திரு. எஸ். யூ. சோமசேகரம், டக்டர் கே. சிவஞானரத்தினம் அவர்கள் முறையே தலைமையுரை நிகழ்த்துவார்கள்.

முதல் நாள் விழாவிற்குத் தலைமை வகிக்கவிருந்த மேயர் அல்பிறெட் துரையப்பா, தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களினல் தாம் தலைமை வகிக்க முடியாதெனத் அறிவித்துள்ளார். இவ்விழாவிற்குத் தலைமை வகிக்கவிருந்த வேறு சில பிரமுகர்களும் இதில் பங்குபற்றத்தமக்கு விருப்பமில்லையென தெரிவித்துள்ளனராம்.

### யாழ்ப்பாணம் அரசாங்க ஊழியரின் வருடாந்தப் பொதுக்கூட்டம்

அகில இலங்கை அரசாங்க ஊழியரின் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் ஒன்று சென்ற 29-7-59 புதன்கிழமை மாலை நடைபெற்றது. பின்வரும் உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு.எம். ஸ்ரீகாந்தா.

உபதலைவர்: திரு. எஸ். இலங்கைநாயகம்.

காரியதரிசிகள்: திரு. கே. ஸி. மகாதேவா, திரு. எஸ். ரத்தின சபாபதி.

பொருளாளர்: திரு. எம். ஆறுமுகம்.

போசனசாலை இணைக் காரிய தரிசிகள்: திரு. ஜே. அருளானந்தம், திரு. என். தவவீரசிங்கம்.

விளையாட்டுக்காரியதரிசி: திரு. ஏ. ரத்தினசிங்கம்.

அத்துடன் சங்கத்தின் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது. அதன் அங்கத்தவர்களாகத் திருவாளர்கள் தி. பூபாலன், ஜே. எஸ். எஸ். ஆனந்தம், என். தவவீரசிங்கம், எம். முருகுப்பிள்ளை ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

### இலட்சிய வீடு

(8ஆம பக்கத் தொடர்ச்சி)

சரிப்படுமா? 17 பரப்பு நிலத்தில் 10 ஆயிரம் ரூபாய் செலவில் இது கட்டப்பட்டுள்ளது.

நம்மிற் பலருக்கும் இவ்வித வீடு கிடைக்க முடியுமா? மோட்சவீடு கிடைத்தாலும் கிடைத்துவிடும்; இவ்வித இலட்சிய வீடு இலட்சியமாகவே இருந்துவிடுமோ என்று தோன்றியது!

—ஐயாறன்

# இரத்தினக் கம்பளம்

பதுமன்

இன்றைய எழுத்தாளரின் முக்கிய கடமைகளைப்பற்றிச் சென்னையிற் சென்ற வாரம் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மாநாட்டிற் பலர் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். மாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்திய திரு. சோ. சிவபாதசுந்தரத்தின் கருத்து இவற்றுக்கெல்லாம் சிகரம் போல அமைந்துள்ளது. எழுத்தாளரின் முக்கிய கடன் தமது கலைப்பணியின் தரத்தை மேலோங்கச் செய்ய வேண்டியது. மக்களின் உள்ளம் பக்குவம் அடையவில்லை என்ற காரணத்தால் அவர்களின் மேலோட்டமான சிந்தனைக்கு உவப்பளிக்கும் பயனற்ற வேஷதாரி இலக்கியங்களையும், ஆழமற்ற, அர்த்தமற்ற சொல்லலங்காரச் சிருஷ்டிகளையும், இலக்கியம் என்ற போர்வையில் தந்து, மக்களின் மனப் பக்குவத்தை வளர்ப்பதற்குப் பதிலாக, அவர்களின் சிற்றுணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு மாத்திரம் பெருமை கொள்வது ஆக்கப்பணியல்ல; அழிவுப் பணியென்று தான் சொல்ல வேண்டும். 'கலரி'யைத் தூண்டிவிட்டு அந்த வரிசையில் இருப்பவர்களிடம் 'சபாஷ்' பெறுவதில் ஒரு திருப்தி உண்டுதான். ஆனல் அது நீர்க்குமிழி போன்ற ஒரு திருப்தி. நிலையற்ற இன்பம்...... ஜனநாயகம் என்ற போர்வையில், பெருமளவான மக்களைத் திருப்திப்படுத்த வேண்டுமென்று ஒரு சில கலைத்துறைகளில் நுழைந்துவிட்ட இந்த மதம், இலக்கியத் துறையையும் ஆட்கொண்டு விடுமோவென்று அஞ்சுகின்றேம். இவ்வாறு ஈழத்தின் இலக்கியச் செல்வரான திரு. சிவபாதசுந்தரம் மாநாட்டிற் கூறியிருப்பதை எழுத்தாளர்கள் அனைவரும் ஊன்றி நோக்க வேண்டும். மக்களின் உள்ளத்தை வசப்படுத்துவது வேறு; வழிப்படுத்துவது வேறு என்பதில் எவ்வளவோ உண்மை பொதிந்திருக்கின்றது.

### தமிழுக்கு உழைத்தவர்கள்

தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் இவ்வாண்டு இலக்கியச் செல்வர் திரு பி. ஸ்ரீ. ஆச்சார்யாவுக்கும், பத்திரிகை உலகில் தமது முத்திரையைப் பதித்துள்ள ஆசிரியர் திரு. டி. ஏஸ். சொக்கலிங்கத்துக்கும் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் கேடயங்கள் வழங்கப்பட்டன. தமிழின் வளர்ச்சிக்கு இப்பெரியார்கள் செய்துவரும்சேவையை யார்தான் பாராட்டாது இருக்கமுடியும். ஸ்ரீ சொக்கலிங்கம் பேசும்போது தெரிவித்துள்ள கருத்தைத் தமிழ் எழுத்தாளர்களில் ஒரு சாரார் ஏற்பார்களோ தெரியவில்லை. தபால் கார்ட்டுகளை எந்த மொழியில் அச்சிடுவது என்பது போன்ற பிரச்சினைகளை விடுத்து பெரிய பிரச்சினைகளில் கவனம் செலுத்தினல் நல்லதென அவர் கூறியிருக்கின்ருர். பழுத்த தேசபக்கர் ஒருவர் இப்படிக்கூறுவதற்குத் தக்ககாரணம்இருக்கத்தானே வேண்டும்.

இம் மாநாட்டின்போது தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் வெளியீடாகிய **பாரதி** சிறப்பு மலராக மலர்ந்துள்ளது.

### வசிட்டர் வாயிலிருந்து...

தவத்தால் மிகச் சிறந்த வசிட்டரின் வாயிலிருந்து 'பிரம்மரிஷி' என்ற பட்டத்தை வாங்குவதென்ருல் அது அவ்வளவு இலேசான காரியமல்ல. இது பாரத நாட்டுக்குரிய மிக மிகப் பழைய சமாச்சாரம். இதனை நினைவுபடுத்தும் புதிய நிகழ்ச்சியொன்று மொஸ்கோ நகரில் நடைபெற்றிருக்கின்றது. அமெரிக்கத் தலைவரின் குணநலன்களை சோவியத்துப் பிரதமர் பாராட்டியிருக்கின்ருர். அதாவது குருஷ்ஷேவ் ஐசனேவரைப் புகழ்ந்து பேசியிருக்கின்ருர். மொஸ்கோவிலுள்ள அமெரிக்கத் தூதுவர் காரியாலயத்து விருந்துவைபவம் ஒன்றிலே ருஷிய மக்களின்தலைவர் பேசியதாவது: நானும் எனது தோழர்களும் உட்பட ஐசனேவரை விரும்புகின்றேம். ஏனெனில் சென்ற உலகமகாயுத்தத்தின் போது அவருடன் சேர்ந்துநின்று ஹிட்லருக்கு எதிராக நாங்கள் போராடினேம். அப்போது அவருடைய பண்பு நலன்களை நன்கு அறிய முடிந்தது. அவர் நேர்மையும், பெருந்தன்மையும் மிகுந்த புருடர்.

இப்படிப் போற்றிப்புகழும் வாய்பின்னர் தூற்றி இகழ்வதற்கு, மகா வல்லமை பொருந்திய டொலர் மாமா சந்தர்ப்ப மளிக்கக்கூடாதென்பதே பதுமனின் பிரார்த்தனை.

### மண்சுமந்த கதை!

சிவபெருமான் பிட்டுக்கு மண்சுமந்து முதுகில் பளீர் பளீர் என்று அடிவாங்கிய கதையைப் பலர் அறிவார்கள். இறைவனே தொண்டர்க்குத் தொண்டனகி விளங்கித் தமது அற்புதத்தை உலகறியச் செய்தார்.

சிங்கப்பூரில் காற்சட்டை கோற் அணிந்த ஆயிரம் சிவில்சேவை அதிகாரிகள் சென்ற ஞாயிற்றுக்கிழமை வீடுகளிலுள்ள தமது பிரம்புக்கதிரைகளில் கால்களை நீட்டிக்கொண்டு ஹாயாக விருந்து, பத்திரிகைகளைப் புரட்டவில்லை. பின்னர் வேறு என்னதான் செய்தனர். அன்று இவர்கள் சிங்கப்பூர்க் கடற்கரையோரத்தில் அழகான நடைபாதை அமைக்கும் வேலையில் ஈடுபட்டார்கள்.

சிவபெருமான் பிட்டுவாணிவிச்சிக்காக மண்சுமந்தார். உலர்ந்த பிட்டைச் சம்பளமாகப் பெற்ருர். இந்தச் சிங்கப்பூர் சிவில்சேவிஸ்காரர் தேசிய விருத்திக்காகத் தேசியத் தொண்டாற்றினர். சிங்கப்பூர் அரசாங்கம் சிவில் சேவை அதிகாரிகளின் சம்பளத்தை வெட்டியிருப்பதும் இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடத்தக்கது.

### தமிழரசுக்கட்சியின் எதிர் காலத்திட்டங்கள் பற்றி யாழ்ப்பாணத்தில் ஆலோசனை

தமிழரசுக்கட்சியின் எதிர்காலத் திட்டங்களைப் பற்றி ஆராய்ந்து முடிவு செய்வதற்காகவும், கட்சியின் போராட்டம் யாருடைய தலைமையில் நடைபெற வேண்டுமென்ற விவரங்களைத் தீர்மானிப்பதற்காகவும் கட்சியின் கூட்டம் ஒன்று இம்மாதம் 15-ம், 16-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

### நல்லூர் உற்சவத்தில் பெரிய புராண விழா

நாளை ஞாயிற்றுக்கிழமை நல்லூர் கந்தசுவாமி கோவிலில் கொடியேற்றம். நாளை முதல் 22 நாளும் முத்தமிழ் மணி ஸ்ரீ மணிபாகவதர் இரவு 9 மணிக்கு இக் கோவிலில் பெரிய புராண சங்கீத கதாப்பிரசங்கம் செய்கிருர்.

### தோட்டத் தொழிலாளருக்கு சம்பளத்துடன் விடுமுறை நாட்கள்

தேயிலைத் தோட்டத் தொழிலாளருக்கு இனி புதிதாக தைப்பொங்கல், தீபாவளி, புதுவருடப்பிறப்பு, மே தினம் இந்நான்கு நாட்களும் சம்பளத்துடன் விடுமுறை விடுவதென்று தேயிலை சம்பள சபை தீர்மானித்தது. சம்பள உயர்வு பற்றிய விஷயம் அடுத்த கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படும்.

### சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆண்டுப் பரிசளிப்புவிழா

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா 11-8-59 செவ்வாய்க்கிழமை மாலை 5-30 க்கு நடைபெறும். சென்னை, கிறிஸ்தவ மகளிர் கல்லூரி அதிபர். திருமதி ரேணுகா முக்கர்ஜி இவ்விழாவிற் பங்குபற்றி விரிவுரை யாற்றுவார்.

### கொழும்பில் 2லட்சத்து 20ஆயிரம் செலவில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஸ்தாபனம் குஜராத்திகளுக்கு மட்டும் தானு? என்று கேட்டதற்கு "இல்லவே இல்லை. இந்து பொதுமக்கள் எல்லாருக்கும்தான். சமய, சமூக, கலாசார சேவைகளுக்குப் பூரணமாகப் பயன்படவே இதை ஆரம்பித்திருக்கிறேம்" என்ருர்.

முன்புறம் அழகான "கமலா மோடி மண்டபம்". 350 பேர் வரை உட்காரலாம். நாடகங்கள் நடிக்கவும், சினிமாப்படங்கள் காட்டவும் வசதியுள்ளதுடன், வாசகசாலையும், விருந்தாளிகள் தங்கியிருக்க நவீன வசதிகளுடன் மச்சிலே 10 'டபிள்' அறைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

"கொழும்பிலே நல்ல முறையில் நடைபெறும் சைவ உணவு ஹோட்டல்கள் இல்லாததால், பம்பாய் முதலிய இடங்களிலிருந்து அதிகயாத்திரீகர்கள் இங்கு வருவதில்லை. ஆகவே சில தேர்ச்சிபெற்ற சமையற்காரர்களை இந்தியாவிலிருந்து வரவழைத்து, இங்கு நல்ல சைவ உணவும் அளிக்க, அரசாங்கத்தை அனுமதி கேட்க இருக்கின்றேம். இது கைகூடினல் இந்தியாவிலிருந்து அதிக விருந்தாளிகள் இங்கு வரக்கூடும்" என்ருர்.

குஜராத்திகள் மிகச் சிறிய சமூகமாக இருந்தும், இந்தப் பொது சமூக ஸ்தாபனத்தை நல்ல முறையில் அமைத்துள்ளது, பாராட்டத்தக்கது. கொழும்பில் இந்துக்கள் தேவையை இது ஓரளவு பூர்த்தி செய்வதாகும்.

## இந்தியாவுடனே இலங்கையை ஆண்டவனே பிணைத்துள்ளார்

(1-ம் பக்க தொடர்ச்சி)

மீறி, இங்குள்ள இந்தியரில் பலர் இந்தியா சென்று இரண்டொரு மாதங்கள் அங்கு இருந்துவிட்டுக் கள்ளத்தனமாகத் திரும்புகிருர்கள். வருகிறவர்களில் பெரும்பாலோருக்கும் சிங்களம் நன்ருகப் பேசத்தெரியும். புதிதாக இங்கு இந்தியாவிலிருந்து வருகிறவர்கள் மிக மிகக் குறைவு. இந்தக் கள்ளப் பிரயாணத்தை குறைக்க வேண்டுமாயின் அதற்கு ஒரே மேலான வழி, இங்கு நாடற்றவர் பிரச்சினையைச் சீக்கிரத்தில் மனிதாபிமானத்துடன் தீர்த்து, பிரயாணக் கட்டுப்பாடுகளைப் பெரிதும் தளர்த்தி, எல்லாருக்கும் பிரயாண உரிமையை அளிப்பது தான்" என்ருர்.

இதை அந்த அதிகாரியிடம் கூறியதற்கு, அவர், தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் பொருளாதார ஏற்றத்தாழ்வு இருப்பதாயும், இதுதான் கள்ளக் குடியேற்றத்துக்கு முக்கிய காரணமென்றும் கூறினர். கள்ளக் குடியேற்றம் இது ஒரு பெரிய வியாபாரம்போல சிலரால் நடத்தப்படுகிறதாம். இராணுவக் காவலர் கண்டுவிட்டதை அறிந்தால், தோணிக்காரர்கள் படகிலுள்ளவர்களைக் கழுத்தளவு தண்ணீரில் அப்படியே தள்ளிவிட்டுவிட்டுக் கம்பிநீட்டிவிடுவதாயும், இதனல் பல உயிர்ச்சேதங்களும் ஏற்படுவதாயும் சொன்னர்.

தோணிகளில் இட்டுக் கொண்டுவிட்டு, சாரம் கொடுத்து, சில இடங்களில் வேலைக்கு அமர்த்திவிடுவதாயும், வடக்கு கிழக்கு மாகாணங்களில், விவசாயத்துக்கு ஆட்கள் அதிகம் தேவைப்படுவதால், இந்தியாவில் இருந்து குறைந்த கூலிக்கு ஆட்களைக் கொண்டுவந்து சேர்ப்பதாயும் அவர்கள் ஏதாவது அதிகச் சம்பளம் வேண்டுமென்று முணுமுணுத்தால், "இதோ போலீஸில் காட்டிக் கொடுத்துவிடுவோம்" என்றும் அவர்களைப் பயமுறுத்துவதாயும் சொல்லப்படுகின்றது. கள்ளத்தனமாக வந்தவர்களின் நிலைமை நித்திய கண்டமாகவும், எப்போது யார் காட்டிக் கொடுத்து விடுவார்களோ என்று சதா அஞ்சியஞ்சி வாழும்படியாகவும் இருக்கிறதென்றும் தெரிகிறது.

மன்னர்ப் பக்கத்திலிருந்து சில முஸ்லீம் கசாப்புக்கடைக்காரர்கள் இந்தியா சென்று தங்கள் பெண்டுபிள்ளைகளைத் தோணிவழியாக அழைத்துவந்ததாயும், அவர்கள் அனைவரும் பிடிபட்டு, திருப்பி அனுப்பப்பட்டதாயும், இதையெல்லாம் பார்க்கப் பெரிய கண்ருவியாக இருந்ததென்றும் அதே அதிகாரி கூறினர்.

### அரிசி ரேஷன் புத்தகம்

'இலங்கையிலிருந்து இந்தியா செல்லும் இந்தியர், இனி அரிசி ரேஷன் புத்தகத்தைக் கச்சேரியில் கொடுத்து ரசீது பெற்று, பின்னர்தான் டிக்கட் பெறலாம் என்று உத்தரவிடப் போகிறீர்களா?' என்று அதிகாரியைக் கேட்டேன்.

"அப்படி எவ்வித முடிவும் செய்யவில்லை. யுத்தகாலத்தில் இருந்ததுபோல், யார் இத்தீவிலிருந்து வெளிநாடு செல்வதாயினும் சரி, எல்லாரும் ரேஷன் புத்தகத்தைத் தக்க அதிகாரியிடம் ஒப்புவித்துவிட்டுச் செல்லவேண்டும் என்று செய்யலாமா? என்று ஒரு யோசனை கூறப்பட்டுள்ளது. இந்தியருக்கு மட்டுமல்ல. இதைப்பற்றி எவ்வித முடிவும் செய்யப்படவில்லை" என்ருர்.

கள்ளத்தனமாக வந்தால், எச்சரித்ததும், தோணி நிறுத்தப்படாவிடில், கடற்படை துப்பாக்கிப்பிரயோகம் செய்யுமென்றும், இந்திய அரசாங்கமும் இதை நிறுத்தத் தீவிர நடவடிக்கை எடுப்பதாயும், இந்தியாவிலே இவ்விஷயமாகத் தீவிரமாகப் பிரசாரம் செய்து, இதுபற்றிய ஆபத்துக்களையும் சங்கடங்களையும் எடுத்து விளக்கி, கள்ளத்தனமாக யாரும் வராமல் எச்சரிக்கை செய்யவேண்டும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

மாதர் பகுதி

# குடும்பப் பெண்களின் சங்கடங்களை நீக்குவதற்கான புதிய சங்கம்

கொழும்பிலே சென்ட் பிரிஜட்ஸ்கொன்வென்ட்பள்ளிக்கூட மைதானத்தில் நடைபெற்ற "இலட்சிய வீட்டு"கண்காட்சியிலே "இலங்கைக் குடும்பப் பெண்கள் சங்கம்'' என்று ஓரிடத்தில் 'போர்டு' போட்டிருந்தது. உள்ளே சென்றேன். அங்கு ஒரு பெண்மணி இருந்தார். உங்கள் சங்கம் எப்போது ஆரம்பமாயிற்று? நோக்கமென்ன? என்று விசாரித்தேன். சங்கம் ஆரம்பித்து ஒரு வருடமாகிறதென்றும், நோக்கம், குடும்பப் பெண்களின் கஷ்டங்களையும் சிக்கல்களையும் அறிந்து கூடுமானவரை நீக்குவதுதான் என்றும் சொன்னார்.

சிறப்பாக வாழ்க்கைச் செலவுகள் அதிகரிப்பதால், குடும்பப் பெண்களுக்குக் கஷ்டம் அதிகமாகிறதென்றும், அதைக் கூடுமானவரை குறைக்கச் சங்கம் முயற்சி எடுப்பதாகவும் சொன்னார்

ஐம்பது பெண்களடங்கிய பல கமிட்டிகள், வாழ்க்கைச் செலவு, வீட்டு நிர்வாகம், உடைகள், உணவு, சுகாதாரம், கல்வி, வீட்டு வசதிகள், வர்த்தகர்களிடம் விலைபற்றிய சலுகைகள் பெறுவது, குடும்பப் பெண்களுக்குப் பயனுள்ள தகவல்களைத் தெரிவிப்பதுபோன்ற பல விஷயங்களைக் கவனிப்பதாகத் தெரிவித்தார்.

இச் சங்கத்தைச் சேர்ந்த குடும்பப் பெண்களுக்கு, கொழும்பிலுள்ள மில்லர்ஸ், ஸெவன் ஓ கிளாக்ட, ஹிர்தராமணி, சண்டிராம், ஜே. எல். கார்வாலியோ, மூஸாஜி, ரிச்சர்ட் பீரிஸ், ஈ. கே. பிரான்ஜேர்ஸ், ஸிட்டம்ஸ், ஸி. வி. பாட், தயாஞ, சார்தாஸ் ஒண்டுலண்ட், போர்ட்புட்வேர், பியூடிசென்டர், புரோஹாம்ஸ், கலிங்க, ஷேலக்ராம், ஸிகலான் ரீடர்ஸ் புக்ஷாப், கிரவுன் ஸில்க் ஸ்டோர்ஸ், ஆவ்ரா, ஸீ டில்ஸ், அஸின்ஸ்லிசுக், தர்மா கம்பெனி, ரெய்மூ, ஸிலோன் புக்ஹவுஸ், பீபுக், ஸிட்னிஸ்டோர்ஸ், ஒலிலெட்டி ஆபீஸ் எக்குவிப்மென்ட், முதலிய பல வர்த்தகஸ்தாபனங்கள்,விலையில் 100க்கு 5முதல் 10 வரை டிஸ்கவுண்ட் கழித்துச் சலுகை அளிக்கவும் ஒப்புக்கொண்டிருக்கிறார்களாம். சபாஷ்! யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி முதலிய பல ஊர்களிலும் இவ்வித சங்கங்களைப் படித்த குடும்பப் பெண்கள் ஏற்படுத்திக்கட்டுப்பாடாக வேலை செய்தால் எவ்வளவோ நன்மையாக இருக்கும். பிரிட்டன் முதலிய நாடுகளிலே, குடும்பப் பெண்கள் சங்கம் ஏற்பட்டு, பலவித கஷ்டங்களுக்கும் நிவாரணம் தேடிக்கொண்டிருக்கின்றன.

இலங்கை குடும்பப் பெண்கள் சங்கத்தார், இக் காட்சி சம்பந்தமாக ஒரு அழகான விசேஷ மலரை வெளியிட்டுள்ளனர்.

இச் சங்கத்தின் தற்காலிக தலைவரான ஸ்ரீமதி ராணி எலியேஸர், "எதிர்கால வேலை" யைப்பற்றி ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

கல்வி, அரசியல் முதலிய பல துறைகளிலும் பெண்கள் அதிக சிரத்தை காட்டி முன்னேறிவருவது பெருமை அளிக்கிறதென்றும், பார்லிமெண்ட் தேர்தலில் மட்டுமன்றி, கிராம அர்பன்சபை தேர்தல்களிலும் கவனம் செலுத்தி தங்கள் சமூக தேசியப் பொறுப்புகளை நிறைவேற்ற ஆரம்பித்துள்ளதாகவும் கூறிவிட்டு மேலும் ஸ்ரீமதி ராணி கூறுவதாவது:

சமீபகாலம்வரை வீட்டுக்குள்ளே திரைக்குப் பின்னிருந்து பெண்கள் செய்துவரும் சில காரியங்களைக்காண நாம் வியப்படைகிறோம்.நம்மிற் சிலர் விலைவாசிகள்உயர்வதைப்பற்றி முறைப்பதுடன் நில்லாமல் அதைக் குறைக்க ஏதோ ஓரளவு காரியம் செய்யத் தீர்மானித்துள்ளோம். உணவு, உடை, குழந்தைகளின் வேலை இவற்றில் மட்டுமன்றி உணவு, விவசாயப் பிரச்சினை,கைத்தொழில், போக்குவரத்து, வர்த்தகம், அணுசக்தி முதலிய பல விஷயங்களிலும் சிரத்தை காட்ட முற்பட்டுவிட்டோம்

இலங்கையில் தொழிற்சங்க இயக்கம், அமிதமாக வளர்ந்து, வேலைநிறுத்தங்கள் பெருகி, துறைமுகத்தை ஸ்தம்பிக்கச் செய்து, நம் குழந்தைகளுக்கு வேண்டிய அவசியப் பொருள்களும் கிடைக்கமுடியாமற் செய்கின்றது.

அடுத்தவருடத்தில் நமது சங்கம் மூன்று விஷயங்களில் விசேஷ கவனம்செலுத்தலாம். நாம் அன்றாடம் பாவிக்கும் சாமான்களின் இறக்குமதித் தீர்வைகளைக் குறைக்கும்படி அரசாங்கத்தைக் கேட்கலாம். வேலைக்காரர் கிடைப்பது கஷ்டமாக இருப்பதால், மின்சார 'குக்கர்' முதலிய சாதனங்களுக்கான தீர்வையைக் குறைக்கச் செய்யலாம். 'ரிப்ரிஜிறேட்டர்' என்னும் குளிர்ப்பெட்டி, தரை பாலிஷர் முதலியவை குடும்பப் பெண்களின் வேலைக் கஷ்டத்தைக் குறைக்கும். வரி குறைந்தால் அப்பொருள்களின் விலையையும் குறைக்கும்படி நாம் வியாபாரிகளைக் கேட்டு, அவை நடுத்தர குடும்பப் பெண்களுக்கும் கிடைக்கும்படி செய்யலாம்.

இரண்டாவது, மார்க்கெட்டில் விலைவாசிகளைக் கவனித்து, அனாவசியமாக விலை உயர்த்தப்பட்டால், நாம் கட்டுப்பாடாகச் சேர்ந்து அவற்றைக் குறைக்குமாறு கேட்கலாம். அதனால் பயனில்லாமற் போனால், எல்லாக் குடும்பப் பெண்களுக்கும் தகவல் தெரிவித்து, அவ்வித பொருள்களை வாங்காதிருக்கும்படி யோசனை கூறலாம். உதாரணமாக இறைச்சி வாங்குவதில்லை என்று குடும்பப் பெண்கள் தீர்மானித்தால், பின்னர் வர்த்தகர் அதிகவிலை கேட்கமாட்டார். இவ்விதமே சிங்கப்பூர் குடும்பப் பெண்கள் சேர்ந்து செய்து வெற்றிபெற்றார்கள்.

பஸ்பிரயாணிகள், றயில் பிரயாணிகள் வருமானவரி, செலுத்துவோர் எல்லாரும் சங்கம் சேர்ந்துவிட்டனர். ஆனால், குடும்பப் பெண்ணே தனித்திருப்பதால், உதவியின்றிக் கஷ்டப்படுகிறாள். விலைவாசிகள் நியாயமாக இருக்க, ஏதாவது கட்டுப்பாடான நடவடிக்கையை நாம் எடுக்கத்தான் வேண்டும்.

பால் சபை, 'மார்கட்' இலாகா, இ. போ. ச., றயில்வே, துறைமுகசபை, வர்த்தக வரிசபை, வாழ்க்கைச் செலவு சபை இவற்றில் நமக்குப் பிரதிநிதித்துவம் இருந்தாலே சாமான்கள் வாங்குவோரின் கருத்தை அறிந்துகொள்ள முடியும்.

கடைகள், தங்கள் மாதிரிச் சரக்குகளை அனுப்பினால் நாம் நம் சங்கத்தாருக்கு அதைப் பற்றிச் சிபார்சுசெய்யலாம். இன்னும் செய்யக்கூடிய வேலைகள் எவ்வளவோ உள்ளன. நாம் முயன்றால், அதற்குத் தக்க பலன் நமக்குக் கிடைக்கும்.

## ஜனாதிபதி ஆட்சி

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேரள இராச்சியத்தில் கடந்த ஆறுவாரகாலமாக உருவாகிய அமைதியற்ற நிலைமையை கேரள அரசாங்கம் சீர் செய்ய முடியாதபடியால்தான் ஜனாதிபதி குறுக்கிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

### மேற்கு வங்காள அரசாங்கம்

மேற்கு வங்காள இராச்சிய காங்கிரஸ் அரசாங்கத்தின் மீது பல குற்றங்களைச் சுமத்தி ஒரு மகஜரை மேற்கு வங்காள கொம்யூனிஸ்ட் கட்சி இந்தியாவின் ஜனாதிபதிக்கு அனுப்பியிருக்கின்றது. இவ் அரசாங்கம் அரசியல் திட்டவிதிகளை மீறியும் அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்தும் கடமையாற்றி வருவதாக அம்மகஜர் கூறுகின்றது. மேற்கு வங்காளம் "அடுத்த கேரளமாக" உருவாகாமல் இருப்பதற்கு மத்திய அரசாங்கமும், இராச்சிய அரசாங்கமும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அவசியம்.

### ஆச்சாரிய வினோபா பாவே

காஷ்மீர் இராச்சியத்தில் பாத யாத்திரை செய்துவரும் பூதான இயக்கத்தின் தலைவரான ஸ்ரீ ஆச்சாரிய வினோபா பாவே தலைநகரான ஸ்ரீநகருக்கு விஜயம் செய்தபோது அவருக்குப் பெரிய வரவேற்பு அளிக்கப்பட்டது. ஐந்து கோடி ஏக்கர் நிலம் தமக்குக் கிடைக்கும்வரை தாம் இவ்வியக்கத்தைக் கைவிடப் போவதில்லை என அவர் கூறியிருக்கின்றார்.

## அனுராதபுரம் விவேகானந்தசபை புதிய உத்தியோகஸ்தர் தெரிவு

அனுராதபுரம் விவேகானந்த சபையின் 84ஆவது வருடாந்த விழா சமீபத்தில் திரு. எஸ். நடராஜா தலைமையில் நடைபெற்றபோது 1959—60க்கான உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர். முன்னாள் காரியதரிசி திரு. எஸ். சின்னத்துரை சென்ற ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

தலைவராகத் திரு. எஸ். நடராஜாவும் உபதலைவர்களாகத் திருவாளர்கள்: டி. மயில்வாகனம், கே. பாலசுப்பிரமணியம், பி. சிவசுப்பிரமணியம், ஆர். சதாசிவம்பிள்ளை, டாக்டர் எஸ் வேலாயுதம் (பகுதி வைத்திய அதிகாரி) ஆகியோரும், செயலாளராகத் திரு. எஸ். குமாரசுவாமியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

புதுச்செயலாளர் திரு. எஸ். குமாரசாமி நன்றி கூறினார்.

## ருஷிய அமெரிக்க நல்லுறவு

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு 3-8-59இல் லண்டன் மாநகருக்குத் திரும்பியுள்ளார். எடின்பரோ கோமகனும் அவருடன் திரும்பியுள்ளார்.

### லாவொசில் ஊரடங்குச் சட்டம்

இந்தோசீன இராச்சியமாகிய லாவொஸ் எல்லையில் கொம்யூனிஸ்ட் படைகள் படையெடுத்து சில கிராமங்களைக் கைப்பற்றிவிட்டனர் என இந்தோ சீனம் போர் ஓய்வுக் கமிஷன் உறுப்பு நாடுகளுக்கு முறைப்பாடு அனுப்பப்பட்டிருக்கிறது. இக்கலவரங்களின் விளைவாக லாவொசில் ஊரடங்குச் சட்டம் பல மாகாணங்களிலும் பிரகடனப் படுத்தப் பட்டுள்ளது.

### ருஷியப் பிரதமர்

ருஷியாவின் பிரதம மந்திரி குருசேவ் அடுத்த மாதத்தில் ஐக்கிய அமெரிக்காவுக்கு விஜயம் செய்து அங்கு இரண்டு வார காலம் தங்குவார் என்றும், அமெரிக்க ஜனாதிபதி ஐசன் ஹோவர் டிசம்பர் மாதத்தில் ருஷியாவுக்கு விஜயம் செய்து சில நாட்கள் பிரயாணம் செய்வார் என்றும் மாஸ்கோ வானொலி 3-8-59இல் ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறது.

# சுதந்திரதாகம் மிகுந்த வன்னியர் தமிழ்க்கலாசாரத்தின் பாதுகாவலர்

யாழ்ப்பாணம்.

சுதந்திர வாழ்வில் ஆர்வம் மிக்க வன்னியர் போர்க்களம் சென்று போராடுவதற்கும் தயங்கியதேயில்லை. அவர்களின் இரத்தத்தில் வீர சுதந்திர உணர்ச்சி ஓடிக்கொண்டே இருந்ததென திரு. ஸி. எஸ். நவரத்தினம் 'வன்னி நாடும் வன்னியரும்' எனும் பொருள் பற்றி யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்திற் சென்ற புதன்கிழமை பேசும்போது குறிப்பிட்டார்.

ஈழநாடு சரித்திர ஆராய்ச்சிக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு வடபகுதிக் கல்வி அதிகாரி திரு. எஸ். யூ. சோமசேகரம் தலைமை வகித்தார். சரித்திரம் பயிற்றும் ஆசிரியர்களுக்கு அத்துறையில் பரந்த அறிவு அவசியமெனத் தலைவர் தமது பேச்சில் தெரிவித்தார்.

உத்தர தேசம் என வழங்கப்பட்ட வடபகுதியை எதிரிகளின் தாக்குதலினின்றும் காப்பாற்றும் நாடாக வன்னிநாடு விளங்கியதெனத்தமதுஆராய்ச்சிப் பேச்சிற் குறிப்பிட்ட திரு. ஸி. எஸ். நவரத்தினம், அந்நாட்டின் அமைப்பைப் பற்றியும் அதன் எல்லை விபரங்களைப் பற்றியும் குறிப்பிட்டுவிட்டுக் கூறியதாவது:

வன்னிநாட்டு மக்களின் பொருளாதாரம் விவசாய விருத்தியிலேயே முற்றிலும் தங்கியிருந்தது. மிகுதியான நெல்லை அவர்கள் யாழ்ப்பாணப்பகுதிக்கு விற்பனைசெய்தனர். மான் இறைச்சியையும் தேனையும் வன்னியர் விரும்பி உண்டனர்.

வன்னிமக்களின் சந்ததியைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் பின் நாட்களில் வண்ணார் பண்ணையில் வாழ்ந்துவந்தார். 1848 இல் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்த இலங்கைத் தேசாதிபதி ஒருவர் அந்த அம்மையாரையும் கண்டு பேசினார் என வரலாறு கூறுகின்றது. அடங்காப்பற்றைப் பேசும்போது, பிறருக்கு அடங்கி வாழ்வதையும் விரும்பாத வன்னியர் தமிழ்ப் பண்பாட்டினை ஆயிரம் வருடகாலமாகப் பாதுகாத்துவந்தனர் என உணர்ச்சியுடன் திரு. நவரத்தினம் தெரிவித்தார். வைத்தீசுவர வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் சரித்திர ஆசிரியர் மு. இளைய தம்பி, முதலியார் ஸி. முத்துத் தம்பி ஆகியோர் குறிப்புரைகள் கூறினார்கள். தலைவரின் விளக்கவுரையுடன் கூட்டம் நிறைவேறியது.

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

★ ஈழநாடு சிறுவர் பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் இங்குள்ள விண்ணப்ப பத்திரத்தை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள பத்திரம் 15-8-59க்குப் பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் பத்திரத்தை அடுத்துவரும் சனிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை அங்கத்தவர் பத்திரத்தை நிரப்பி அனுப்பினால் போதுமானது.

★ ஈழநாடு அலுவலகத்திலிருந்து அங்கத்தவர் பதிவுத்தாள் கிடைத்தபின்னர்தான் **ஈழநாடு சிறுவர் பகுதி**க்கு அங்கத்தவர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் **சிறுவர் பகுதி** யில் வெளியிடப்படும்.

★ **சிறுவர் பகுதி** சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
**ஈழநாடு சிறுவர் பகுதி,**
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

### ஈழநாடு சிறுவர் பகுதி

**விண்ணப்பப் பத்திரம்**

**(8-8-59)**

**அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு**
வணக்கம்,

ஈழநாடு சிறுவர் பகுதியில் என்னை ஓர் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்.

விலாசம்...

கையொப்பம்

பெற்றோர் அல்லது
ஆசிரியரின் கையொப்பம். வயது.............

இங்கே வெட்டவும்

# சிறுவர் பகுதி

## புனிதன் புத்தி

(மார்க்கண்டு இந்திராணி—ப. எண். 33)

ஒரு காட்டிலே ஓமன் என்ற பெயரையுடைய ஓர் ஓநாய் வசித்துவந்தது. அந்த ஓநாய் ஒவ்வொருநாளும் காட்டிலுள்ள முயல்களை வேட்டையாடி அழித்துவந்தது. இதனல் அக் காட்டில் முயலினமே இல்லாமற் போய்விடும்போலிருந்தது. இதைக் கண்ட சில முதிய முயல்கள் கவலையடைந்தன. ஒருநாள் மாலை முயல்களெல்லாம் ஒருங்குகூடி ஓர் ஆலோசனைக் கூட்டம் நடாத்தின. ஓமனைக் கொல்வது எப்படி என்று எல்லா முயல்களும் சிந்தித்தன. பின்பு புனிதன் என்ற சிறு முயல் எழுந்து, 'நான் ஓமனைக் கொல்கிறேன்' என்றது.

அதைக்கேட்ட மற்ற முயல்கள் புனிதனை ஏளனம் செய்தன. புனிதன் தன் வீட்டுக்குச் சென்று ஒரு பெரிய பெட்டியை எடுத்து அதன் மூடியில் துவாரங்கள் செய்தது. பின்பு ஓமனின் வீட்டை நோக்கி விரைவாக ஓடியது. ஓடிவரும் முயலைக் கண்ட ஓமன் மகிழ்ச்சி அடைந்து அதை நோக்கிப் பதுங்கிவந்தது. உடனே புனிதன் "ஓமனண்ண உங்களுக்கு ஆபத்து! வேட்டை நாய்கள் இங்கே வருகின்றன! ஓடிவாருங்கள் என் வீட்டிற்கு". என்றது. பின்னர் தன் வீட்டை நோக்கி ஓடியது.

ஓமனும் புனிதன்பின் ஓடியது. வீட்டையடைந்ததும் புனிதன் "வேட்டைநாய் இங்கே வரும் சத்தம் கேட்கிறது. நீங்கள் அந்தப் பெரிய பெட்டியுள் ஏறி இருங்கள்'' என்றது. ஓமன் பெட்டிக்குள் இறங்கியதும் புனிதன் பெட்டியை மூடிவிட்டது. பின்பு பெரிய பாத்திரத்தில் நீரைக்கொதிக்க வைத்துப் பெட்டியின் அருகில் கொண்டுவந்தது. பின்பு புனிதன் கரண்டியால் கொதிநீரை அள்ளித் துவாரத்தின் வழியாகப் பெட்டியுள் ஊற்றியது. ஓமன் கொதிநீரின் சூட்டைத் தாங்க இயலாமல் பரிதாபமாகக் கத்திக்கொண்டே இறந்தது. ஓமன் இறந்ததையறிந்து புனிதன் மகிழ்ச்சியோடு தன் உறவினர் வீட்டுக்கு ஓடிச்சென்று நடந்ததைக் கூறியது. மறுநாள் காட்டிலுள்ள முயல்களெல்லாம் ஒருங்கு சேர்ந்து கூட்டம் நடாத்திப் புனிதனுக்குப் பரிசுகள் அளித்தன.

### புதிய மருமக்கள்

பெயர்களும், பதிவு எண்ணும்.

377. வை. அஞ்சனதேவி, காரைநகர் வடக்கு, வலந்தலை, காரைநகர்.

378. இ. யோகேந்திரநாதன், 207, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

379. மு. தியாகராசன், சங்கானை.

380. ச. மாணிக்கம், 81, பிரதானவீதி, இரத்தினபுரி.

381. சி. க. இராசநாயகம், ஆசிகுளம், வவுனியா.

382. சி. இராசரெத்தினம், மாதகல் கிழக்கு, மாதகல்.

383. த. சிவநாதன், 'செல்வகிரி' 105, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

384. யூ. இரத்தினகுமார், 160, கச்சேரி வீதி, திருக்கோணமலை.

385. யூ. வசந்தகுமாரி, 160, கச்சேரி வீதி, திருக்கோணமலை.

386. சே. சண்முகராசா, 19, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

387. க. பரராஜசிங்கம், செங்குந்த இந்துக்கல்லூரி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

388. ஜே. என். பாக்யம், மத்தியகல்லூரி, மட்டக்களப்பு (கீ. மா).

389. பி. பாபுஜி, 128/40 ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு.

390. ப. சுப்பிரமணியம், 486/45, புளுமெண்டொல்வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு 13.

391. இ. இந்திரா, ஸ்ரீபாதகல்லூரி, அட்டன்.

392. க. ஸ்ரீஸ்கந்தராஜா, 69, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

393. அ. ஆனந்தக்குமாரசாமி, நடுத்தெரு, காரைநகர்.

செல்வச் சிறுவர்களே!

சிறுவர் போட்டியிற் பரிசுபெற்றவர்களின் பெயர்களை இங்கு வெளியிட்டிருக்கின்றேன். இவர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள். போட்டியிற் பங்குபற்றியவர்கள் 5 கேள்விகளுக்கும் சரியான விடைகள் எழுதவில்லை. ஆனபடியால் ஆகக் கூடியதொகையான 4 சரியான விடைகள் அனுப்பியவர்களில் ஒருவர் முதற் பரிசைத்தட்டிக் கொண்டார். இரண்டாவது பரிசுகளை மற்றும் இருவர்பெற்றிருக்கின்றனர். பரிசு பெருதவர்கள் உற்சாகத்தை இழக்காமல் அடுத்துவரும் போட்டிகளிற் பங்குபற்றி வெற்றி பெறவேண்டுமென்பதே எனது ஆசை. இம்முறை இப்போட்டியிற் கலந்துகொள்ளாதவர்கள் அடுத்த போட்டிகளிற் கலந்துகொள்வார்களென நம்புகின்றேன்.

சின்னமாமா

'ஈழநாடு' சிறுவர் போட்டி: 1

பரிசுபெற்ருேர்.

**முதற் பரிசு:**

செல்வன் இ. என். சேனுதிராசா [பதிவு எண் 412]
'இளையதங்கவிலா'
மாதகல் கிழக்கு,
மாதகல்.

**இரண்டாம் பரிசு:**

செல்வன் வி. ஜி. சங்கரப்பிள்ளை [பதிவு எண் 53]
42, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

செல்வன் எ. எஸ். யோகேஸ்வரன் [பதிவு எண் 201]
29, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

இவர்களுக்கு உரிய புத்தகப் பரிசுகள் 10-8-59 இல் அனுப்பிவைக்கப்படும்.

## அரசனும் பிராணிகளும்

(ப. நித்தியானந்தசர்மா—ப. எண் 60)

ஓர் ஊரில் மதிவாணன் என்ற அரசன் வாழ்ந்து வந்தான். அவன் உலகத்திலுள்ள பிராணிகளினுடைய சீவியத்தை ஆராய்வதில் ஈடுபட்டிருந்தான். ஒவ்வொரு பிராணியாலும் என்ன நன்மை மக்களுக்கு உண்டு என்று ஆராய்ந்தபொழுது நுளம்பு, சிலந்தி போன்ற பிராணிகளால் ஒருவித நன்மையுமில்லை என்றே அவனுக்குத் தோன்றியது. ஆகவே, இவற்றை உலகில் இருந்து அழிக்கவேண்டுமென எண்ணினன்.

ஒருமுறை மதிவாணனுக்கும் பக்கத்துநாட்டு அரசனுக்கும் மூண்ட போரில் மதிவாணன் தோல்வியடைந்தான். அவன் காட்டுவழியாக ஒளித்து ஓடும்பொழுது எதிரிகளுடைய படையைக்கண்டு பயந்து ஒரு குகைக்குள், ஒளிந்துகொண்டான். சிறிதுநேரத்தில் களைப்பாய் இருந்த காரணத்தால் அரசன் கண்ணயர்ந்தான். ஆனல் ஒரு நுளம்பு அவனைக் கடித்துவிடவே அவன் கண்விழித்தான். கண்விழித்துப் பார்த்தபொழுதுதான் நுளம்பு செய்த நன்றியை அவன் உணர்ந்தான். அந்நேரத்தில் அவன் விழித்திருக்காவிடில் அவனை அவனது பகைவர் கொலைசெய்திருப்பார்கள் என்பதை உணர்ந்த அவன் நுளம்பிற்கு நன்றி தெரிவித்தான்.

மறுநாள் மீண்டும் அந்தக் குகையில் அவன் இருக்கலாமெனச் சந்தேகித்துப் பகைவர் அவ்விடத்தே சென்ருர்கள். ஆனல் அக் குகைவாசலைச் சிலந்தி தன்வலையால் மறைத்திருந்தது. அவர்களும் அரசன் உள்ளிருந்தால் வாசலில் எப்படிச் சிலந்தி வலை பின்னியிருக்கும் என்றெண்ணிக் குகைக்குட் செல்லாமல் தமது இடத்துக்குத் திரும்பிச் சென்ருர்கள்.

இந்த இரண்டு சம்பவங்களும் அரசனுக்கு நற்புத்தியைப் புகட்டின. அவன், 'இறைவன் எல்லாவற்றையும் காரணத்தோடுதான் படைத்திருக்கின்ருன்' என்ற உண்மையை இச் சிறு சம்பவங்கள்மூலம் உணர்ந்து எல்லாவற்றையும் பேணி நடக்கத் தொடங்கினன்.

## தெரிந்து கொள்ளுங்கள்







1907 ஆம் ஆண்டில் அட்ரெப்பர் வெயின் என்னும் முன்னைய அமெரிக்கக் கேலிச் சித்திரக்காரர், 72,500 இலக்குப் பொருள்களை ஆகாயத்தில் எறிந்தவிடத்து ஒன்பதைத் தவிர, மற்ற எல்லாவற்றையும் குறிதவருது சுட்டுவிட்டார். ஒரு மணித்தியாலத்திற்குச் சராசரி 1000 வேட்டுக்களைச் சுட்ட அவர் பத்து நாட்களுக்கு மேற்பட்ட கால எல்லைக்குள் இச்சாதனையை நிறைவேற்றினர்.

உலகத்திலேயே மிகக் குறைந்த வீட்டுவாடகைத் திட்டம் ஒன்று இன்றும் இருந்து வருகின்றது. அத்திட்டத்தின் கீழ், வாடிக்கைக்காரர் ஒரு வருடத்திற்கு, ஒரு அறைக்கும், சமையல் அறைக்கும் மிகக் குறைந்த தொகையான 2 சதத்தையும் கொடுத்து வருகின்றனர். 1519 ஆம் ஆண்டில் ஜேர்மனியிலே ஆரம்பிக்கப்பட்ட இக்குடியேற்றத்திட்டம், ஏழைகளுக்கு ஒரு புகலிடமாக விளங்குகின்றது.

ரோமாபுரியிலிருந்த பிரபுக் குடும்பங்களுக்கு, 500 மைல் தூரத்திலிருந்த அல்பைன் பனிப்படலங்களிலிருந்து வெட்டப்பட்ட பனிக்கட்டிகள் விநியோகம் செய்யப்பட்டன. இந்தப் பனிக்கட்டிகளை அல்ப்ஸ் பிரதேசத்திலிருந்து, ரோமாபுரிக்குத் தேர்ப்பாகர்களினலேயே கொண்டுசெல்லப்பட்டன.

## காக்கா! காக்கா! வா! வா!

—"திமிலைத்துமிலன்"—

காக்கா காக்கா கா கா கா
காலை எழுந்தே வா வா வா
வாக்கை மறக்கும் மாந்தர்க்கே
வாய்மை புகட்ட வா வா வா

வைகறை தன்னில் எழுகின்ருய்
மாலை குளித்தே மனை செல்வாய்
செய்குறை நூறே இருந்தாலும்
சேர்ந்து குலத்தோ டுணவுண்பாய்

பட்டிக்காடும் பட்டணமும்
பண்பை யுணர்ந்தது உன்னலே
தட்டித் திருடும் கெட்டவரின்
தன்மை அறிந்தது முன்னலே

காக்காக் கண்போல் நீரென்பார்
கருமைக் குவமை நீயென்பார்
தூக்கம் மறந்து சேய்காக்கும்
சொந்தத் தாயும் நீயென்பார்

ஆயா உனக்கு ஈடாமோ
அன்பால் உன்னை வெல்லோமோ
வாயாற் கூவும் குயிற்குஞ்சின்
வளர்ப்புத் தாயை மறப்போமோ?

மனிதகுல மணிகள்: 3

# காலரா நோயின் காரணத்தை ஆராய்ந்த மேதைகள்: உயிர்த்தியாகம் செய்த துல்லியர்

வீ. இராமகிருஷ்ணன்

கடந்த நூற்றுண்டின் பிற்பகுதியில் அனேக நோய்கள் கிருமிகளாலேயே தோற்றுவிக்கப் படுகின்றன என்று அறியப்பட்டது. உடனே நோய்களைத் தோற்றுவிக்கும் கிருமிகளைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் துரிதமாக எடுக்கப் பட்டன.

இம் முயற்சிகளில் பிரான்ஸ் தேசத்திற்கும் ஜேர்மனி தேசத்திற்குமிடையே தான் போட்டி மிக மும்முரமாக நிலவியது. அடுத்தடுத்த தேசங்கள். சரித்திரத்திலேயே நிரூபிக்கப்பட்டபடி எப்பொழுதும் சத்துருக்கள். இரு தேசங்களும் கிருமி வேட்டையில் மரியாதையை விட்டுக் கொடுப்பார்களா? தவிர அக்காலத்தில், கிருமிகளின் வேட்டையில் நிபுணராக உலகம் மதிக்கும் லூயிபாஸ்டர் (Louis Pasteur) பிரான்சு தேசத்தில் வாழ்ந்தார். விஞ்ஞானரீதியில் அவரிலும் திறமையாகக் கிருமிகளைக் கண்டுபிடித்த ரோபர்ட் கொக்(Robert Koch) ஜேர்மானிய கிருமி வேட்டைக் காரர்களின் தலைவராக இருந்தார்.

## காலரா நோய்

இந்நிலையில் எகிப்தில் காலராநோய் தோன்றியது. எப்படி இந் நோய் இந்தியாவிலிருந்து பரவிப்பாலைவனங்களைத் தாண்டி எகிப்தில் தோன்றியது என்பது இன்னும் அறியப்படாத விஷயம். இந் நோயும் கிருமிகளாலேயே உண்டாகும் ஒரு நோய் என்று மேற்கூறிய இருதேச கிருமி நிபுணர்களும் தீர்மானித்தனர்.

கொக்கும் (Koch)அவரது உதவியாளரும் நுணுக்கக் காட்டிகளுடன் (Microscopes) அலெக்சாண்டிரியாவிற்குப் பிரயாணமானுர்கள். பாஸ்டர் அப்பொழுது விசர்நாய்க் கடிவியாதியை சோதித்துக் கொண்டிருந்தமையால் தமது உதவியாளரை எகிப்திற்கு அனுப்பினுர். அவர்களுள் வயதிற் குறைந்த துல்லியர் (Thullier) ஒரு தலைசிறந்த மேதாவி.

## இருதேசச் சோதனையாளர்

அலெக்சாண்டிரியா நகரம் ஒரே சவக்காடாக இருந்தது. காலரா நோயினுல் இறந்தவர்களின் உடல்களைக் கூறு கூறுகளாகப்பிரித்து இருதேசத்துச் சோதனையாளரும் சோதித்தனர். காலராக்கிருமி இப்பொழுது கண்டுபிடிக்கப்பட விரும்பவில்லைப் போலும். இரு பகுதியினரும் ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை. இந் நிலையில் இந்நோய் எப்படி திடீரென்று தோன்றியதோ அதேபோன்று மறையவும்ஆரம்பித்தது. சோதனையாளர்கள் மிகுந்த மனிதத் தன்மை யுடையவர்கள்தாம். மக்களின் உபாதைகளைப் போக்குவதில் அக்கறையுடையவர்கள்தாம். ஆனுலும் இப்படித் திடீரென அவர்கள் இந் நோயின் காரணக் கிருமியைக் கண்டுபிடிப்பதற்குள் நோய் மறைவதைக் கண்டு ஒருவேளை உள்ளுக்குள் பொருமியிருப் பார்களோ?

காலரா நோய் எகிப்தில்கிட்டத்தட்ட மறைந்து விட்டது. இருதேசச் சோதனையாளரும் தங்கள் ஊர்களுக்குச் செல்ல ஆயத்தம் செய்ய முனைப் பட்டனர்.

## துல்லியரின் மறைவு

இந்நிலையில் ஒருநாட் காலை பிரான்சு தேசத்து சோதனைக் குழுவினர் தங்கியிருந்த இடத்திலிருந்து ரோபர்ட் கொக்கிற்கு ஒரு செய்தி வந்தது. பிரான்சுக் குழுவினருள் மிக இளமையாளரான துல்லியர் காலரா நோயினுல் இறந்தாரென்பதே இச் செய்தி.

கொக்கும் பாஸ்டரும் தேசாபிமானிகள். ஆகையால் அவர்களுள் எப்படி ஒருவர் மற்றவரை மட்டம்தட்டுவது என்பது மிக முக்கிய பிரச்சினையாக இருந்திருக்க வேண்டும். காலரா நோயைத் தோற்றுவிக்கும் கிருமிகளை இருபகுதியினரும் கண்டு பிடிக்கவில்லை. வெற்றி பெறவில்லையேயென்ற ஏக்கம் பொருமையையும் உண்டு பண்ணியிருக்கலாம்.

ஆனுல் ரோபர்ட்கொக், துல்லியர் இறந்தாரென்ற செய்தியைக் கேட்டவுடன் உடனே தம் உதவியாளருடன் மயானத்திற்குச் சென்றுர். அதி மேதை துல்லியரின் பிணம் கிடந்தது. துல்லியரின் சகாக்கள் சில அடிகள் பின்வாங்கினர். மேதையை மேதைகள் தானே மதிக்க இயலும்.

லோரல் இலைகளினுல் கட்டப்பட்டமாலையைத்துல்லியரின் கழுத்திலிட்டு கொக், "நான் உன் கழுத்தில் போடுவது இலைகளினுல் செய்யப்பட்ட மாலையாயிருக்கலாம். ஆனுல் அதுமிகத்தைரியமான மக்களுக்கு வெற்றி மாலையாக அளிக்கப்படும் பரிசு" எனக் கூறினுர்.

## சேவை செய்த பெரியார்கள்

உயிரை அதிசீக்கிரத்தில் கொல்லும் காலராநோய் எதனுல் ஏற்படுகின்றது என்றறிய முற்பட்ட பெருமக்களை மனிதகுல மணிகளாகத்தான் மதிக்க வேண்டும். அம் முயற்சியில் இறந்த துல்லியர் மனிதகுல மணியே. அவரின் பெருமையை அறிந்த வயதில் மூத்த கொக் அவருக்கு மரியாதை செலுத்திஞர். அவரையும் மனிதகுல மணியாகவே மதிக்க வேண்டும். பிரான்ஸ், ஜேர்மனி தேசத்தினரிடையில் எப் பொழுதும் இருக்கும் மனக்கசப்பு நிலையிலும் பெரியோர் பெரியோரை மதித்துத்தான் இருக்கின்றுர்கள். இக்காலச் சூழ்நிலையில் இது நம்புவதற்குச் சற்றுக் கடினமாகத்தான் இருக்கும்.

ஆனுல் உலகின் முன்னேற்றத்திற்கு பொறுப்பாளிகள் யாவர் என்று சிந்தித்தால் பல்வேறு துறைகளிலே தோன்றிய மனிதகுல மணிகள்தாம் என்பது விளங்கும்.


அழகான அச்சுவேலை.....

- அழைப்பிதழ் தொடக்கம் அழகிய புத்தகம் வரை கலை எழிலுடன் அச்சிட்டுக் கொடுக்கும் நவீன வசதிகள் எம்மிடம் உள.
- தமிழிலும், ஆங்கிலத்திலும் சகல விதமான அச்சுவேலைகளையும் சிறப்புறச் செய்து கொடுக்கின்றேம்.
- எந்த விதமான அச்சுவேலைக்கும் **கலாநிலையப் பதிப்பகம்** என்பது உங்கள் நினைவில் இருக்கட்டும்.

தங்கள் திருப்தியே எங்கள் நோக்கம்

**கலாநிலையப் பதிப்பகம்**
63, சிவன் கோவில் மேலை வீதி,
யாழ்ப்பாணம்.


# எட்டியாந்தோட்டையில் தொழிலாளர் மாநாடு

எட்டியாந்தோட்டையிலே இம்மாதம் 22, 23-ஆம் திகதிகளில்ஜனநாயகத்தொழிலாளர் காங்கிரஸின் மூன்றுவது மாநாடும் இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் 19 ஆவது வருடாந்த மாநாடும் நடைபெறவிருக்கின்றன. இம் மாநாடுகள் சிறப்பாக நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

அட்டன் மாவட்டக் குழுவின் உபதலைவராகவும் அப்பகுதிகளில் 40 வருடகாலம் பொது நலப்பணிகளில் ஈடுபட்டு உழைத்தவருமான திரு. அங்கப்பாவின் பெயரே மாநாடுகூடும் இடத்திற்குச் சூட்டப்படும். எனவே அவ்விடம் 'அங்கப்பா நகர்' என அழைக்கப்படும்.

ருஷியா, சீனம், இந்தியா போன்ற வெளிநாடுகளிலிருக்கும் பிரபல தலைவர்களையும் மாநாட்டிற் கலந்துகொள்ளுமாறு அழைப்புகள் அனுப்பப் பட்டுள்ளன. தென்நாட்டிலிருக்கும் பி. ரி. தாணுப்பிள்ளை, மா. பொ. சிவஞானம், ஏ. எஸ். எஸ். சாமி ஆகியோரும் இம் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். மாநாட்டிற்கு வருவோர் தங்குவதற்கான இட வசதிகள் எல்லாம் ஏற்பாடாகியிருக்கின்றன.

நாடகம், படக்காட்சி மற்றும் பல கலை நிகழ்ச்சிகளும் மாநாட்டில் இடம் பெறும்.

## அந்திய கால சகாய நிதி சங்கப் பொதுக்கூட்டம்

வண்ணர்பண்ணை அந்திய கால சகாய நிதிச்சங்கத்தின் நான்காவது வருடாந்தப் பொதுக் கூட்டம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாசாலை மண்டபத்தில் 26. 7. 59 இல் நடைபெற்றது. பின்வருவோர் நிர்வாகசபை உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப் பட்டனர்:– தலைவர்: திரு. மு. இ. காராளசிங்கம் ஜே. பி. பிறக்டர். உப தலைவர்: முதலியார் செ. முத்துத்தம்பி. தனுதிகாரி: டக்டர் வ. த. பசுபதி. உபதனுதிகாரி: திரு. க. சி. துரை. காரியதரிசி: இ. சோமலிங்கம், உப காரியதரிசி: திரு. க. பொன்னுத்துரை. இன்னும் 15 நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவு செய்யப் பட்டனர்.

கணக்குப் பரிசோதகராக சச்சிதானந்தா ஷொக்மன், விஜயரத்தின அன் கொம்பனி தத்துவக் கணக்கறிஞர்கள் தெரிவு செய்யப்பட்டனர். முதலியார் செ. முத்துத்தம்பி கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் இச்சங்கம் அரசாங்கத்தில் பதிவு செய்யப் பட்டு விட்டதென்றும் எதிர்காலத்தில் அங்கத்தவர்களுக்கு நன்மைகளையும், சலுகைகளையும் செய்யக் கூடிய திட்டங்கள் வகுக்கப் பட்டு வருகின்றதெனவும் தெரிவித்தார்.

## கீழ்ப்படியும் நற்பண்பு மாணவருக்கு நன்மை பயக்கும்

இக்கால இளைஞர்களை எதிர் நோக்கி நிற்கும் பிரச்சினைகளோ பல. இவ்வேளையில், பாடசாலைகள் எங்ஙனம் அவர்களை வாழ்க்கைப் போருக்கு ஆயத்தஞ் செய்யவேண்டுமென்பதை நாம் ஆராய்வது நல்லது. உங்கள் அதிபரின் அறிக்கை இது சம்பந்தமான சில ஆலோசனைகளைக் கூறியிருக்கிறது. ஒரு மாணவன் திறமை மிக்கவனுக இருந்தும், சமயப்பற்று அற்றவனுய்க் காணப்பட்டால், அவன் தனக்கும் பிறருக்கும் அதிக பிரயோசனமுள்ளவனுய் வாழ முடியாது. இவ்வாறு சமீபத்தில் நடைபெற்ற கோப்பாய்க் கிறிஸ்தவ கல்லூரிப் பரிசளிப்பு விழாவுக்குப் போஷகராய் விளங்கிய யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீ காந்தா தமது பேச்சிற் குறிப்பிட்டிருந்தார்.

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே இருக்கவேண்டிய தொடர்புகளைப் பற்றிப்பேசும்போது திரு. ஸ்ரீ காந்தாகூறியதாவது: ஒரு குருவுக்கு மாணவன் எப்போதும் கீழ்ப்படிவுள்ளவனுயிருப்பதின் விளைவாக மாணவன் பிற்காலத்தில் நன்மையடைகிருன். இந்த உண்மையை மாணவர்கள் என்றுமே மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். இத்தகைய நற்பண்பு பாடசாலைகளிலும் வெளியிலும் நிலவுமானுல், சமூகத்தில் ஒழுங்கீனமும் அதனுல் ஏற்படும் தொல்லைகளும் நீங்கி விடும்.

### விவசாயம்

நாட்டில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்ப்பதற்கு வழிவகைகளை ஆராய்ந்த அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்ததாவது — தொழிலின் மகத்துவத்தை இளைஞர்கள் செவ்வனே விளங்கிக் கொள்ளவேண்டும். விவசாயம் கைத்தொழில் ஆகியனவே அவர்களுக்குப் பெரும்பாலும் விமோசனம் அளிக்கக்கூடும். அதற்கேற்ற பிரகாரம் கல்வித் திட்டத்தில் மாற்றங்கள் விரைவிலே ஏற்படுமென்று நாம் எதிர்பார்க்கிறேம்.

## அனுராதபுரத்தில் தமிழாசிரியர் விடுமுறைக் கழகம்

அனுராதபுரம்

வடமத்திய மாகாணத் தமிழாசிரியர் சங்கத்தினரால் ஒழுங்குசெய்யப்பெற்ற தமிழாசிரியர் விடுமுறைக் கழக மாநாட்டின்போது தலைமை வகித்த வடமத்திய மாகாண வித்தியாதிகாரி திரு. ஏ. சிவகுரு அவர்கள், இப்போது பாடசாலைகளில் சரித்திரப் பாடங்கள் போதித்துவரும் முறை ஒழுங்கில்லாமல் சில விடங்களில்இருப்பதாகவும்அவ் வித குறைபாட்டை உடனடியாக நீக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

இவ் விடுமுறைக்கழகத்தில், திரு. சிவகுரு தொடர்ந்து பேசுகையில், தமிழர் வரலாறு உண்மைக்குப் புறம்பாகவும் எழுதப்பட்டு வருவதாகக்கூறி, அவ்விதம் இனியும் நேராவண்ணம் அறிஞர்கள் பார்த்துக் கொள்ள வேண்டியதுபற்றி வலியுறுத்தினுர்.

யாழ்ப்பாணம் அர்ச். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த திரு. சி. ஜே. இளையதம்பி, பி. ஏ, எம். இ. டி. அவர்கள் பூமிசாஸ்திரப் பாடத்திட்டம் பற்றியும் பலாலி அரசினர் ஆசிரியப் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் திரு. வி. தம்பு அவர்கள் சரித்திரப்பாடத்திட்டம்பற்றியும் அவை எம்முறையில் போதிக்கப்பட வேண்டும் என்பதுபற்றியும் ஆசிரியர்கட்கு விளக்கினுர்கள்.

வித்தியாலயத்தின் தலைமையாசிரியரும்,சங்கத்தின்செயலாளருமான திரு. ந. நவரத்தினம் விடுமுறைக் கழகம் சிறப்புறுவதற்கான சகல காரியங்களையும் கவனித்தார்.

### வாலிபர் முன்னேற்றக் கழகம்

அனுராதபுரம் வாலிப முன்னேற்றக்கழகத்தினர் ஜுலை மாதம் 26ஆந் திகதி நடத்தவிருந்த சிறுவர்தினவிழாவை செப்டம்பர் மாதத்தில் நடாத்த எண்ணியுள்ளனர்.

கல்லூரியில் சுற்றுவிளையாட்டுப் போட்டிகளும் தேர்வுகளும் நடைபெறுவதால், அவை கலந்து கொள்ள முடியாது போகும் என்று சில கல்லூரிகள் தயக்கம் தெரிவித்ததாலேயே இப்படிப் பின்போட வேண்டியிருந்ததெனக் கழகத்தின் இணைச் செயலாளர்களில் ஒருவரான திரு. வை. நாகராசன் தெரிவித்தார்.

சிறுவர்தின விழாவின்போது குழந்தைகள் புத்தகக் கண்காட்சி ஒன்று நடத்தத் திட்டமிட்டிருப்பதால் காட்சிக்குப் புத்தகங்கள் தர விரும்புவோர் அப் புத்தகங்களை, கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டப்படுகிருர்கள்.

ஜோவலன் வாஸ்,
131, பீகாக் தெரு,
அனுராதபுரம்.

## பிரபல இந்திய எழுத்தாளர் முல்க் ராஜ் ஆனந்த் இலங்கை விஜயம்

உலகப்புகழ்பெற்ற இந்திய எழுத்தாளர் திரு. முல்க் ராஜ் ஆனந்த் இம்மாத இறுதியில் இலங்கைக்கு வருவாரெனத் தெரிகிறது. செப்டம்பர் 7ஆம் திகதி இங்கு நடைபெறவிருக்கும் இலக்கிய மாநாட்டின் அழைப்பை ஏற்று, அதில் பங்கு பற்றும் நோக்கமாகவே அவர் வருவார். இலங்கையில் பல இலக்கியக் கூட்டங்களில் அவர் சொற்பொழிவாற்றுவார். 'உலகத்தின் சிறந்த சிறுகதைகள்' பட்டியலில் இவரது படைப்புகளும் இடம்பெற்றுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அருள் வழி

## "ஆசையுள்ளவன் விலங்கு; அன்புள்ளவன் மனிதன்; அருள் படைத்தவன் தேவன்"

### "வழிபாடு செய்வது ஒன்றே விமோசனத்துக்கு வழியாகும்"

—திரு. வாரியார்.

"மனிதன் என்ருல் நினைப்பவன்; நினைக்க வேண்டியதை நினைப்பவன் மனிதன். அவர்களில் மூன்று வகையுண்டு. 1. ஆசை உடையவன் விலங்கு. 2. அன்பு உடையவன் மனிதன். 3. அருள் உடையவன் தேவன். இதில் ஆசை என்பது, தொடர்பு உடையவரிடத்துப் பயன் கருதி நிகழ்வது. அன்பென்பது தொடர்புள்ளவரிடத்துப் பயன் கருதாது நிகழ்வது. தொடர்பில்லாதவரிடத்துப் பயன் கருதாமல் நிகழ்வது அருளாகும். இக்குணங்கள் மக்களிடையே வெவ்வேறு வீதாசாரத்தில் கலந்திருக்கக் காணலாம். இதில் நாம், அன்பையும், அருளையும், அதிகமாக வளர்க்கவேண்டும். அந்த ஸ்தானம் நம்மில் அதிகமிருக்க முயல்வதே நம் முன்னேற்றத்துக்கு வழியாகும்."

என்றிவ்வாறு திருமுருக கிருபானந்தவாரியார், கொழும்புப் பல்கலைக்கழக இந்துமாணவர் சங்கத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு வாரியார் கொழும்பு ஜயந்திநகர் கோவிலில் கந்தபுராண சங்கீத கதாப் பிரசங்கத்தைஏழுநாட்களாகச்செய்துவந்தார். திரளான ஆண்கள், பெண்கள், குழந்தைகள் வந்து கேட்டு இன்புற்றனர். 26-7-59 ஞாயிற்றுக்கிழமை கடைசி நாள் "வள்ளி கல்யாணம்". "வள்ளி என்பது ஜீவாத்மா, முருகன் பரமாத்மா. ஜீவாத்மா பரமாத்மாவுடன் சேருவதே வள்ளி கல்யாணமாகும். சூரபதுமன் ஆணவ மலத்தைக் குறிக்கும். சூரபதுமன் தேவர்களைப் பல யுகங்களாகச் சிறையில் தள்ளியிருந்தான். முருகன் அவனைப் போரில் வென்று, மயில்வாகனமாகவும் சேவற்கொடியாகவும் அவனைச் செய்து ஆட்கொண்டு தேவர்களை விடுதலை செய்தார். தேவர்கள் பட்ட கஷ்டங்களுடன் ஒப்பிடுகையில், நம் கஷ்டம் மிகக் குறைவேயாகும். தேவர்கள் தங்கள் விமோசனத்துக்காக முருகனை வழிபட்டனர். நாமும் எவ்விதமான விமோசனத்துக்கும் முருகனைப் பலமாகப் பிடித்து வழிபடுவதைத்தவிர வேறு வழியில்லை" என்ருர். அன்றுமட்டும் அவர் நான்கு பிரசங்கம் செய்தார். வடகொழும்பு இந்துக்கள் சங்கம், நீர்கொழும்பு, நாவலப்பிட்டி, வதுளை இவ்விடங்களில் திருவாரியார் அவர்கள் சமய உபந்நியாசங்கள் செய்தார்.

மதுரை மகா சந்நிதானம் ஞாயிறன்று, ஜயந்திநகர் கோவிலில் "சைவத்தின் மாண்பு" என்பதுபற்றி, கூட்டுப்பிரார்த்தனையின் போது உபந்நியாசித்தார். கோவில் வழிபாடு, கூட்டுப்பிரார்த்தனை, வீட்டுப்பிரார்த்தனை தீட்சை எடுப்பது இவற்றின் அவசியத்தை வற்புறுத்தி, எல்லாருக்கும் ஆசி கூறினர்கள். கொழும்பு இந்து வாலிபர் சங்கம், விவேகானந்தசபை இவ்விடங்களில், திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் சமய விஷயமாகப் பேசிவிட்டு, புதன் கிழமை விமானமார்க்கமாக இந்தியாவுக்கு, திருவாரியாருடன் புறப்பட்டார்.

## சைவப் பெரியார் சிவபாதசுந்தரனரின் 6-வது குருபூசை

இம்மாதம் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் அத்த நட்சத்திரத்தில் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனரின் குருபூசைத் தினம் திருக்கேதீச்சரத்தில் திருவருட் துணைகொண்டு கொண்டாடப்படும். அகில இலங்கைச் சிவன் அடியார்கள் அனைவரையும் அழைக்கின்றனர்.

## தலவில்லு அர்ச். அன்னம்மாள் விழா

வருடா வருடம் கொண்டாடப்படும் தலவில்லு அர்ச், அன்னம்மாள் ஆலயத் திருவிழா, சென்ற மாதம் 26-ந் திகதி கொண்டாடப்பெற்ற போது 20,000 க்கு மேற்பட்ட யாத்திரீகர்கள் கலந்து கொண்டனர். நாட்டின் பல பாகங்களிலுமிருந்து வந்த மக்களுக்கு ஏற்ற வசதியைச் செய்து கொடுத்திருந்த கோயில் அதிகாரிகள் மக்கள் நன்மதிப்பைப் பெற்றுக்கொண்டார்கள். 25-ந் திகதி இரவு விசேஷ ஆராதனையும் மறுநாள் காலை பாடற்பூசையும் சிலாபம் மேற்றிராணியார் வண. பிதா எட்மண்ட் பீரிஸ் அவர்களால் பக்திச் சிரத்தையுடன் கொண்டாடப் பெற்றது.

## ருஷிய மக்களுக்கு யோகாசனத்தில் அதிகரிக்கும் ஆர்வம்

### இந்தியாவிலிருந்து யோகாசன தூதுகோஷ்டி?

ருஷியாவில் இப்போது யோகாசனங்களைப்பற்றி மக்களிடையே ஆர்வம் அதிகரித்து வருகிறதாம். அந் நாட்டுக்கு நல்ல பயிற்சிபெற்ற யோகாசன ஆசிரியர்களை இந்தியாவிலிருந்து அனுப்புவது நல்லதென்று மொஸ்கோவிலிருந்து சங்கரசௌர் என்பவர் எழுதுகின்ருர்.

"நான் ருஷியாவுக்கு மூன்று வருஷங்களுக்கு முன்பாக வந்தேன். சோவியத் மக்கள் யோகாசனங்களில் அதிக கவனம் செலுத்துவதைக்காண பெருமைகொள்ளுகின்றேன். வாலிப கம்யூனிஸ்ட்லீக், தொழிலாளர்யூனியன் இவற்றின் சஞ்சிகைகளில், யோகாசனங்கள்பற்றிக் கட்டுரைகள் அடிக்கடி வெளியாகின்றன.

எனக்கும் யோகாசனம் சிறிது தெரியும். சோவியத் வாலிபர்கள் அதுபற்றி என்னைப் பல கேள்விகள் கேட்கின்றனர். ஆனல் இது குறித்து ருஷிய மொழியில் நல்ல புத்தகங்கள் இல்லை. இந்திய 'யோகி'யை நேரில் கண்டு, ஆசனங்களையும், பிராணயாமத்தையும் கற்றுக்கொள்ள மிகவும் ஆவல்கொண்டுள்ளனர்.

இன்று ஒரு பஸ் கண்டக்டரான "ரட்டியா" என்னும் பெண்ணைக்கண்டு, அவள் உடற்கட்டு நன்குஇருப்பது குறித்து பாராட்டினேன். சிலயோகாசன புத்தகங்களிலிருந்து தான் சில ஆசனங்களைப் பயின்றதாயும், உணவில் அதிக கட்டுப்பாடாயிருப்பதாயும், சுத்த உணவே சாப்பிடுவதாயும் தெரிவித்தாள். இப்போது பிராணயாமம் பயிற்சிபெற விரும்புகிருள்.

எதிர்காலத்தில் ருஷியாவிலே யோகாசனங்களுக்கு அதிக கிராக்கியும் மதிப்பும் இருந்துவரும். இந்தியாவிலிருந்து சாஸ்திரிய முறையில் யோகப்பயிற்சி அளிக்கக்கூடியவர் சிலர் ருஷியாவுக்குச் செல்லுவது மிகவும் விரும்பத்தக்கது.

## திவ்விய ஜீவன சங்கம்

சாம்பல்தீவில் ஒரு திவ்விய ஜீவன சேவாசங்கம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இவ் ஆரம்ப விழாவுக்கு சுவாமி சச்சிதானந்த யோகி தலைமை வகித்தார். இங்கு குரு புர்ணிமா விழாவும் கொண்டாடப்பட்டது.


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த கால்முடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாளுல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**
சிருப்பர்

Std. 14.


★ ★ ★

# இவ்வாரம் எப்படி?

★ ★ ★

—எம். எஸ். மகேஸ்வரன்—

| | | | |
|---|---|---|---|
| கே. | | | |
| | இவ்வாரக் கிரகநிலை | | சூரி புத. |
| | | | செ. வெ. |
| சனி | | வியா. | ராகு |

**இங்கு தரப்பட்டுள்ள இராசிகளின் பலன்கள் யாவும் பொதுப் பலன்களாதலால் இவற்றின் தன்மைகள் ஒவ்வொருவரின் தசா புத்திகளின் தன்மைக்கேற்றவாறு மாற்றம் அடைவனவாகும்.**

(8-8-59 — 14-8-59)

**மேடம்:** (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம், மாதாவழி உறவினர் மூலம் தொந்தரவுகளுக்கு இடமுண்டு. இனத்தவர்களுடன் சண்டை, சச்சரவுகளிலிருந்து விலகிக் கொள்ளவும். புது முயற்சிகள் கவனமாய்க் கையாளப்படவேண்டும். நினைத்த கருமங்கள் மிக்க பிரயாசையின் பேரில் நிறைவேறும்.

**இடபம்:** (கார்த்திகை 2, 3, 4-ம் பாதம், ரோகினி மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்) வியாபாரத்துறையில் பிரயாசைகள் ஏற்படும். கொடுக்கல் வாங்கல் மூலம் பணவருவாய் அதிகரிக்கும். மறைமுகமாகச் சிலர் தீமை விளைவிக்க முயல்வர்.

**மிதுனம்:** (மிருகசீரிடம் 3, 4-ம் பாதம் திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் பாதம்) இவ்வாரத்தில் பல முக்கிய கருமங்களில் தலையிட வேண்டிவரும். இன பந்துக்களின் கொண்டாட்டங்கள் இவ்வாரம் அதிகரிக்கும். வாகனங்கள் மூலம் பணவருவாய் ஏற்படும்.

**கடகம்:** (புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்) புத்திரரால் மகிழ்ச்சியுண்டாகும். எதிர்பாராத முறையில் சில நற்கருமங்கள் நிறைவேறும். பிறரது வஞ்சகச் செயல் ஈற்றில் நன்மையையே தரும். இவ் வார முற்பகுதி பிரயாணத்திற்கு ஏற்றதன்று. கொடுக்கல் வாங்கல் மூலம் பகைமை உண்டாகும்.

**சிங்கம்;** (மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்) பணவிருத்தி மகிழ்ச்சியூட்டும். களியாட்டங்களில் மனம் நாடும். புதியகருமங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். பெண்களின் நேசத்தால் நன்மையுண்டாகும். வார இறுதியில் மனம் நிம்மதி குலையும்.

**கன்னி** (உத்தரம் 2, 3, 4-ம் பாதம், அத்தம், சித்திரை 1-ம் 2-ம் பாதம்) சொந்தக் கவலைகள். சிலஇவ்வாரத்தில் நீங்கும். சிறு சுகவீனங்கள் தவிர இந்த வாரம் நல்லதாயிருக்கும். காத்திராத வகையில் ஏதோ ஒரு இலாபம் கிடைக்கும். சினேகிதர் தீமைகள் விளைவிக்கமுயல்வர்.

**துலாம்** (சித்திரை 3, 4-ம் பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதம்) வாகனங்களினுல் கஷ்டங்கள் விளையும். எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் அதில் வெற்றியும், பெருமையும் பெறுவது கஷ்டம். பிள்ளைகளால் மகிழ்ச்சி பெருகும்.

**விருச்சிகம்** (விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை) பண விருத்தியும் அரச கருமங்களில் முன்னேற்றமும் உண்டாகும். பழைய முதலீடுகள் மூலம் பணவருவாய் கிடைக்கும். உம்முடைய கருமங்களிற் சில திருத்தங்கள் நிச்சயம். பிரயாண அலைச்சலும், சினேகிதவழியால் கவலையுமுண்டு.

**தனுசு** (மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம்) உமது சொந்தக் கருமங்களை விட்டுப் பிறரது கருமங்களில் அதிக சிரத்தை எடுப்பீர். பெண்களின் உறவால் தீமைகள் பல உண்டாகும். இடமாற்றம் காரணமாகப் பணவருவாய் அதிகரிக்கும்.

**மகரம்** (உத்தராடம் 2, 3, 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்) ஆரம்பிக்கும் கருமங்களிற் பகைவர் தலையிடுவர். இதனுல் மனவெறுப்புத் தோன்றும். பழைய முதலீடுகள் மூலம் பணவருவாய் உண்டாகும். இவ்வாரத்தில் மனச்சமாதானம் இருக்கமாட்டாது. நண்பர்கள் உம்மைத் தவருக விளங்குவர்.

**கும்பம்:** (அவிட்டம், 3, 4-ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதம்) விரும்பிச் செய்யும் பிறர்கருமங்களில் நன்மை கிட்டாது. சிறு குடும்பக் குழப்பங்களுக்கு இடமுண்டு. பிரயாணம் செய்யவேண்டி நேரிடும். இனத்தவர் சிறிது கோபத்தை உண்டாக்குவர்.

**மீனம்:** (பூரட்டாதி 4-ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி) புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத் துறையில் இது ஒரு நல்ல வாரம். பெண்களின் சிநேகிதத்தால் தீமைகள் வந்தடையும். பழைய முதலீடுகள்மூலம் பணவருவாய் உண்டு.


—— இங்கே வெட்டவும் ——

ஈழநாடு
சிவன்கோவில் மேலை வீதி,
தபாற்பெட்டி எண். 49
யாழ்ப்பாணம் (இலங்கை)

ஈழநாடு வார இதழுக்கு என்னை ஒரு சந்தாதரராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன். அதற்குரிய ஆண்டுச் சந்தா ரூபாய் பத்து (10/-) இதனுடன் மனிஓடர் / செக் மூலம் அனுப்பி வைக்கின்றேன்

..........................................
கையொப்பம்.

பெயர்: ..........................................

விலாசம்: ..........................................

இங்கே வெட்டவும்

சினிமா உலகம்

# சம்பூர்ண ராமாயணம்

புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு, காவியப்பண்பும், சுவையும் மிக்க இராமாயணக் கதையை வால்மீகியே வாயிற்கை வைத்து ஆச்சரியப்படுமளவில் தனதாக்கிக்கொண்டது. எனவே இராமாயணக் கதையை அறியாத தமிழர் ஒருவருமே இருக்கமாட்டார்கள். கூனி, சூர்ப்பனகை, கும்பகர்ணன் ஆகியோர் தமிழர் வாழ்க்கையோடு இணைந்து மனிதப் பண்பின் சில குறைபாடுகளுக்கு இலக்காக நின்று விளங்குவதே அப் பாத்திரங்களின் சிரஞ்சீவித்துவத்துக்குத் தக்க எடுத்துக்காட்டாகும்.

நாடகச் சுவை மிக்க இக்காவியம் முழுக்கதையாகவும், சில பகுதிகளாகவும், பல தடவை மேடைகளிலும் வெள்ளித்திரையிலும் காட்சி தந்தேயிருக்கின்றது. இனப் பூசல்கள் மிகுந்துள்ள இந்நாட்களிற் கூட கம்பராமாயணத்தின் மகத்துவம் மங்கவில்லை என்பதற்குச் சவால் விடுவதுபோல் காலத்தோடு ஒன்றி வளர்ந்த கலையம்சங்களைப் புகுத்தி இப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

திரை வானில் ஒளிரும் நட்சத்திர நடிகர்களுக்குத் தத்தம் திறமையை வெளியிடுவதற்கமைந்த பாத்திரங்களைக் கொடுத்து ஒரே நட்சத்திர மயமாக்கி விட்டனர் தயாரிப்பாளர்.

'பரதனே நாட்டை ஆள வேண்டும் நீ காட்டுக்குச் சென்று தவம் மேற்கொள்ள வேண்டும்' எனக் கைகேயி கூறிய வார்த்தைகளைக் கேட்ட இராமனின் முகம் அன்றலர்ந்த செந்தாமரையினை நாணச் செய்தது. கம்பன் கண்ட இராமனின் தோற்றம் இது. அதே காவியப் பண்புமிக்க இராம பிரானை எம்முன் கொண்டு வந்து நிறுத்தி விட்டார் இராமராவ்.

ஸ்ரீ ராமச்சந்திரனின் மகுடாபிஷேகத் திருநாளைக் காண்பதற்குத் தேனைச் சிந்தி மலர்களெல்லாம் சிரித்து மலர்ந்ததும், தென்றலோடு பயிர்களெல்லாம் அசைந்து மகிழ்ந்ததும், கானிலே கலாப மயில் களித்து ஆடியதும், நாகம்கூட தலையசைத்துத் தாளம் போட்டதும் கண்கொளாக் காட்சிகளாகும்.

பரதனின் சிறந்த பண்புகள் அத்தனையையும் கம்பன் அப்படியே படம் பிடித்துத் தந்துள்ளான். அதே பரதனைச் சம்பூர்ண ராமாயணத்திலும் காணக்கூடியதாகவிருந்தது. கேகய நாட்டிலிருந்து திரும்பும் பரதனின் தேர் ஒலி கேட்டபோது மணி மண்டபத்துள் ஒரே சலசலப்பு. அதே வேளையில் 'அதோ! சிவாஜி கணேசன்!' என்ற சத்தம் படமாளிகையிலும் எழுந்தது. ஆனால் மௌனமும் வேதனையும் குலவ வெறும் சைகை மூலம் தனது துன்பத்தை ஒரு கணம் காட்டிய பரதன் இராமனின் தம்பியாக மட்டுமல்ல இரசிகர்களின் இதய மலராகவும் இடம் பெற்று விட்டான்.


நாட்டிய ராணியெனப் புகழப்படும் பத்மினி காவியகாலத்துச் சீதையாகக் காட்சியளிக்கவில்லை.

தனயனுக்காக உயிர் நீத்த தந்தை தசரதன் (நாகையா) வஞ்சம் தீர்க்க வந்த கூனியால் (ராஜகாந்தம்) மனம் குழம்பி கதையின் திருப்பத்துக்குக் காலாக அமைந்த கைகேயி (ஜி. வரலட்சுமி) எழில் மிக்க சீதை (பத்மினி) வீறு கொண்டெழுந்தாலும் அன்புக்கு அணிகலனாக விளங்கும் இராமனின் சொற்கேட்டு அடங்கும் இலட்சுமணன் (நரசிம்ம பாரதி) இராம இராவண யுத்தத்துக்கு அடி கோலிய சூர்ப்பனகை (எம்.என். ராஜம்) இசையாலே உயர்ந்த இலங்கை வேந்தன் இராவணன் (டி. கே. பகவதி) வைரம் பாய்ந்த ஆகிருதி கொண்ட அனுமன் (சாண்டோ கிருஷ்ண மூர்த்தி) ஆகியோர் சம்பூர்ணராமாயணத்துக்குஉகந்த பாத்திரங்களாக இணைந்து கொண்டனர்.

ரவிவர்மா தீட்டிய விஸ்வாமித்திரர், கம்பன் கண்ட விஸ்வாமித்திரர், தமிழன் படித்துணர்ந்த விஸ்வாமித்திரர் எஸ். எஸ். கதிரேசனின் முகபாவம், பேச்சு, நடை எல்லாவற்றிலுமே தோன்றினுரென்ருல் மிகையாகாது.

பின்னணிப் பாடகர்களின் இன்னிசை வளம், கம்பனின் கவிதையோடு இணைந்த ஏ. பி. நாகராஜனின் வசனம், காவிய காலத்துக்குரிய கலைச்செல்வம், மலையும், மடுவும், நதியும் மிகுந்த இயற்கைக் காட்சிகள் அனைத்துமே படத்தின் தரத்தை உயர்த்திச் செல்கின்றன.

சம்பூர்ண ராமாயணத்தைக் குறுகிய நேரத்துக்குள் எப்படி அமைக்கலாம் எனப்பலர் ஆச்சரியப்பட்டனர். அநேக காட்சிகளை இசைப் பாடல்களின் துணைகொண்டு சமாளித்து விட்டனர் தயாரிப்பாளர்.



ஆங்கிலப் படங்களைத் தயாரிப்பவர்கள் ஜடாயு போன்ற பட்சிகளின் தலைவனை இரசிகர்கள் அதிசயிக்கும் வகையில் தத்ரூபமாக அமைத்திருப்பார்கள். இத்தமிழ்ப் படத்தில் ஜடாயுவின் உருவ அமைப்பு இன்னும் சிறப்பாக அமைந்திருக்கலாம்.

'இன்று போய் நாளை வாராய்' என்ற பாடல் எதற்காக இடம் பெறவில்லையோ தெரியவில்லை. இருந்தும், குன்ருத இசைவளத்திற் குறை கூறுவதற்கில்லை. மருதகாசியின் பாடல்கள் கருத்தழகும் கற்பனை நயமும் நிறைந்தவை.

படப்பிடிப்பில் கையாளப் பெற்றிருக்கும் உத்திகள் பாராட்டிற்குரியன.

படத்தைப் பார்த்துவிட்டு எழுந்தபோது பக்கத்தில் இருந்தவர் கம்ப ராமாயணத்தோடு 'சினிமா ராமாயண'மும் கொஞ்சம் கலக்கப்பட்டிருக்கின்றதென்ற கருத்தை நகைச்சுவையுடன் தெரிவித்ததை இங்கு குறிப்பிடாதிருக்க முடியவில்லை.


—அஜன்

# பிரசிடெண்ட் பஞ்சாட்சரம்

பிரசிடெண்ட் பஞ்சாட்சரம் ஒரு ஜில்லா போர்ட் தலைவர். ஒரு ஜில்லா போர்ட் தலைவருக்கு அமைய வேண்டிய அம்சங்களெல்லாம் பிரசிடெண்ட் பஞ்சாட்சரத்தினிடம் அமைந்துள்ளன. ஆகவே, டில்லி அரசாங்கம் இரகசிய அதிகாரி ஒருவரைத் தம் ஜில்லாவுக்கு அனுப்புவதாகச் செய்தி கிடைத்ததும் அவர் பயந்து நடுங்காமல் வேறு என்னதான் செய்வார்!

ஒரு பெரிய அதிகாரியாக, பிரசிடெண்ட் பஞ்சாட்சரமும் அவர் சகாக்களும் மதித்து வணங்கும் அதிகாரியாகக் கொண்டு போய்த் தள்ளிவிடுகிறது. அத்துடன் கதையில் ஏற்படுகின்ற திருப்பமானது கடைசி வரைக்கும் திரும்புகின்றது.

பிரசிடெண்ட் பஞ்சாட்சரமாக நடிக்கும் எஸ். வி. சகஸ்ரநாமம் பிரசிடெண்ட் பஞ்சாட்சரமாகவே நடித்துள்ளார்.



பிரசிடெண்ட் பஞ்சாட்சரத்துக்கு அழகான ஒரு மகள். அவளின் கை பிடிக்கத் துடியாய்த் துடிக்கும் வாலிபர்தான் சுகுவும், ரகுவும். அதாவது: ராஜகோபாலனும், டி. ஆர். ராமச்சந்திரனும். வேலையில்லாமல் ஊர் சுற்றித்திரியும் 'சுகவாசி' தான் எஸ். எஸ். ராஜேந்திரன். பிரசிடெண்ட் மகள் மேகலாவாகத் தோன்றும் சரோஜா தேவியைக் காதலிக்கும் சிகாமணி தான் அவர். அவருடைய அதிர்ஷ்டம் அவரைத் தன் காதலி வீட்டுக்கு

ஊர் சுற்றும் 'மதராஸி'யாக விருந்துவிட்டுப் பின் ஊர்திருத்தும் அதிகாரியாக மாறி நடிக்கும் எஸ். எஸ். ராஜேந்திரன் சாதாரணமாக நடித்திருக்கிருர்.

பி. சரோஜா தேவியின் தோற்றத்தில் காணும் அழகை அவரது நடிப்பில் காணமுடியவில்லை.

உபாத்தியாயினியாக நடிக்கும் புதுமுகம் பரவாயில்லை.

ராஜகோபாலன் — ராமச்சந்திரன் ஜோடி நகைச் சுவை அளிக்கத் தவறவில்லை. அனுபவமும், தேர்ச்சியும் பெற்ற ஒரு டைரக்டரின் மேற்பார்வையில் இந்த ஜோடி தமிழ்த்திரையில்நல்லவொரு ஹாஸ்யஜோடியாக விளங்க இடமுண்டு. இப்படத்தில் சாயி - சுப்புலட்சுமியின் நடனங்களும் சில நல்ல பாட்டுக்களும் உள்ளன.

விடுதலை வீரர் வ. உ. சிதம்பரநாதனரின் கதையைப்பள்ளிக்கூட மாணவர்கள் சுருக்கமாக, உருக்கமாக நடித்துக் காட்டும் காட்சியைக் கண்டுணரவாவது பிரசிடெண்ட் பஞ்சாட்சரத்தைப் பார்க்கலாம்.

—மின்மினி

# அஞ்சலி தேவியின் நூருவது படம்



தென்னிந்திய நடிகர் சங்கத்தின் முதலாவது பெண் தலைவராகிய அஞ்சலிதேவி விரைவில் தமது நூருவது படத்தில் நடிப்பார். அவர் இப்படத்தின் மூலம் தமக்குக் கிடைக்கும் பணத்தைப் பொதுநலசேவைக்காக உதவுவார். அவரது முதல்படம் தெலுங்குப்படமான "கொல்லபாமா". அவர் சில இந்திப் படங்களிலும் தோன்றியுள்ளார். அஞ்சலிதேவி தென்னிந்திய நடிகைகளின் முன்னணியில் நிற்கும் ஒருவர். அநுபவம் நிறைந்த அவரது நடிப்பு இன்னும் சோடைபோகாது சோபித்து நிற்பது அவரது நடிப்புத் திறனைப் புலப்படுத்துவதொன்ருகும். விசேஷமாக, கிராமியப் பெண்ணுக நடிப்பதில் அவர் கைதேர்ந்தவர். அவர் மேலும் பல படங்களில் நடித்து மக்களை மகிழச்செய்ய வேண்டுமென்பதே இரசிகர்களின் ஆசை.

## ருஷியாவில் இந்திய நாடகம் 'செல்லப்பிள்ளை'

இந்திய நாடகாசிரியரான பிராக்ஜிதோசாவின் 'செல்லப் பிள்ளை' என்னும் பெயர் கொண்ட நாடகத்தை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் ருஷியாவிலுள்ள டாஷ்கான்ற் என்னும் நகரில் கோர்க்கி நாடக மன்றத்தினரால் செய்யப்பட்டு வருகின்றனவாம். தற்கால இந்திய மக்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் கதையைக் கோர்க்கி நாடகமன்றம் இதுதான் முதல்தடவையாக ருஷிய மக்களுக்கு நடித்துக் காண்பிக்கும்.


மலைநாட்டுப் பகுதிகளில்

ஈழநாடு

விற்பனை செய்வோர்.

1. மீனும்பிகை நியூஸ் ஏஜண்ட்: 235, லோவர் ஸ்றீற், வதுளை.
2. நாகூர் மெய்யக்கண்டன்: 31, மெயின் ஸ்றீற், பண்டாரவளை.
3. வி. எம். அச்சயலிங்கம்: லட்சுமி பவனம், இகாலா, எல்பிட்டியா.
4. எஸ். பி. செல்லமுத்துப்பிள்ளை: 25, அம்பகமுவ ரூேட், கம்பொல.
5. எல். எஸ். சரவணம்: 84, கண்டிகேதா, ஹெலியெலா.
6. சந்திரா ஸ்ரோர்ஸ்: நியூஸ் ஏஜண்ட், மெயின் ஸ்றீற், ஹற்றன்.
7. விமலா ஸ்ரோர்ஸ்: 117, கொழும்பு வீதி, கண்டி.
8. முருகேசப்பிள்ளை: அன் சன்ஸ் பிரிண்டர்ஸ், நாவலப்பிட்டியா.
9. கே. வேலுப்பிள்ளை: 223, மெயின் ஸ்றீற், ரத்தினபுரி.
10. நவா புத்தகசாலை: மெயின் ஸ்றீற், ரக்வான.
11. ஸ்ரீ கணேஸ் ஸ்ரோர்ஸ்: உக்குவல.
12. காரை பி. கணேச சர்மா: 237, பருசலை வீதி, எட்டியாந்தோட்டை.

விளையாட்டுப் பகுதி

# மத்திய கல்லூரி முதலிடம் பெற்றது

## குண்டெறிதலில் யூனியன் கல்லூரி ஜெயராஜசிங்கத்தின் புதிய சாதனை

யாழ்ப்பாணக் கல்லூரிகள் விளையாட்டுச் சங்கத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டி சென்றவாரம் யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெற்றது. 25 கல்லூரிகள் அங்கத்துவம் வகிக்கும் இச் சங்கத்திலிருந்து 19 கல்லூரிகள் பங்குபற்றின. மூன்றுபிரிவுகளாகப் பிரிந்து 313 விளையாட்டுவீரர் கலந்து கொண்டனர். இவ்வருடம் கலந்துகொண்ட எல்லாக் கல்லூரிகளும் புள்ளிகள் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

போட்டியில் அடங்காத கவர்ச்சி அம்சம் பெண்கள் அஞ்சல் ஓட்டம். இதில்போதிய கோஷ்டிகள் கலந்துகொள்ளாததற்கு கொழும்பில் கனிஷ்ட விளையாட்டுப்போட்டி நடைபெற்றது காரணமாயிருக்கலாம். இப்படித் தேதி மோதல்களைத் தவிர்ப்பது நலம். விளையாட்டுக்கழகங்களின் அஞ்சலோட்டமும் வரவேற்கவேண்டிய புதிய அம்சமாகும்.

இறுதிநாளன்றும் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் நடவாமை ஒரு பெருங்குறையாகும். மைதான நிகழ்ச்சிகளில் பெருந்தொகையானோர் கலந்து கொள்வதாலேயே இது நேர்ந்தது. கல்லூரி இல்லப் போட்டிகளில் ஒரு குறைந்தஅளவு சாதனையை எய்தாதவர்களை இப் போட்டியில் கலந்து கொள்ளாமல் தவிர்ப்பது இக் குறையைத் தீர்க்க உதவும்.

பிரதம மத்தியஸ்தம் வகிப்பவர், தாம் கடமையாற்றும் நிகழ்ச்சிகள் பற்றிய விதிகளை நன்கு தெரிந்தவராக இருப்பது அவசியம். புகார் ஏற்படக்கூடிய வகையில் (ஓட்டப்பாதை நிகழ்ச்சிகளில்கூட) உத்தியோகத்தர் அனுபவக் குறைவு, ஆற்றல் குறைவுள்ளவராயிருந்தல், முணுமுணுப்புகளுக்கு இடமளிப்பதுடன் விளையாட்டுகளை நடாத்துவதனால் விளையும் நன்மைகளுக்குக் குந்தகமாயுமமைந்துவிடும்.

சிறந்த சாதனை என்பது புதிய சாதனையல்ல. அகில உலகமும் ஏற்றுக்கொள்ளும், சிறந்த சாதனை நிர்ணயம் பற்றிய புள்ளிவிவர ஏடுகளை அதற்கு உபயோகிக்கலாமே!

யாழ்ப்பாணம் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தலைமை தாங்கினார். டக்டர் திருமதி துரையப்பா பரிசில்களை வழங்கினார்.

### இறுதி முடிவுகள்

**பிரத்தியேக வீரர் :**

கீழ்ப்பிரிவு : எம். ராஜாராம், மகாஜன.

மத்தியபிரிவு : வி. ரி. மகாலிங்கம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

மேற்பிரிவு : எஸ். சோதிராஜா கொக்குவில் இந்துக் கல்லூரி. ரி. தர்மராஜா, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

**சிறந்த சாதனை :**

வி. ஜெயசிங்கம் (யூனியன் கல்லூரி) குண்டெறிதல்.

**அஞ்சலோட்டம் :**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

**இறுதிநிலை :**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 76 புள்ளிகள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 44 புள்ளிகள்.

மகாஜனக் கல்லூரி 31 புள்ளிகள்.

**பெண்கள் அஞ்சலோட்டம் :**

1. யூனியன் கல்லூரி (60 விநாடி).
2. மானிப்பாய் இந்துக் கல்லூரி.
3. வடமராட்சி இந்துக் கல்லூரி.

**கழக அஞ்சலோட்டம் :**

1. அரியாலை யுனைட்டெட் (46·5 விநாடி).
2. பற்றிசியன்ஸ் யுனைட்டெட்.
3. பொலீஸ் யுனைட்டெட்.

**முதலிடம் பெற்றவர்களும் அவர்கள் சாதனைகளும் :**

மேற்பிரிவு : 100 யார் : என். கந்தசாமி-மானிப்பாய் இந்து 11·2 விநாடி, 220 யார் : எஸ். சோதிராசா கொக்குவில் இந்து 25·4 விநாடி, 440 யார் : எஸ். சோதிராசா கொக்குவில் இந்து 56·9 விநாடி, 880 யார் : எஸ். சண்முகநாதன் ஸ்ரீ சோமாஸ்கந்தா 2 நி. 17·1 விநாடி.

ஒருமைல் : எம். பழனியாண்டி உரும்பராய் இந்து 5 நி. 3·4 விநாடி.

120 யார் தடைஓட்டம் : கே. ஜெயரத்தினம் யாழ். மத்திய கல்லூரி 17·2

உயரப்பாய்தல் : என். செகராசசிங்கம் யாழ். மத்திய கல்லூரி 5' 5கால்".

நீளப்பாய்தல் : ஏ. பொன்னம்பலம் யாழ்: இந்து கல்லூரி 19' 8அரை".

தடியூன்றிப்பாய்தல் : ரி. தர்மராசா யாழ். மத்திய கல்லூரி 10' 2முக்கால்"

முப்பாய்ச்சல் : ரி. தர்மராசா யாழ். மத்திய கல்லூரி 42' 4அரை"

குண்டெறிதல் : வீ. ஜெயராசசிங்கம் யூனியன் 38' 9"

தட்டெறிதல் : ரி. டபிள்யூ. ஜெயசீலன் யாழ். மத்திய கல்லூரி 104' 0".

ஈட்டி வீசுதல் : கே. துரைராசா மகாஜன 140' 9".

அஞ்சல் 4×110 : யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 49·2 விநாடி.

அஞ்சல் 4×440 : யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 4 நிமி. 2.3 விநாடி.

**மத்திய பிரிவு :**

100 யார் : ஆர். சாந்தகுணநாதன் உடுப்பிட்டி 11.8 விநாடி.

220 யார் : வீ. கந்தசாமி யூனியன் 27.0 விநாடி.

80 யார் தடையோட்டம் : எம். எஸ. ராமச்சந்திரன் யாழ் மத்திய கல்லூரி 13.5 விநாடி:

உயரப் பாய்தல் : வி. ரி. மகாலிங்கம் யாழ் மத்திய கல்லூரி 5' 2".

நீளப் பாய்தல் : வி. ரி. மகாலிங்கம் 16' 11".

தடியூன்றிப் பாய்தல் : கே. நடேசன் சாவகச்சேரி இந்து 7' 6".

குண்டெறிதல் : வீ. ரி. மகாலிங்கம் யாழ்மத்திய கல்லூரி 31' 7".

தட்டெறிதல் : எம். ராதாகிருஷ்ணன் யாழ் மத்திய கல்லூரி 97' 11".

அஞ்சல் : 4×110 : யாழ் மத்திய கல்லூரி 53.5 விநாடி.

**கீழ்ப்பிரிவு :**

100 யார் : எம். ராஜராம் மகாஜன 12.8 விநாடி.

உயரப்பாய்தல் : எஸ். வாமதேவன் மகாஜன 4' 6".

நீளப்பாய்தல் : எம். ராஜராம் மகாஜன 14' 8".

அஞ்சல் 4×110 : யாழ் மத்திய கல்லூரி 60.2 விநாடி.

# யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் வெற்றி களுத்துறை 4–2 தோல்வி

## கால் இறுதீ ஆட்டத்தில் யாழ்ப்பாணம் கலந்து கொள்ளும்

இலங்கை உதைபந்தாட்டம் கழகம் நடத்தும் மாவட்டப் போட்டியில் களுத்துறைக்குப் யாழ்ப்பாணத்துக்கு மிடையே மறு ஆட்டம் பரமேஸ்வரக் கல்லூரி மைதானத்தில் இவ்வாரம் நடைபெற்றது. தொடக்கத்தில் இருந்தே யாழ்ப்பாண வீரரின் திறமை மேம்பாடுடையதாய்க் காணப்பட்டது. அவர்கள் 4-2 கோல்களினல் ஈட்டிய வெற்றியின்மூலம் கால் இறுதி ஆட்டத்திற் கலந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். 13 — 2 கோல்களினல் நுவரெலியாவைத் தோற்கடித்த கொழும்பு மத்திய வெள்ளைக் கோஷ்டியுடன் இனி ஆடுவார்கள்.

யாழ்ப்பாணத் தலைவர் நவரத்தினராசாவின் விறுவிறுப்பான தாக்குதல், யாழ்ப்பாணத் தாக்குதல் வரிசையில் வலது வெளிப்புறம் பலவீனமாக இருந்ததையும் சமாளிப்பதாய் இருந்தது. யாழ்ப்பாணத்தில் வலது முன்காவலர் வீரருடைய ஆட்டமும் சோபிக்கவில்லை. நவரத்தினராசா அடித்த ஒரு பந்து குறுக்குத் தடியைத் தடவிக்கொண்டு கோலுக்குள் நுழைந்தது. ஆனல் களுத்துறை றஹீம் சில நிமிஷங்களின் பின் கோல்கள் சரிக்குச்சரியாகும்படி செய்துவிட்டார். இடைவேளை வரையும் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

யாழ்ப்பாணம் 4 கோல்களைப் பெற்றபின் அவர்களிடத்தில் களைப்பு தலைதூக்கத் தொடங்கியது. களுத்துறை வீரர் பிங்கோவும் அலோஷியஸும் பெருமுயற்சிசெய்தனர். யாழ்ப்பாணக் கோல்காப்பவர் அலோஷியஸினுடைய திறமைதான் யாழ்ப்பாணத்தைக் காப்பாற்றியது. ஆயினும் ஒரு பந்து மிகவும் கலவரப்பட்ட சூழலில் கோலுக்குள் நுழைந்து களுத்துறை வீரருக்கு உற்சாகமூட்டியது. மேற்கொண்டு கோல்கள் பெற இரு கட்சிகளாலும் முடியவில்லை.

திரு. இ. கனகலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார். ஏகாம்பரமும் பாக்கியராசாவும் உதவி புரிந்தனர்.


மகத்தான 3-வது வாரம்!

இப்பொழுது திரையிடப்படுகிறது!

செல்லமஹால் (கொழும்பு) தினசரி மாலை 6, இரவு 9-30 மணி வின்ஸர் (யாழ்ப்பாணம்)

ஸ்ரீ ராம பக்த ஹநுமான்

(தமிழ்)

எழுத்துக்கு அப்பாற்பட்ட இராமாயணத்தின் அற்புதங்களைக் கண்டுகளியுங்கள்.

கண்ணைக்கவரும் பல வர்ணக்காட்சிகள் நிறைந்த ஓர் அற்புத ஓவியம்!

வெற்றிகரமான 2-வது வாரம்!

கெயிட்டி திரையில்

என். டி. ராமராவ், அஞ்சலிதேவி, ராஜசுலோசன, ரேலங்கி

மற்றும் பலர் திறம்பட நடித்த

பச்சைமலைக் குறத்தி


(தமிழ்)

பார்த்தோர் உள்ளத்தைப் பரவசமூட்டும் பாங்கான திரை ஓவியம்.

மகத்தான **2**-வது வாரம்


முருகன் (ஜிந்துப்பிட்டியா) ஓடியன் (மவுண்ட் லவினியா) ராணி (யாழ்ப்பாணம்) லிபேர்ட்டி (வதுளை) ஜோதி (திருக்கோணமலை)

முதலிய படமாளிகைகளிற் நூற்றுக்கணக்கான
மக்கள் கண்டு களிகொள்கின்றனர்!



எஸ். எஸ். ராஜேந்திரன்
பி. சரோஜாதேவி
எஸ். வி. சகஸ்ரநாமம்
டி. ஆர். ராமச்சந்திரன்
வி. ஆர். ராஜகோபால்
டி. பாலசுப்பிரமணியம்

மற்றும் பலர்
திறம்பட நடித்த



டைரக்ஷன்: பீம்சிங்

நடனம்: சாயி - சுப்புலெட்சுமி

சாவித்திரி பிக்சர்ஸ்

# பிரஸிடெண்ட் பஞ்சாட்சரம்

பின்னணி:
டி. எம். சௌந்தரராஜன்
எஸ். ஸி. கிருஷ்ணன்
எம். எல். வசந்தகுமாரி
பி. லீலா பி. சுசீலா

"சபாஷ் மீனு" வுக்குப்பின் தமிழ்த்திரையில்
சிறந்த ஹாஸ்ய விருந்தாக ஒளி வீசும்
இப்படத்தைப் பார்க்கத் தவறுதீர்கள்!

சங்கீதம்: ஜி. ராமநாதன்

---

வெற்றிகரமான **2**-வது வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித் தெரு) வெலிங்டன் - மனோகரா (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ஸ்ரீ கிருஷ்ணு (திருக்கோணமலை) விஜிதா (மஸ்கேலியா) மொடர்ன் (பதுளை) ஜோதி (களகா)



★ சிவாஜி கணேசன்
★ என். டி. ராமராவ்
★ டி. கே. பகவதி
★ வி. நாகையா
★ பி. வி. நரசிம்மபாரதி
★ வி. கே. ராமசாமி
★ ஓ. ஏ. கே. தேவர்
★ பத்மினி
★ ஜீ. வரலெக்ஷ்மி
★ எம். என். ராஜம்
★ சீ. டி. ராஜகாந்தம்

மற்றும் பலர் நடித்த




டைரக்ஷன்: கே. சோமு
வசனம்: ஏ. பி. நாகராஜன்
பாடல்கள்: மருதகாசி
சங்கீதம்: கே. வி. மகாதேவன்
தயாரிப்பு: எம். ஏ. வேணு
ஸ்ருடியோ: ரத்னு (சேலம்)

# சம்பூர்ண ராமாயணம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8-ந் திகதி வெளியிடப்பெற்றது.